# ரா.ப.வின் கட்டுரைகள்

நல்ல மானுடம் விதைப்போம்

அநீதிகள் யாவையும் குழிதோண்டிப் புதைப்போம்!



JPL
C11954

ரா.ப.அரூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரா.ப.வின் கட்டுரைகள்

ரா.ப.அரூஸ்

252649

**Raapa International Publication**

252649 CC

Donated by National Library &
Documentation Services Board

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரா.ப.வின் கட்டுரைகள்

**ரா.ப.அரூஸ்**


பதிப்புரிமை - ஆசிரியருக்கு
முதற்பதிப்பு - டிசம்பர் 2014
பிரதிகள் - 1000
வெளியீடு - ரா.ப. இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிட்டட்
த.பெ.இல:21, தெஹிவளை,
இலங்கை.
தொ.பே: + 94 774328525
வடிவமைப்பும்
அச்சுப்பதிப்பும் - ரா.ப. இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிட்டட்.
விலை - 350.00


raapavin katturaihal

**R.F. Arooz**


Copy Right - Author
First Edition - December 2014
No. of Copies - 1000
Published by - Raapa International (Pvt) Ltd.
P.O.Box : 21, Dehiwala
Sri Lanka.
Tel : + 94 774328525

Designing &
Printing - Raapa International (Pvt) Ltd., Dehiwala, Sri Lanka.
Price - 350.00
ISBN - 978-955-52299-6-8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# சமர்ப்பணம்

எனக்கு அ,ஆ,இ,ஈ யும் A,B,C,D யும் கற்றுத் தந்த
எனது பாட்டனார் (எனது தாயின் தந்தை)
முஹம்மது புஹாரி அவர்களுக்கு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே உள்ளவை

அறிமுகவுரை

அணிந்துரைகள்

முகவுரை

01/01 டெல்லி மாணவியின் மரணம் எமக்கு விட்டுச்சென்றுள்ள செய்தி

02/11 தமிழ் தலைமைகளின் அரசியல் நாகரிகமும் முஸ்லிம் தலைமைகளின் பேரினவாதத் தாவல்களும்

03/16 மக்கள் வழங்கிய ஆணை பூனையாகிப் போன கதை

04/21 பெருகிவரும் இளவயதுத் தவறுகளுக்கு யார் காரணம்...?

05/28 "அதுவும் சரிதான், இதுவும் பிழையில்லை"

06/34 இலங்கைத் தமிழர்கள்: முள்ளிவாய்க்காலுக்கு முன்னரும் பின்னரும்

07/39 கறுப்புச் சந்தை வியாபாரத்தை திறைசேரி வெள்ளையாக்கியுள்ளது

08/45 முஸ்லிம் காங்கிரஸ்: ஆவேசப்படுதலும் அடங்கிப்போதலும்

09/50 தென்கிழக்குப் பல்கலைக் கழகப் பொறியியல் பீடம் சாதிக்கப்போவது என்ன...?

10/57 தற்கொலைக்கே வித்திடும் நாட்டின் தரமற்ற பொருளாதாரம்

11/64 தமிழ் பேசுவோர் உறவு தளைத்தோங்க வழி செய்வோம்!

12/70 ஆசிரிய தலையங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# ரா.ப.அரூஸ் என்றால்...

ஏ.கே.முஹம்மது நஸ்மி
மருத்துவ பீடம் - 4வது வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நல்ல மானுடம் குறித்தே சதா சிந்தித்துக் கொண்டும் அதை உருவாக்குவதற்கான தன்னாலியன்ற முயற்சிகளை ஒவ்வொரு கணமும் செய்து கொண்டுமிருக்கும் ஒரு வித்தியாசமான ஆளுமை.

சடத்துவ உலகின் சாதாரணமான விதிகளுக்குப் பின்னால் ஓடாமல் யதார்த்த உலகின் நடைமுறைகள் பற்றியே அதிகம் பேசிக்கொண்டும் எழுதிக் கொண்டுமிருப்பவர், அப்படியே வாழ்ந்தும் வருபவர்.

சாதாரணமானவர்களின் பார்வையில் சாதாரணமாய்த் தெரியும்
எத்தனையோ விடயங்களை பாரதூரமாகப் பார்ப்பவர்,
சாதாரணமானவர்களின் பார்வையில் பாரதூரமாய்த் தெரியும்
எத்தனையோ விடங்களைச் சாதாரணமாய்ப் பார்ப்பவர்.

சிந்திக்கக் கூடியயோர் மத்தியில் அதிகமாய்ப் பேச விரும்புபவர்,
சிந்திக்கச் சிரமப்படுவோர் மத்தியில் கொஞ்சம் கூடப் பேசாமலிருப்பவர்.
அறிவிலிகளைப் பொறுமையால் வெல்பவர்,
அறியாமையில் பேசுவோரை காலத்திடம் ஒப்படைத்துவிட்டுச் சிரிப்பவர்.

விமர்சனங்கள் பற்றி விசாரித்தால் -
"மனிதர்களுக்காய் வாழ்பவன் விமர்சனங்கள் கண்டு விழுந்துவிடுகிறான்,
மறுமையை நம்பி வாழ்பவன் பிறர் விழுத்தாட்டினாலும்
எழுந்துவிடுகிறான். நான் இரண்டாவது ரகத்திலுள்ளவன்" என
இலேசாகச் சொல்பவர்.

சரியெனப் பட்டதைத் துணிவுடன் செய்யும் தைரியசாலி.
சவால்களைக் கண்டு பயந்தோடுவது இஸ்லாமியனின் பண்பல்ல என
இறுமாப்புடன் சொல்பவர். சாதாரணமானவர்களால் சாத்தியப்
படாதவைகளையும் சாத்தியமாக்கிக் காட்டும் சாணக்கியர்.

+++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலியான பாராட்டுக்களுக்கு அப்பால்...

பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ்
பேராதனைப் பல்கலைக் கழகம்

**ரா.ப.** அருஸின் 'கிழக்கு' பத்திரிகைக் கட்டுரைகளில் புதிய தலைமுறை இளைஞர்கள் பிரச்சினைகளை அணுகும் தீவிரம் தெளிவாகத் தென்படுகிறது. பிராந்தியப் பத்திரிகை ஒன்றில் விமர்சனப் பாங்கில் பல்வேறு பிரச்சினைகளை அருஸ் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

பத்திரிகைகள் செய்தித் தாள்கள் மாத்திரமல்ல. செய்தி ஆய்வுகளும் செய்தி விமர்சனங்களும்தான் பத்திரிகைகளைப் பத்திரிகை நிலைக்கு உயர்த்துகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயக நாடொன்றில் பத்திரிகையின் பொறுப்பு அதன் விமர்சனப் பார்வையிலும் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிப்பதிலும்தான் தங்கியுள்ளது.
அக்குரனையிலிருந்து வெளிவரும் ஒமர் ஷரீப் குழுவினரின் "நியூஸ் வீவ்", "கிழக்கு" என்பன பிராந்திய பத்திரிகைகளாகும். பிராந்திய பத்திரிகைகள் தேசிய பத்திரிகைகள் நிறைவு செய்யாத அல்லது செய்யத் தயங்குகின்ற இடைவெளிகளை நிரப்பக் கூடியவை என்பதை இப்பத்திரிகை முயற்சிகள் எமக்கு நன்கு உணர்த்துகின்றன.

இந்த வகையில் "கிழக்குப்" பத்திரிகை எமது கவனத்தைக் கவருகின்றது. பிராந்திய மக்களுக்குத் தேவையான செய்திகளையும் அரசியல் ரீதியான அறிவூட்டல்களையும் அது செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்தக் களத்தை அருஸ் நன்கு பயன்படுத்தியுள்ளார். பிராந்திய வாசகர்களை விளிப்படையச் செய்யும் பல தலைப்புக்களில் அவரது விவரண எழுத்துக்கள் அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

போலியான பாராட்டுக்களுக்கு அப்பால் அரசியல் தலைவர்களையும் அரசியல் பிரச்சினைகளையும் நேரடியான விமர்சனத்துக்கு உள்ளாக்கும் அருஸின் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை. அது அவருடைய கருத்து என்பதை விட அதுதான் உண்மையான பத்திரிகை தருமமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் என்பவை பொழுது போக்கிற்காக வாசிக்கும் கற்பனைக் கதைகள் அல்ல. அவற்றின் பொறுப்பு ஆழமானது. ஜனநாயகத்தையும் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவற்கு மக்களையும் தயார்படுத்தத் தெரியாத ஒரு பத்திரிகை ஆசிரியனும், ஒரு பத்திரிகையும் இருப்பதும் கருகிச் சருகாவதும் ஒன்றுதான்.

பெரிய பத்திரிகைகள் கூட திக்கித்திணறி அல்லது பகிரங்க பாதபூஜைகளில் வீழ்ந்து கிடக்கும் போது சின்னஞ் சிறு இதழ்கள் தனது சினத்தையும் தார்மீக உணர்வையும் வெளிப்படுத்த முன்வருவது ஜனநாயகத்தை பலப்படுத்தும் தவிர்க்க முடியாத சக்தி என்று கூறத் தோன்றுகிறது.

சிறுபான்மை மக்களின் உணர்வுகள் அவர்களின் பிரச்சினைகள் குறிப்பாக தமிழ், முஸ்லிம் உறவு, அரசியல் ரீதியில் அது பலப்படுத்தப்படுவதின் தேவை என்பவற்றை இத்தொகுப்பிலுள்ள கட்டுரைகள் நேரடியாகவும் தெளிவாகவும் கூறுகின்றன. சிறுபான்மையினரின் வெற்றி சிறுபான்மை இனங்களுக்கிடையிலான ஒற்றுமையினால் சாதிக்கப்படலாம் என்ற அருஸின் நம்பிக்கை அந்த பிராந்திய மக்களின் பொது உணர்வின் வெளிப்பாடாகவே எனக்குத் தெரிகிறது. சிறுபான்மை அரசியல் தலைவர்கள் தங்களது வங்குரோத்து அரசியல் திருகுதாளங்களால் மக்களை இரு கூறாகப் பிரிக்கும் பாவச் செயலைக் கைவிட வேண்டும் என்பதே கிழக்குப் பத்திரிகையின் குரலாக எம்மால் உணர முடிகிறது. அருஸின் சில கட்டுரைகளில் இக்கருத்துக்கள் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

"...வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல நூற்றாண்டு காலமாக தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடனேயே வாழ்ந்து வந்துள்ளமை வரலாற்றுப் பதிவுகள். அவை அப்படியே பேணப்படவேண்டும் என்பதற்காகவும் சிங்களப் பேரினவாத அரசியலிலிருந்து தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இந்த ஒற்றுமை நிலைக்கவேண்டும் என்பதற்காகவும் திடமாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் முன்னெடுப்புக்களையும் அவை புறந்தள்ளப்பட்ட வரலாற்றையும் இன்றைய முஸ்லிம் சமூகத்தினர் கட்டாயம் புரிந்துகொள்ளவேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒற்றுமையை வலியுறுத்தும் பல எழுத்து வடிவங்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

தனிக்கட்சி அமைத்து முஸ்லிம்களை கரை சேர்ப்பதாக வாக்களித்து ஆனால் திசை மாறித்திரியும் முஸ்லிம் கட்சிகளையும் அதன் தலைமைத்துவங்களையும் சாடும் அரூஸின் விமர்சன ஓட்டம் அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்திலிருந்து எழும் இளைஞர்களின் பொது விமர்சனக் குரலின் அடையாளமாகக் கொள்ள முடியும்.

உதாரணத்திற்கு அரூஸின் கீழ் வரும் வரிகளைப் பார்ப்போம்,

"முஸ்லிம் மக்கள் எதையோ நேசிக்க இந்த முஸ்லிம் தலைமைகள் இன்னொன்றை நேசித்து வருகின்றமை வரலாறு நெடுகிலும் பதிவுசெய்யப்பட்டுக்கொண்டே வருகின்றது. சிலரைத் தவிர எந்த முஸ்லிம் தலைமையிடமும் கொள்கைப் பிடிப்பான, சோரம் போகாத அரசியலைக் காண முடியவில்லை"

மக்களின் அரசியல் உணர்வுகளைத் தவறாக மதிப்பிடுவது ஆபத்தானது என்பதற்குப் பல அறிகுறிகள் இன்று நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஊவா மாகாணசபைத் தேர்தலில் இதனைத் தெட்டத்தெளிவாக (முஸ்லிம்) மக்கள் வெளிப்படுத்தினர். இன்னும் 3000 வாக்குகள் இருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் என்று கூறியதைத் தவிர தோல்வியின் அதிரடித் தாக்கத்தை தனிக்கட்சி முஸ்லிம் தலைமைத்துவங்களால் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கும் என்று நான் நம்பவில்லை.

மக்கள், தோல்விக்குக் காரணம் கேட்கவும் இல்லை - ஏன் வெற்றி பெற வில்லை என்று கவலை தெரிவிக்கவுமில்லை. மக்களுக்கு ஒரு குறிக்கோள் இருந்தது. அது எல்லா மக்களுக்கும் இருந்தது. அதில் முஸ்லிம் மக்களும் பங்கு கொண்டனர். ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் பொதுவேலைத்திட்டத்துக்கு முதற்புள்ளடி இட்டு அதற்கு ஆசிர்வாதம் வழங்கிய காட்சி ஊவாவில்தான் ஆரம்பமானது. மக்களின் ஜனநாயக உணர்வுகள் எவ்வளவு பெரிய இரும்புக் கரங்களையும் தகர்த்தெறியும் என்பதற்கான சான்றுகள் நாட்டில் நடந்த வண்ணம் உளளன. ஊவாவில் முஸ்லிம்கள் தமது விளிப்புணர்வை வெளிப்படுத்தியது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரூஸ் தனது சொந்தக் கருத்தாகவோ அல்லது முஸ்லிம்களின் மனக்குமுறலை வெளிப்படுத்தும் விதத்திலோ முஸ்லிம் கட்சிகளின் அண்மைக்கால ஜனநாயக சார்பற்ற செயல்பாடுகள் பலவற்றைப் பற்றி இத்தொகுப்பில் கூறியுள்ளார். இவை முஸ்லிம் தலைமைகளின் கவனத்தைப் பெறும் என்று நான் நம்புகிறேன். பின்வரும் உதாரணத்தையும் இங்கு நோக்கலாம்.

"அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதாக பேராளர் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றிய முஸ்லிம் காங்கிரஸ், அதிகாரப் பகிர்வுக்கு சாதகமான தீர்ப்பு வழங்கியதற்காக பழிவாங்கப்பட்ட பிரதம நீதியரசர் கலாநிதி சிராணி விடயத்தில் நடந்துகொண்ட விதமானது ரொம்பவும் கேவலமானது. இலங்கையின் நீதித்துறை துவம்சம் செய்யப்பட்டுக்கொண்டிருப்பதனை நீதியமைச்சராய் இருந்தும் எதிர்ப்பதற்கு வலிமையில்லாமல் போய்விட்டது தலைவர் ஹக்கீம் அவர்களுக்கு."

கிழக்குப் பத்திரிகை கிழக்குப் பிராந்திய மக்களின் அரசியல் விளிப்புணர்வுக்கு அண்மைக்காலமாக சிந்தனை வடிவில் வழங்கி வந்த பங்களிப்பினை அரூஸின் கட்டுரைகள் நமக்கு உணர்த்துகின்றன. இலங்கை அரசியல், பிராந்திய அரசியல், முஸ்லிம் அரசியல், சிறுபான்மையினருக்கு எதிரான பேரினவாதம் என்பவற்றோடு டில்லியில் நிகழ்ந்த காமுகர்களின் கூட்டு வன்புணர்ச்சி குற்றச்செயல் உட்பட பல சமகால பிரச்சினைகளை அரூஸ் தனது பாணியில் இத்தொகுப்பில் விவரித்துள்ளார்.

சமகாலப் பிரச்சினைகளில் இளைஞர்களின் கவனம் திரும்பி இருப்பதற்கு இவரது எழுத்துக்கள் நல்ல சான்றுகளாகும். மேலும் இளம் எழுத்தாளர்களைப் பத்திரிகை எழுத்துத் துறையில் ஊக்குவிப்பதற்கும் இவரது முயற்சிகள் உற்சாகம் அளிக்கும் என்று நான் நம்புகின்றேன். அரூஸின் எழுத்துப் பணிகள் மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

+++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் மீது அக்கறை கொண்டவராக...

பொறியியலாளர் எம்.எம்.அப்துர் ரஹ்மான்
தலைவர், **BCAS Campus.**

இன்றைய உலகில் எல்லாத்துறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் தொடர்புபட்டுக்கொண்டும் இருக்கும் விடயங்களாக ஊடகங்களும் எழுத்துப் பணிகளும் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஆரம்ப காலத்திலிருந்தே இவ்விடயங்கள் மனித வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்று வந்தவைகளாக இருந்தாலும் தொழில் நுட்ப வளர்ச்சி இவைகளுக்கு இன்று உலகில் முக்கிய இடத்தினை வழங்கியிருக்கிறது என்று துணிந்து கூறலாம்.

ஆனால் காலவோட்டத்தில் எல்லாமே மாறிக்கொண்டிருப்பதைப் போல ஊடகப் பணி மற்றும் எழுத்துப் பணி என்பனவும் தமது தார்மீகப் பொறுப்பிலிருந்து விலகி சமூக அக்கறை எனும் விடயத்தைக் கடந்து சுயநலங்கள் கலந்தனவாக ஒரு புறம் சென்றுகொண்டிருப்பதனையும் உணரக் கூடியதாகவுள்ளது. ஊடகம் என்கின்ற பொதுமைப்பாடான கருவியானது இவ்வாறாக மக்களைத் தவறாக வழிநடாத்த ஒரு போதும் துணைநிற்கக் கூடாது. அவை உண்மையிலேயே ரொம்பவும் ஆபத்தானவை.

ஆனால் ஊடகம் மற்றும் எழுத்துப் பணிகளை சுயநலங்களைக் கடந்து சமூக அக்கறை என்கின்ற நன்னோக்கத்தோடு நேர்மையாக முன்னெடுக்கின்ற நிலைமைகளும் ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டுதானிருக்கின்றன என்பது ஆறுதலளிக்கும் செய்தியாகும். அந்த வகையில் இளைஞர் ரா.ப.அரூஸினால் முன்னெடுக்கப்படுகின்ற பணிகளும் சமூக அக்கறை சார்ந்தவைகளாகவே அவதானிக்க முடிகின்றன, அல்ஹம்துலில்லாஹ்!

எழுத்துப் பணிகள் என்று ஆரம்பிக்கும் பெரும்பாலானவர்கள் பத்திரிகைளில் பெயர் பதித்தல் எனும் இலக்கினை அடைவதையே முக்கிய விடயமாகக் கொண்டு தொழிற்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதை எழுதுகிறோம், எதற்காக எழுதுகிறோம், இது சமூகத்திற்கு எந்த வகையில் பயன் மிக்கதாய் அமையும், என்ன மாதிரியான மாற்றத்தை உண்டு பண்ணும், இதனை உள்வாங்கி சிந்திக்க யார் தயாராகவிருக்கிறார்கள் போன்ற எந்த இலக்குகளுமே இன்றி மேற்கொள்ளப்படுகின்ற எழுத்துப் பணிகள்தான் இன்று நிரம்பிக் கிடக்கின்றன. ஆனால் ரா.ப.அரூஸ் இவ்விடயங்களிலிருந்து வேறுபட்டு மானுடச் சமூகத்தின் மீதும், தான் வாழுகின்ற தேசத்தின் எழுச்சி மீதும் அக்கறை கொண்டு தனது எழுத்துப் பணியினைத் தொடர்வதை உணர முடிகிறது.

இத்தொகுப்பிலுள்ள அவரது ஒவ்வொரு ஆக்கமும் மனித சமூகத்தின் மீதான கூரிய பார்வையாகவும் தேசத்தின் நிகழ்காலம் குறித்த ஆழமான ஆய்வாகவும் அமைகிறது. இன்று முன்னரை விடவும் எத்தனையோ விடயங்களில் மனிதன் கொடிகட்டிப் பறந்தாலும் பண்பாடு மற்றும் ஒழுக்கம் சார் விடயங்களில் அதாளபாதாளத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறான். இந்நிலைமை குறித்த கவலை ரா.ப.அரூஸின் எழுத்துக்களில் ஆவேசமாகப் பரிணமிக்கின்றன. இந்தப் பண்பாட்டு வீழ்ச்சியிலிருந்து மனித இனத்தைக் காப்பதற்கு ஏதாவது செய்தேயாக வேண்டும் என்கின்ற துடிப்பை அவரது ஒவ்வொரு கட்டுரையும் அழகாகக் கட்டியம் கூறுகின்றது.

இலங்கையில் சமகால அரசியல் நிலவரம் குறித்த இவரது நேர்மையான பார்வை சிலாகித்துச் சொல்லக் கூடிய ஒரு விடயமாகவே இருக்கிறது. சிறுபான்மை மக்களின் அரசியல் நகர்வுகள் குறித்தும் ஒட்டு மொத்த தேசத்தின் எழுச்சி குறித்தும் இவர் கொண்டுள்ள கருத்துக்கள் அவதானத்திற்குட்படுத்தப்பட வேண்டியவைகள் என்றே கருதுகிறேன்.

இவரது எழுத்துப்பணி மென்மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

+++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் உந்துதலைத் தரும் படைப்பு

ரவூப் ஸெய்ன்
தலைவர், **Centre for Development Studies**

***ரா.ப.*** *அரூஸ் 21 வயதில் இருபத்தியொரு நூல்களை எழுதி எழுத்துலகில் சாதனை படைத்தவர். அவரது புதிய நூல் கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவருகின்றது. வெவ்வேறு காலப் பிரிவில் பல்வேறு தலைப்புக்களில் அவர் எழுதிய கட்டுரைகளே இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. 11 பிரதான கட்டுரைகளோடு ஆசிரியர் தலையங்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றை ஒருசேரப் படிக்கும்போது, நமக்கு அவை ஏற்படுத்தும் அதிர்வுகள் அலாதியானவை.*

*கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என பல்வேறு துறைகளிலும் மிகுந்த முனைப்புடன் ஈடுபட்டு வரும் அரூஸ் கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது கவனிப்புக்குரியது. அந்த மண்ணின் தாக்கம் அவரது எழுத்தில் எல்லாக் கோணங்களிலும் இழையோடுகின்றது. Bizworld எனும் கவர்ச்சிகரமான இதழை சில காலம் தனித்து நின்று வெளியிட்டவர் அரூஸ். எனினும் நமது சமூகப் பரப்பிலுள்ள வாசிப்புத் தேக்கம் அவரது முயற்சியை முடக்கி விட்டமை துரதிஷ்டமானதே.*

*அரூஸ் வெறும் இலக்கிய எழுத்தோடு மட்டும் தனது அறிவுத் துறைப் பங்களிப்பை சுருக்கிக் கொள்ளவில்லை. சமூகம், கல்வி, கலாசாரம், அரசியல், பண்பாடு என அவரது சிந்திப்பும் செயல்பாடும் வியாபித்து நிற்கின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் அனேகமானவை, சமூக அரசியல் கொந்தளிப்புக்களையும் நெருக்கடிகளையும் குவிமையப்படுத்துகின்றன. அரூஸின் சமூக அக்கறையும் பற்றுதலும் அவற்றில் தூக்கலாகவே வெளிப்பட்டு நிற்கின்றன. நமது உணர்வுகளைக் கிளறச் செய்து, செயல் உந்துதலைத் தருகின்றன.*

*எழுத்துடன் மட்டுமன்றி எழுத்தாளர்களுடனும் நெருக்கமாக உறவாடி வரும் அரூஸ், தென்னிந்திய எழுத்தாளர், பிரபல்யங்கள் பலரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகச் சந்தித்து அவர்களது நன்மதிப்பையும் ஊக்கத்தையும் பாராட்டையும் பெற்றவர். எத்தகைய சொல்லும் எழுத்தாக வேண்டும், எத்தகைய எழுத்தும் நூலாக வேண்டும். அதுவே நிலைபேறுடையது. காலத்தை வென்று நீடிக்கக் கூடியது.

இப்பின்புலத்தில் ரா.ப. அரூஸின் எழுத்தோவியங்கள் ஒரு கனதியான நூலாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்காலத்தில் இன்னும் பல பெறுமதியான நூல்களை அவர் வெளியிட அல்லாஹ் அவருக்கு முழுமையான மனத் தயாரிப்பையும் துணிவையும் தர வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

+++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மானுடம் மலர வேண்டும்!

ரா.ப.அரூஸ்

நமது மானுட இனம் இன்று முன்னரை விடவும் ஏராளமான விடயங்களில் வெற்றிகண்டிருக்கின்றது. இன்னுமின்னும் எத்தனையோ வெற்றிகளுக்காக முயற்சி செய்துகொண்டுமிருக்கின்றது. ஆனால் நாம் பண்பாட்டு ரீதியாக பாரிய வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். இவை இன்று ஆங்காங்கே உணரப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும் அந்த வீழ்ச்சியிலிருந்து எமது மானுடத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு பொது வேலைத்திட்டம் இன்னும் இடைவெளியாக இருப்பதாகவே நான் உணருகின்றேன்.

மனித இனத்தின் பண்பாடு செழிப்பதற்கு கல்வியே உரமிட வேண்டும். ஆனால் இன்று நாம் கொண்டாடுகிற கல்வி எதை நோக்கியதாய் நகர்ந்து கொண்டிருக்கின்றது...? எந்தத் துறைகளை எடுத்தாலும் அது சார்ந்த தொழிலைப் பெற்றுக்கொள்வதும் அதனாலான பொருளாதார ஈட்டலுமே இன்றைய எமது கல்வியின் முழு முதல் நோக்கமாக இருந்துகொண்டிருக்கின்றது. ஆனால் எந்தத் துறையில் கற்றாலும் எல்லாத் துறையிலும் கல்வி என்பது எமது பண்பாட்டை விருத்தி செய்ய வேண்டும் என்கின்ற பிரதான இலக்கு இன்று இழப்பாகவே இருக்கின்றது.

இதன் விளைவுகளாகவே இன்று எமது சமூகத்தில் கற்றோர் மத்தியிலும் கூட நல்லொழுக்கம் எனும் விடயம் ஓரங்கட்டப்படுகின்றது. நற்பண்பாடு எனும் விடயம் பாழடைந்து கிடக்கின்றது. உலகிலுள்ள கற்கைகளில் ஒழுக்கம் மற்றும் பண்பாடு குறித்தே முழுமையாக வழிகாட்டுகின்ற சமயக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்வோர்களில் சிலர் கூட இன்று மானுடத்தை மாசு படுத்திக்கொண்டிருப்பதனைக் கண்கூடாகக் காணமுடிகிறது. போட்டி - பொறாமை என்றும் துஷ்பிரயோகங்கள் என்றும் மதத் தலைவர்களின் பண்பாட்டு வீழ்ச்சிகளையும் ஆங்காங்கே நேரடியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் போலவே அரசியல் எனும் விடயமும் இன்று ஆரோக்கியமிழந்துள்ளது. அரசியலின் தாய் மண் எனக் கருதப்படுகின்ற கிரேக்க காலத்தில் இருந்து இன்று வரை "நல்ல குடி மகனாக இருத்தல்" என்பது முக்கியமான அரசியல் எண்ணக்கருவாக இருந்துகொண்டிருக்கின்றது. ஆனால் இன்று எந்த அரசியல்வாதி நல்ல குடிமகனாக இருக்கிறார்? அல்லது நல்ல குடிமக்களை உருவாக்கு அரசியல் தலைவர்களால் என்ன பிரயத்தனம் மேற்கொள்ளப்படுகின்றது? என்பவற்றை எண்ணிப் பார்க்கும் போது எமது மானுடத்தின் தோல்விதான் பறைசாற்றப்படுகிறது.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் இன்று ஊழல் மோசடிகளுக்கும், சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கான கவசமுமாகவே அரசியல் பயன்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றது. சூதாட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், கறுப்புச் சந்தை வியாபாரங்களை ஆமோதித்தல், சிகப்பு விளக்கு பகுதிகளுக்கு இடமொதுக்குதல் போன்ற விடயங்களுக்குத்தான் எமது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பயன்படுத்தப் படுகிறது. மேலும் அரசியல் பலம் எவனிடமிருக்கிறதோ அவனால்த்தான் இங்கு பகிரங்கமாகக் குற்றச் செயல்களை மேற்கொள்ள முடிகிறது. எமது அரசியல் இவ்வாறு நகர்ந்துகொண்டிருக்க, "நல்ல குடி மகனாக இருத்தல்" எனும் அரசியல் எண்ணக்கருவின் பிரயோகத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்...?

ஆகவே எமது பண்பாட்டு விருத்தியில் பங்களிப்புச் செய்யக் கூடியவை என்று காலங்காலமாக நாம் கருதி வருகின்ற கல்வி மற்றும் அரசியல் என்கின்ற இரு விடயங்களும் இன்று தடம் புரண்டுள்ளமையே எமது மானுட இனம் பண்பாட்டு ரீதியான தோல்விப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதற்கான முக்கிய காரணமாகும்.

எனவே இவ்விடயங்கள் குறித்த தொடர்ச்சியான விளிப்புணர்வு வேலைத் திட்டங்கள் இன்றைய அத்தியவசியமான தேவையாயிருக்கின்றன. அன்றாடம் ஆங்காங்கே எழுகின்ற பிரச்சினைகளுக்கெதிரான கோசங்கள் மாத்திரம் எமக்கு நிரந்தரமான தீர்வுகளைத் தந்துவிடப் போவதில்லை. மேற்சொன்ன அடிப்படை விடயங்கள் பற்றிய மாற்றங்கள் குறித்து எமது கவனத்தைக் குவிப்பதோடு அதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபடத் தொடங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எமது பிரச்சினைகளல்ல என்று எவரும் இந்த விடயங்களை அவ்வளவு சாதாரணமாக விட்டுவிட முடியாது. ஏனெனில் மனிதன் தனித்து வாழ முடியாதவன். சமூகமாகவே அவன் வாழவேண்டியிருக்கிறது. அந்த வகையில் மானுடச் சமூகத்தைப் பீடித்திருக்கும் இந்தப் பண்பாட்டு வீழ்ச்சி எனும் நோயானது என்றைக்கோ ஒரு நாள் நமது ஒவ்வொருவரது நடு வீட்டுக்குள்ளும் வந்து நிற்கும்.

எங்கேயோ ஒரு பிள்ளை பண்பாட்டுப் பிறழ்வினால் பாரிய குற்றத்தில் ஈடுபட்டிருப்பதாக நாமறிந்தால் அது அடுத்தவர் சமாச்சாரம் என கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. அவ்வாறான பிறழ்விலிருந்து நமது பிள்ளையைக் காப்பதற்கான திட்டமிடல்களை அன்றிலிருந்தே மேற்கொள்ள வேண்டும். அதுபோலவே ஒரு அரசியல் தலைவன் ஊழலில் ஊறிக்கிடக்கிறான் என்றால் அதனால் நமக்கெந்த நேரடிப் பாதிப்புமில்லை என்று பராமுகமாக இருந்துவிட முடியாது. ஏனெனில் எமது தேசத்தின் வீழ்ச்சி எமது வீழ்ச்சியேயாகும். எமது தேசத்தின் எழுச்சியே எமது எழுச்சியாகும்.

எனவே நாமனைவரும் நாட்டின் நல்ல பிரஜையாக இருக்க முயற்சி செய்வதோடு நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்கான பங்களிப்புக்களையும் வழங்க வேண்டும். அன்றேல் "மனிதன் இப்படியெல்லாம் செய்வானா...?" என்கின்ற அதிர்ச்சி, "மனிதன் எப்படியும் செய்வான்..." என்கின்ற நடைமுறையாக மாறிவிடும்!

+++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டெல்லி மாணவியின் மரணம் எமக்கு விட்டுச் சென்றுள்ள செய்தி

எமது அண்டை நாட்டின் தலைநகரில் பேருந்தில் வைத்து, 6 பேரினால் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டமையினால் 23 வயதான மருத்துவக் கல்லூரி மாணவி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக மரணத்தைத் தழுவிக்கொண்டார். இந்த மரணத்தைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும், பெண்ணுரிமைக் கோசங்களும், அரசியல்வாதிகள் மற்றும் சமயவாதிகளின் கருத்துக்களும் வெளிக்கிளம்பிக்கொண்டிருக்க அந்த மரணம் எமது ஒட்டு மொத்த மனித சமூகத்திற்கும் விட்டுச்சென்றுள்ள செய்தி குறித்த ஒரு விசாலப்பட்ட பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 21.01.2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் தலைநகரைத் தலைகுனியச் செய்த 2012, டிசம்பர் 16 சம்பவம் மனித குலத்தையே அதிரச் செய்த ஒரு கோரமாக வரலாற்றில் பதிவாகிவிட்டது. இந்தச் சம்பவமானது சாதாரணங்கள் என்று இந்த நாகரிக உலகில் பராமுகமாக விடப்பட்டிருந்த பல விடயங்களை மீள் பரிசீலனை செய்யவைத்திருக்கிறது.

டெல்லியைச் சேர்ந்த பத்ரிசிங் பாண்டே(53) டெல்லி விமான நிலையத்தில் சரக்கு ஏற்றி இறக்கும் தொழிலாளியாகப் பணிபுரிபவர். அவரது மனைவி ஆஷா(46), இவர்களுக்கு மூன்று குழந்தைகள். கவுரவ் சிங்(20), சவுரவ் சிங்(15) என இரண்டு மகன்களும் ஒரு பெண் பிள்ளையும். ஜோதி சிங் பாண்டே எனும் 23 வயதேயான அந்தப் பெண் பிள்ளைதான் ஓடும் பேருந்தில் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு உயிரிழந்து உலகை உலுக்கியவர்.

ஜோதி மருத்துவக் கல்லூரியொன்றில் பிசியோதெரபி கற்கும் மாணவி. டெல்லியின் தெற்குப் புறநகரான முனிர்காலிலுள்ள மல்டிகொம்ப்ளக்சில் பின்னேர சினிமா பார்த்துவிட்டு தனது காதலனுடன் பஸ்ஸிற்காகக் காத்திருந்தாள். இரவு 9.45 இற்கு அங்கு வந்த வெள்ளை நிறப்பேரூந்தைக் கண்டு "துவாரகா ரோடு போகுமா...?" என பஸ்ஸிலிருந்த ராம் சிங்கை நோக்கி ஜோதி கேட்கிறாள். "போகும்... ஏறு... ஏறு..." என்கிறான் ராம் சிங். ஜோதியும் அவளது காதலனும் பஸ்ஸில் ஏறுகிறார்கள்.

பஸ்ஸில் ஏறி அமரும் போதுதான் அந்த பஸ்ஸில் ஓட்டுநர் உட்பட ஆறு ஆண்கள் மட்டுமே இருப்பது தெரிய வந்தது. ஜோதி டிக்கட் கேட்கிறாள், அவளுக்கு டிக்கட் வழங்கியவாறே அவளது உடலழகை ரசிக்கிறான் ராம் சிங்.

"ராத்திரி நேரத்துல இப்படி ஒரு ஆம்பள கூட வாறியே..." என்று ராம்சிங் மரியாதையற்ற தோரணையில் பேசும் போது அவன் குடிபோதையில் இருப்பது தெரிய வந்தது.

எறிச்சலடைந்த ஜோதியும் காதலனும் ராம்சிங்கை காரசாரமாய்த் திட்டுகிறார்கள். பஸ்ஸிலிருந்த பழ வியாபாரி பவன் குப்தா மற்றும் ஜிம் பயிற்சியாளர் வினய் சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரும் ராம் சிங்கிற்கு ஆதரவாக இளம் பெண்ணிடம் கடும் விவாதத்தில் ஈடுபடுகிறார்கள். அப்போதுதான் பஸ்ஸில் இருக்கும் அனைவரும் கடும் போதையில் இருப்பது தெரிய வந்தது. அப்போது வாக்குவாதம் கைகலப்பாய் மாற ஜோதியின் காதலனை வினய் சர்மா கைகளால் தாக்குகிறான். பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தாமல் மகிலாப்பூரை நோக்கி திரும்பிச் செல்கிறது. ஜோதியின் காதலன் அடித்து ஓடும் பஸ்ஸிலிருந்து தூக்கி வீசப்படுகிறான். ஜோதியும் வேட்டையாடப்பட்டு ஆடைகளே அற்ற நிலையில் தூக்கி வீசப்படுகிறாள்.

இருவரும் வீதியில் கிடந்து கதறியும் வீதியில் போவோரை நிறுத்துவதற்கு முயற்சித்தும் ஆட்டோக்கள், மோட்டார் சைக்கில்கள் என அனைத்தும் மெதுவாக புதினம் பார்த்து நகர்ந்து சென்றனவே தவிர சுமார் 25 நிமிடங்களாக யாரும் இருவருக்கும் அருகில் வந்து உதவ முன்வரவில்லை. பின்னர் ஒரேயொருத்தர் மாத்திரம் அருகில் வந்து பொலிஸாருக்குத் தகவல் சொல்கிறார்.

தகவல் கொடுத்து 45 நிமிடங்கள் கழிந்த பிறகு பொலிஸ் வேன்கள் அவ்விடத்திற்கு வந்து, நீண்ட நேரமாக இது எந்த பொலிஸ் எல்லைக்குரிய இடம் என நேரத்தை வீணடிக்கிறார்கள்.

இத்தனைக்கும் ஆடையின்றிக் கிடந்த ஜோதிக்கும் அவளது காதலனுக்கும் பொலிஸோ பொதுமக்களோ எவரும் உடம்பை மறைத்துக்கொள்ள ஒரு துண்டுத் துணி கூட வழங்கவில்லை. நீண்ட நேர மன்றாட்டத்திற்குப் பிறகு கிடைத்த ஒரு துணியால் ஜோதியின் உடம்பு காதலனால் மறைக்கப்படுகிறது.

அது வரைக்கும் குழுமியிருந்த பொதுமக்களும் பொலிஸாரும் கூட ஜோதியின் உடம்பைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார்களோ தெரியவில்லை.

பின்னர் ஜோதியின் காதலன் தனக்கு இரத்தம் பீறிட்டுக்கொண்டிருப்பதனையும் பொருட்படுத்தாது அவளைத் தூக்கி பொலிஸ் கட்டுப்பாட்டு வேனுக்குள் ஏற்றுகிறான். அப்போது கூட பொலிஸ் உதவி செய்யவில்லை. வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற பின்னர் கூட நீண்ட நேரம் கழித்தே சிகிச்சை ஆரம்பிக்கிறது. ஜோதிக்கு இந்தியாவின் சப்தர்ஜங் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. பின்னர் சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி கடந்த 2012, டிசம்பர் 29ம் திகதி உயிரிழந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வரை நான் குறிப்பிட்டவைகள் அனைத்தும் சம்பவங்கள். இங்கு குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் வெறும் ஊகத்திலோ அல்லது கற்பனையிலோ எழுதப்பட்டவையல்ல, சம்பவத்தை உடனிருந்து அனுபவித்த ஜோதியின் காதலன் மற்றும் ஜோதியின் அப்பா, சகோதரன் ஆகியோர் ஊடகங்களுக்கு வழங்கிய நேரடிப் பேட்டி என்பவைகளையும் பொலிஸ் விசாரணையின் போது குற்றவாளிகளில் சிலர் வழங்கிய வாக்கு மூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவும்.

மாணவியின் மரணம் முடிந்துவிட்ட ஒரு சம்பவம். போராட்டம், கருத்து வெளியீடுகள் மற்றும் குற்றவாளிகளுக்கான விசாரணைகள் என்பன நடந்துகொண்டிருப்பவைகள். இனி இந்த விடயங்களிலிருந்து எதிர்காலம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து சற்று அலசுவதே பொருத்தமானது. அதுவே இக்கட்டுரையின் பிரதான நோக்கம். இதற்கு இந்தச் சம்பவத்திலிருந்தே சில பேசுபொருள்களை முன்வைக்க விளைகிறேன்.

1. ஒரு 23 வயது மாணவி பின்னேர சினிமா பார்த்துவிட்டு இரவு 9.45 இற்கு காதலனுடன் பஸ்ஸிற்காகக் காத்திருக்கிறாள்.

2. டிக்கட் வழங்கியவாறே ஜோதியின் உடலழகை ரசிக்கிறான் ராம் சிங்.

3. பஸ்ஸிலிருந்தோர் யாவரும் (குற்றவாளிகள்) போதையிலிருந்தார்கள்.

4. "ராத்திரி நேரத்துல இப்படி ஒரு ஆம்பள கூட வாறியே..." என ராம் சிங் கேட்கிறான்.

5. ஆள் மாறி மாறி ஜோதியைக் கற்பழித்தார்கள்.

6. ஜோதியும் காதலனும் வீதியில் கிடந்து கதறியும் நீண்ட நேரமாய் யாரும் உதவ முன்வரவில்லை.

7. பொலிஸ்ீக்கு அறிவிக்கப்பட்டு நீண்ட நேரத்திற்குப் பின்னரே பொலிஸ் வருகிறது.

8. வந்த பின்னும் உடனே பாதிக்கப்பட்ட இருவருக்கும் உதவி கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. காயப்பட்டுக் கிடந்தவன் தன் காதலியை வேனில் ஏற்றும் போது கூட பொலிஸார் உதவவில்லை.

10. வைத்தியசாலையில் கூட நேர விரயத்திற்குப் பின்னரே சிகிச்சை ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் உலகை உலுக்கி ஊடகங்களையும் அறிக்கை விடுவோர்களையும் அரசியல் செய்வோரையும் உசுப்பேற்றி விட்டிருக்கிறது. சிலரின் சில்லறைத் தனமான கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டு ஏனையவைகளை பரிசீலித்தால் இரண்டு வகையான கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒன்று, குற்றவாளிகளுக்கான கடுமையான தண்டனை மற்றும் பெண்கள் பாதுகாப்பை பலப்படுத்தல், பெண்கள் சுதந்திரம். அடுத்தது, பெண்கள் தம்மைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ளல். இதில் முதலாவது கருத்துக்கான போராட்டங்கள்தான் டெல்லியில் மிகவும் உக்கிரமாக இடம்பெற்று வருகின்றன.

எது எவ்வாறாயினும் நடந்த சம்பவங்களை முழுமையாக அவதானித்தால் தற்போது நடாத்தப்படுகின்ற போராட்டங்களும் கோரிக்கைகளும் கருத்து வெளியீடுகளும் விசாரணைகளும் இச்சம்பவத்திற்கான தீர்வின் ஒரு சிறு பகுதி என்றுதான் விசாலமாகச் சிந்திப்போரால் உணர்ந்துகொள்ள முடியும்.

குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். இதற்கு மாற்றுக்கருத்திற்கு இங்கு இடமேயில்லை. அதுவும் இவர்களுக்கு "மிருகத்தனமான" எனும் அடைமொழியைச் சொன்னால் கூட அது மிருகங்களுக்குக் கேவலம். இவர்கள் சிறுகச் சிறுகக் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு தூக்கிலிடப்படவேண்டும்.

ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் சொல்வதைப்போன்றோ அரசியல்வாதிகளும் சமூக ஆர்வலர்களும் மாதர் சங்கங்களும் மனித உரிமை ஆர்வலர்களும் கோசமிடுவதனைப்போன்றோ இந்தத் தண்டனை நிறைவேற்றம் மற்றும் சட்ட, ஒழுங்கை சரிசெய்தல் என்பன மாத்திரம் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் அரங்கேறுவதைத் தடுப்பதற்கோ இதற்கான முழுமையான தீர்வோ அல்ல.

நடந்து முடிந்த குற்றத்திற்கு தண்டனை வழங்கிவிட்டுப் போதல் மட்டும் அத்தகைய குற்றங்கள் மீண்டும் அரங்கேறுவதைத் தடுப்பதற்கான வழிமுறையாகக் கருத முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறாயின் உலகில் இது வரை ஏராளமான குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றன. இது வரையில் அந்தக் குற்றங்கள் இல்லாமல் போனதாகவோ அல்லது குறைவடைந்ததாகவோ யாரும் உறுதிப்படுத்த முடியாது. மாறாக உலகில் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் பல்கிப்பெருகிக் கொண்டே வருவதனை அவதானிக்க முடிகிறது.

எனவே இவ்விடயத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கோ அல்லது இவ்வாறான மிலேசத் தனங்களைக் குறைப்பதற்கோ வழிகோலவேண்டும். அதுவே நிரந்தரத் தீர்வின் அடித்தளமாக அமையும். இனி இருக்கின்ற பெண்களைப் பாதுகாப்பதற்கு எது உகந்த வழி என்பது குறித்தே யாவரும் சிந்திக்க வேண்டும்.

கட்டுரையில் நான் பட்டியல்படுத்தியுள்ள பேசுபொருள்களை வைத்துப் நோக்கும் போது பலவிடயங்கள் தெளிவாகும்.

எமது பெறுமதிவாய்ந்த பொருளொன்றை கள்வர்களிடமிருந்து பாதுகாக்க நாம் எத்தகைய ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். வீட்டுக்கு உறுதியான பூட்டு போடுகிறோம். வீட்டுக்குள்ளும் அலுமாரி வைத்துள்ளோம். அதற்கும் உறுதியான பூட்டுப் போடுகிறோம். நுழைவாயிலில் வோட்ச் மேன் போடுகிறோம். போதாதற்கு கெமரா கூடப் பொறுத்தி வைக்கிறோம். ஆனால் ஒரு போதும் நாங்கள் எமது பொருட்களை சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் வைத்திருப்போம், கள்வர்கள் உருவாகாமல் அரசாங்கம்தான் தடுக்கவேண்டும் அல்லது அந்தப் பொருட்களை அரசாங்கமே பாதுகாத்துத் தரவேண்டும், இதற்கு ஏற்றாற் போல சட்டம் ஒழுங்கை சரிசெய்ய வேண்டும் என்று யாரும் வாதாடுவதுமில்லை, கோசமிடுவதுமில்லை. அவ்வாறு செய்தால் அதைப்போன்றதொரு மடமை வேறு எதுவுமில்லை.

சாதாரண ஜடங்களைப் பாதுகாப்பதற்கே இத்தனை ஏற்பாடுகளை நாமே பொறுப்பாகவிருந்து செய்யும் போது எமது மகளையோ, சகோதரியையோ அல்லது எம்மையோ நாம் பாதுகாப்பதற்கு எந்த அளவு நாம் பொறுப்புடன் நடந்துகொள்கிறோம் என்பது இங்கு கசப்பாக இருந்தாலும் கவனிக்கப்படவேண்டிய யதார்த்தமாகும்.

பெண்மை என்பது அழகானது, பெறுமதியானது. இத்தகைய பெறுமதிவாய்ந்த விடயத்தைப் பாதுகாப்பதற்கும் நாமே தாமாகவும் கட்டாயம் சில விடயங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தேயாக வேண்டியது கடமையும் பொறுப்பும் என்றால் இதனை மறுத்துப்பேச முடியாது.

இதற்கு இந்த லொஜிக் பொருத்தமில்லை என்று தர்க்கவாதிகள் வாதிடலாம். பெண்களையொன்றும் அலுமாரியில் வைத்துப்பாதுகாப்பதற்கு அவர்களொன்றும் பொம்மைகளல்ல என்றும் சிலர் சிந்தனையின்றிச் சிரிக்கலாம். அங்குதான் உங்கள் லொஜிக் நொலேஜிற்கே சவால் வருகிறது.

இங்கு வீடு என்றும் அலுமாரியென்றும் உறுதியான பூட்டுக்கள் என்றும் உவமித்துப் பேசப்படுகின்ற விடயங்கள் எவையெனப் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றையும் லொஜிக் நொலேஜ் இல்லாதவர்களுக்குச் சற்றுத் தெளிவுபடுத்துவது சிறந்தது எனக் கருதுகிறேன்.

காமக் கயவர்களின் பார்வையிலிருந்து எமது அங்க அழகைப் பாதுகாப்பதற்கான ஆடைப் பூட்டுக்களை இங்கு குறிப்பிடுகிறேன். "திறந்த வீட்டுக்குள் நாய் நுழைதல்" எனும் உவமையையும் இங்கு ஞாபகப்படுத்துகிறேன். நாயென்றால் அப்படித்தான், அதற்காக வீட்டைத் திறந்துபோட்டுவிட்டு நாய்களைப் பார்த்து நாம் குரைத்துக்கொண்டிருப்பதும் நியாயமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடு என்றால் குறித்த நேரத்திற்குப் பிறகு அதனைப் பூட்டி விடுவதனைப் போல பெண்களும் குறித்த நேரத்திற்குப் பிறகு வெளியில் அலைவதைத் தவிர்ந்துகொள்வது அத்தியவசியமானது. அன்றேல் நாய்கள் நுழைந்துவிடும்.

இங்கு எமது பேசுபொருள்களில் சிலவற்றை ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஜோதி சினிமா முடிந்து வீதியில் பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் போது மணி இரவு 9.45, ஜோதியின் உடலழகு அங்கு மாற்றானால் ரசிக்கப்படுகிறது, "இந்த ராத்திரி நேரத்துல ஒரு ஆம்பிளகூட வாரியே..." என அந்த ஆறு நாய்களில் ஒன்று ஜோதியைப் பாத்துக் குரைத்தது.

மேலும் எமது பெறுமதியான பொருட்களைப் பாதுகாக்கும் விடயம் குறித்துப்பேசும் போது வோட்ச்மேன் என்றும் கெமெரா என்றும் குறிப்பிட்டேன். எமது பிள்ளைகளை, சகோதரிகளைப் பாதுகாப்பதில் அவர்கள் குறித்த எமது கண்காணிப்புக்களும் முக்கியத்துவம் பெறல் வேண்டும் என்பதையே இதன் மூலம் விளக்க விளைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஜோதியின் சம்பவத்தில் மேற்படிப் பேசுபொருள்கள் குறித்த விடயங்களின் தீர்ப்பை வாசகர்களிடமே விட்டுவிடுகிறேன்.

உலகில் அரங்கேறும் பாலியல் பலாத்காரம் மற்றும் தகராறுகள் தொடர்பான குற்றச் செயல்களில் பெரும்பாலானவை மது அருந்திய நிலையிலும் போதைப்பொருள் பாவித்த நிலையிலுமே அரங்கேறுகின்றன. இங்கும் அதே விடயம்தான் நிகழ்ந்திருக்கிறது. இதையே எமது மூன்றாவது பேசுபொருளில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இந்தக் கொடூரச் சம்பவத்திற்கெதிரான கோசத்தில் இதுவரை எவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் குறித்து அலட்டிக்கொண்டதாய்த் தெரியவில்லை.

அவ்வாறு கோசமிட்டாலும் அது குறித்து அரசால் நடவடிக்கை எடுக்க முடியுமா என்றும் புரியவில்லை. ஏனெனில் அரசியல்வாதிகள் அரசியல் செய்வதில் இது பாரிய செல்வாக்குச் செலுத்தும் ஒரு விடயமாக மாறியிருப்பது நல்ல மானுடத்திற்கான ஒரு சாபக்கேடாகும்.

இப்படியான கோரங்களை அரங்கேற்றுபவர்கள் எவரும் உடனே முளைப்பவர்களல்ல. அவ்வாறானவர்களையும் சமூகக் கட்டமைப்புக்கள்தான் நீரூற்றி வளர்க்கின்றன.

வீதியில் ஆடையின்றி அல்லலுறும் போது வாகனத்தை நிறுத்தாமல் அவர்களோரமாய் வாகனத்தை மெதுவாகச் செலுத்தி புதினம் பார்த்துச் சென்ற சமூகம், தகவலறிந்தும் காலந்தாழ்ந்து வந்து இதயமே இல்லாமல் இந்தச் சம்பவ பொலிஸ் எல்லை எதுவென ஆறுதலாய் கலந்தாலோசித்துக்கொண்டிருந்த பொலிஸ் காவலர்கள், உடம்பை மறைக்கக் கூட துணியொன்றைக் கொடுக்கத் துப்பில்லாத ஊர்வாசிகள் பற்றியெல்லாம் எவரும் சிந்திக்கவில்லை, குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யவேண்டும், தூக்கிலிடவேண்டும் என்பதை மட்டுந்தான் தீர்வென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியான ஒரு சமூகக்கட்டமைப்பை நம்பி எந்த உத்தரவாதத்தில் இந்தத் தண்டனையோடு மாத்திரம் இந்த விடயத்தை முடித்துக்கொள்ள முடியும்? எனவே இது குறித்து விசாலமான பார்வையிலான வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். இது இந்தியாவில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இங்கோ இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரைகுறை ஆடைக்கும் கட்டுக்கோப்பின்றிய நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் கேட்டு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

அண்மையில் மதுரை ஆதீன அருணகிரிநாதர் ஆபாசமில்லாத ஆடைகளைப் பெண்கள் அணியவேண்டும் என அறிவுறுத்தியமையைக் கண்டித்து அரைகுறை ஆடைக்காரப் பெண்களும் அவர்களுக்குப் பின்னால் உமிழ்நீர் வழிய ரசித்துத் திரியும் சில கேடுகெட்ட ஆடவர்களும் ஆதீனத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடாத்தியமை இங்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நிகழ்வாகும். அருணகிரி நாதர் ஒன்றும் இங்கு மதம் மாறும்படி வேண்டுகோள் விடுக்கவில்லை. தம்மைக் காத்துக்கொள்வதற்கான வழிமுறைகளில் ஒன்றையே வழிமொழிந்தார். ஆனால் அதை எதிர்த்து எவ்வளவு கோசங்கள்...?

அவ்வாறானால் நாங்கள் வீட்டைத் திறந்துதான் வைப்போம்... ஆனால் நாய் நுழையக்கூடாது... அன்றேல் நாய்களிடமிருந்து எங்களை அரசாங்கம் காக்க வேண்டும் என்று விதண்டாவாதம் பேசுவதாகவே இதைக் கருதக்கிடக்கிறது. அதுமட்டுமல்லாமல் சிலர் கண்டனம் என்கின்ற பேரில் நீலப்பட விளம்பரம் தேடிக்கொண்டிருக்கும் பரிதாப நிலையும் இந்தியாவில் ஆங்காங்கே அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

இத்தகைய மனநிலையில் பெண்களும் பெண்ணுரிமை அமைப்புக்களும் செயற்படுதல் ஒரு போதும் பிரச்சினைக்கு நல்ல தீர்வைப்பெற்றுத் தரப்போவதில்லை. நாங்கள் எவ்வாறு வேண்டுமானாலும் இருந்துவிட்டுப்போவோம், ஆனால் ஆண்கள் ஒதுங்கிப்போக வேண்டும் என பிரச்சினைக்கான புறக்காரணிகளை மட்டும் சரி செய்யக் கோசமிடுவது சாத்தியப்பாடான தீர்வினைத் தராது. அகக் காரணிகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதும் இங்கு அத்தியவசியம் என்பதனை யார் என்னதான் பேசினாலும் ஜோதிக்கு நிகழ்ந்த இந்தக் கொடூரம் ஏராளமான பெற்றோருக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறது என்பதனை அவர்களது மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளும்.

ஆகவே, இந்தக் கோரச் சம்பவத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன. அவை உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் தம்மைத் தாம் பாதுகாப்பதற்கான முயற்சி முன்னெடுப்புக்கள் அதிகரிக்கும். அவ்வாறான உணர்வு ரீதியிலான செயற்பாடுகள் இத்தகைய பாதகங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க பெரிதும் துணைநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றையது இத்தகைய பிரச்சினைகளுக்கான புறக்காரணிகள் குறித்து சிந்திக்கும் போது இதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டங்களை பெற்றோர் தொடங்கி அரசாங்கம் வரை மேற்கொள்ள வேண்டும்.

இன்று ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளையை வைத்தியராக, என்ஜினியராக, சட்டத்தரணியாக உருவாக்க ஆசைப்படுகிறார்களே தவிர ஒரு மனிதாபிமானியாக, சமூகத்தில் அக்கரையுள்ள ஒருவனாக மற்றும் நல்லொழுக்கமுள்ளவனாக வளர்த்தெடுப்பதில் அவ்வளவாக அக்கறை காட்டுவதேயில்லை.

அரசாங்கங்களும் நாட்டின் ஒரு பிரஜை எவ்வாறு வழிப்படுத்தப்படல் வேண்டும் என்பதில் கரிசனை காட்டுவதில்லை என்பது தற்போது பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலுமுள்ள கற்பித்தல் முறை மற்றும் கற்கை நெறிகளிலிருந்து புரிந்துகொள்ள முடியும். பரீட்சைக் கல்வியே பிரதானமாகக் கொள்ளப்படுகிறதே அன்றி மனிதாபிமானம் வளர்ப்பதற்கான ஏற்பாடுகளோ நடைமுறைகளோ அங்கிருப்பதாய்த் தெரியவில்லை.

அந்த ஆறு காட்டுமிராண்டிகளையும், அவ்வளவு நேரமாய் வீதியில் கிடந்து ஓலமிட்டும் ஒட்டுத்துணி கூடக் கொடுத்துதவாத சுயநலவாதிகளையும், பொறுப்பில்லாத பொலிஸ் அதிகாரிகளையும் இந்தச் சமூகக்கட்டமைப்புத்தான் உருவாக்கியுள்ளது. இப்படியாக டெல்லி மாணவி ஜோதிக்கு நிகழ்ந்த கோரத்திற்கு முழு சமூகமுமே காரணமாய் இருந்துவிட்டு அந்த ஆறுபேருக்கும் தூக்குத் தண்டனை வழங்கிவிடுவது மட்டுமே தீர்வு எனக்கோசமிடுதலும் அவர்களைத் தூக்கிலிடுவதோடு மாத்திரம் பிரச்சினை முடிந்துவிட்டதென்றும் கருதிவிடக்கூடாது.

இக்கட்டுரையில் நான் அகக்காரணிகள் மற்றும் புறக்காரணிகள் எனச்சுட்டிக்காட்டிய இரண்டு விடங்களும் ஒழுங்குபடுத்தப்படும் போதுதான் இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்திலும் ஏற்படாமல் தடுக்கமுடியும். அன்றேல் இன்னும் ஏராளமான ராம் சிங், வினய் சர்மா போன்றோர்களுக்கு நிறைய ஜோதிக்கள் எதிர்காலத்திலும் பலியாகவேண்டி வரும்.

ஆனால் ஜோதியின் மரணம், நிறையப் பெற்றோர்களிடம் உங்கள் பிள்ளையைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள் எனும் சேதியை அழுத்தமாய்ச் சொல்லியிருக்கிறது என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை!

|| || ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் தலைமைகளின் அரசியல் நாகரிகமும் முஸ்லிம் தலைமைகளின் பேரினவாதத் தாவல்களும்

2012ம் ஆண்டு இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவின் படி சிறுபான்மையினருக்கான மாகாண சபையை அமைத்துக்கொள்வதற்கு 100% வாய்ப்புக்கள் இருந்த போதிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனை மேற்கொள்ளத் தவறியிருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எவ்வளவோ நெகிழ்வுடன் அழைப்பு விடுத்தபோதிலும் முஸ்லிம் காங்கிரஸ் அதனைப் புறந்தள்ளி அரசாங்கத்துடன் இணைந்துகொண்டது.

(பிரசுரம்: “கிழக்கு” வார இதழ் - 06.10.2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல நூற்றாண்டு காலமாக தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடனேயே வாழ்ந்து வந்துள்ளமை வரலாற்றுப் பதிவுகள். அவை அப்படியே பேணப்படவேண்டும் என்பதற்காகவும் சிங்களப் பேரினவாத அரசியலிலிருந்து தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இந்த ஒற்றுமை நிலைக்கவேண்டும் என்பதற்காகவும் திடமாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் முன்னெடுப்புக்களையும் அவை புறந்தள்ளப்பட்ட வரலாற்றையும் இன்றைய முஸ்லிம் சமூகத்தினர் கட்டாயம் புரிந்துகொள்ளவேண்டும் என்பது காலத்தின் இமாலயத் தேவையாக இருந்துகொண்டிருக்கிறது.

ஏனெனில் அண்மையில் நடந்துமுடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவில் முஸ்லிம்களின் வாக்குகளைச் சூறையாடி முஸ்லிம் தலைமைத்துவங்கள் செய்துள்ள வரலாற்று மோசடிகள் இனியொருபோதும் இன்னுமொரு முறை நிகழ முஸ்லிம்கள் இடமளிக்கக் கூடாது.

முஸ்லிம் மக்கள் எதையோ நேசிக்க இந்த முஸ்லிம் தலைமைகள் இன்னொன்றை நேசித்து வருகின்றமை வரலாறு நெடுகிலும் பதிவுசெய்யப்பட்டுக்கொண்டே வருகின்றது. சிலரைத் தவிர எந்த முஸ்லிம் தலைமையிடமும் கொள்கைப் பிடிப்பான, சோரம் போகாத அரசியலைக் காண முடியவில்லை. அனைவரும் பெரிய "வீட்டு மாப்பிள்ளை"யாகி சொந்தச் சுகபோகங்களுக்காகத் தம் சமூகத்தைக் காட்டிக்கொடுத்த சம்பவங்கள் வரலாற்றில் நிரம்பி வழிகின்றன.

*01. 1956 பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பரும், நிந்தவூர்த் தொகுதியில் எம்.எம்.முஸ்தபாவும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு தமிழ் பேசும் மக்களது அமோக ஆதரவுடன் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். ஆனால் இவ்விருவரும் தமக்கு வாக்களித்த தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையைச் சிதறடித்து தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்த அன்றைய பண்டார நாயக்க அரசாங்கத்துடன் இணைந்துகொண்டனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*02.* 1960 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் கல்முனையிலிருந்து எம்.சி.அகமதுவும், நிந்தவூர், பொத்துவில் ஆகிய இரு தொகுதிகளிலிருந்து இரு அப்துல் மஜீதுகளும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

நடந்தது என்ன?
கல்முனையிலிருந்து தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவான எம்.சி.அகமது ஆளும் சுதந்திரக்கட்சிக்குத் தாவினார். மற்றைய இரு மஜீதுகளும் ஐக்கிய தேசியக் கட்சியில் சங்கமமாகினர். தமிழரசுக் கட்சியின் ஆதரவில் போட்டியிட்ட எம்.எம்.முஸ்தபாவும், பொத்துவில் அப்துல் மஜீதும் அமைச்சர் பதவிகளையும் பெற்றமை இலங்கை அரசியல் வரலாற்றில் பதிவாகியுள்ளன.

*03.* கல்முனை மருதமுனையைச் சேர்ந்தவரும் தமிழ் மக்களின் மிகுந்த நம்பிக்கையைப் பெற்றிருந்தவருமான மசூர் மௌலானா என்பவரைத் தமழரசுக் கட்சி மூதவை (செனட்சபை) உறுப்பினராக்கி அழகு பார்த்தது. பதவி கிட்டிய கையோடு அவரும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துவிட்டார்.

252649

11954

*04.* பொத்துவில் தொகுதியிலிருந்து தமிழர் ஒருவர் தெரிவாகும் வாய்ப்பு இருந்த நிலையில் 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அத்தொகுதியிலிருந்து தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட நடராஜா தர்மலிங்கம் என்பவர் விண்ணப்பித்திருந்தார். அவ்வேளை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழர்களால் தலைமை தாங்கப்பட்ட தமிழரசுக் கட்சி, அம்பாறை மாவட்டத்திலிருந்து முஸ்லிம் ஒருவரே பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படவேண்டும் என்று கூறி 1970 இல் பொத்துவில் தொகுதியில் தமிழரசுக் கட்சி அப்துல் காதர் எனும் முஸ்லிம் ஒருத்தரை வேட்பாளராக நிறுத்தியது.

*05.* திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்த் தேர்தல் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதி. தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் தெரிவாகக் கூடியதாக இருந்தது. 1960 மூதூரிலிருந்து ஏகாம்பரம் என்பவர் தமிழரசுக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு முதலாவது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்துல் மஜீத் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டாவது அங்கத்தவராகத் தெரிவானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962 இல் ஏகாம்பரம் அவர்கள் காலமானதால் இலங்கைத் தமிழரசுக் கட்சி எம்.ஈ.எச்.முகமதலி என்ற முஸ்லிம் பிரமுகரை இடைத்தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச் செய்தது.

**06.** 1965 பொதுத் தேர்தலிலும் தமிழரசுக்கட்சி முகமதலியையே மூதூரில் வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச்செய்தது. தமிழ் மக்களின் பூரண ஆதரவுடன் முகமதலி மூதூர் முதல் அங்கத்தவராக நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். ஆனால் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாகத் தெரிவான எம்.ஈ.எச்.முகமதலி அன்றைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினார்.

**07.** 1988இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்ட தமிழ்க்குழுவின் (ஈரோஸ்) சார்பில் இரண்டு தமிழர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகினர். அத்தமிழர் குழு தமிழ் மக்களால் வாக்களித்துத் தெரிவு செய்யப்பட்ட ஒரு தமிழரைப் பதவி விலகல் செய்து பஷீர் என்ற முஸ்லிம் பிரமுகரை நாடாளுமன்றத்திற்கு நியமித்தது. தமிழர் தெரிவு செய்த தமிழ்ப் பிரதிநிதித்துவம் முஸ்லிம்களுக்கு உரித்தாக்கப்பட்டது.

**08.** இந்தத் தமிழர் குழு நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்த போது அதிலுள்ள எல்லாத் தமிழ் உறுப்பினர்களும் கொள்கைக்காய் பகிஷ்கரிக்க, பட்டியலில் இறுதியிலிருந்த வன்னி மாவட்ட ஜனாப்.அயூப் என்பவரும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சேகுதாவூத் என்பவரும் பதவியேற்று நாடாளுமன்றம் சென்றனர். பின்னர் அவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் அனுசரனையாளராயினர்.

**09.** வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட போது அன்றைய முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாளின் வேண்டுகோளின் படி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக சஹாப்டீன் என்பவர் நியமிக்கப்பட்டார். இலங்கை வரலாற்றில் திருகோணமலை அரசாங்க அதிபராக இருந்த ஒரே ஒரு சிறுபான்மை இனத்தவர் அவரே.

**10.** நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம்களின் தனித்துவம் காப்பதாய்க் கூறி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்து தனது கட்சியின் வேட்பாளர்களைக் களமிறக்கினார். முஸ்லிம்களும் நம்பி வாக்கினை வாரி வழங்கினர். இந்த நிலையில் தமிழ் பேசும் மக்களின் தனித்துவம் காப்பதற்காய் தனித்துவமான மாகாண சபையொன்றை அமைப்போம் எனவும் முதலமைச்சர் பதவியைக் கூட உமது கட்சிக்கே தருகிறோம் எனவும் கூறி முஸ்லிம் காங்கிரஸை விடவும் அதிக ஆசனம் பெற்றிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பினை விடுத்தது. ஆனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸோ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைத்தது.

இப்படியாக அனேக முஸ்லிம் தலைமைகள் கொள்கைப் பிடிப்பற்ற சுயநலச் சுகபோக அரசியலையே அன்று தொடக்கம் இன்று வரைக்கும் நடாத்தி வருவதை வரலாறு பதிவு செய்துகொண்டே இருக்கின்றது.

இங்கு முஸ்லிம்களின் அபிலாசைகள் காலங் காலமாக முஸ்லிம் தலைமைகளால் சிதறடிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன. இந் நிலைமை இனியும் தொடர முஸ்லிம்கள் இடமளிக்கக்கூடாது.

தெற்கிலுள்ள மக்களின் வாழ்வாதாரம் வேறு. வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரம் வேறு. வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் சமூகம் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் காலங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். இடையிடையே பொதுமக்கள் சாராத தனிமனிதக் குழுக்களால் சில கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் அவையெல்லாம் எந்தப் பொதுமகனும் விரும்பிச் செய்ததொன்றல்ல. ஆனால் இன்னமும் தமிழ் பேசும் சமூகம் ஒற்றுமையுடனேயே வாழ்ந்து வருகிறது, வாழ வேண்டும்! இதுவே காலத்தின் அவசியமும் அழகும் கூட.

இந்நிலைமைக்கு அரசியல் சுயநலவாதிகள் உலை வைக்க முயற்சித்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களது இனவாதத்திற்குச் சோரம் போகாமல் அரசியல் ரீதியிலும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளிடத்தில் ஒற்றுமையான ஒரு இணக்கப்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுமேயானால் இலங்கையின் சொர்க்காபுரியாய் எமது மண் மகிழும்; இது மறுக்க முடியாத உண்மை!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் வழங்கிய ஆணை பூனையாகிப் போன கதை

2012ம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டால் நிச்சயமாக மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்பதை சரியாக ஊகித்துக் கொண்ட ரவூப் ஹக்கீம் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாய் கூறி மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் போய் மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டார். மக்களின் எதிர்பார்ப்பு தவிடுபொடியானது. இந்த ஏமாற்றம் குறித்து எழுதப்பட்ட கட்டுரையே இது.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 06.10.2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பொய்கள்... ஓராயிரம் வாக்குறுதிகள்... ஆயிரம் அவதூறுகள்... எண்ணிலடங்கா இனவாதக் கக்குதல்கள்... எவ்வளவோ எதிர்பார்ப்புக்கள்... என புயலடித்து ஓய்ந்தாற் போல ஒரு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

பல மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடந்தாலும் கிழக்கையே உலகம் வைத்த கண் வாங்காமல் அவதானித்துக்கொண்டிருந்தது. தேர்தல் செய்திகளில் முக்கால்வாசிப் பக்கம் கிழக்கு மாகாணத்துக்கே ஒதுக்கப்பட்டது. ஏனெனில் கிழக்கு மாகாணத்திற்கு அப்படியொரு மகிமையிருக்கிறது. இது சிறுபான்மைச் சமூகத்தின் தனித்துவத் தாயகம்.

அதன் மகத்துவத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்கான செயற்பாடுகளில் ஒரு கூட்டம் தீவிர முயற்சி செய்துகொண்டிருக்க பேரம் பேசி வெல்வோம் எனக் களத்தில் குதித்து சோரம் போன வரலாறு குறித்து சோகமாய்க் கொஞ்சம் பேனாவால் பேசுவோம் என்றெண்ணி வந்தேன்.

காங்கிரஸ் தேர்தலில் களமிறங்கியது. எவ்வளவு அழகான, வசீகரமான பேச்சு... எது பேசினால் மக்கள் ஆதரவு கிட்டுமோ, எது பேசினால் மக்கள் உணர்ச்சி வசப்படுவார்களோ அவையெல்லாம் மேடையில் உணர்ச்சிவசமாய்ப் பேசி ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாய் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டது.

உலகமே எதிர்பார்ப்போடு காத்திருந்தது. தொலைந்த ஒற்றுமையும் சகவாழ்வும் மீளக்கட்டியெழுப்பப் படப்போகிறது. சர்வதேசத்தின் தலை தடாவுதல்களால் கிழக்கின் எதிர்காலம் அலாதியடையப் போகிறதென்று!

பேரம் பேசுகிறோம்... பேரம் பேசுகிறோம்... என்று நாட்கள் நகர்ந்தன... ஒரு பக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், கேட்பதைத் தருகிறோம், ஒற்றுமைதான் முதலில் முக்கியம். அது நிகழ்ந்தால் அடுத்ததெல்லாம் தானே நிகழும் என வழி மீது விழி வைத்துக் காத்துக் கொண்டே இருந்தார்கள். பிடிக்காத பொண்ணைப் பார்த்துவிட்டு விரைவில் நல்ல சேதியாய்ப் பார்த்துச்சொல்கிறோம். எனக் கூறிச் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை வீட்டுக்காரர் போல உயர் மட்டக்குழுவிடம் கலந்துரையாடி நல்ல முடிவுக்கு வருகிறோம் என அவர்களைக் காக்க வைத்துக்கொண்டே நாட்களை இழுத்தடித்தார் ரவூப் ஹக்கீம்.

அப்படி என்னதான் பேரம் பேசினார்களோ... என்னதான் கொடுத்தார்களோ... என்னதான் வாங்கினார்களோ என்று இறைவன்தான் அறிவான். காக்கை தூக்கிய கோழிக்குஞ்சு அதன் வாயிலிருந்து தவறியும் கூட கிணற்றுக்குள் விழுந்து இறந்த கதையாய் மீண்டும் அரசாங்கத்திடமே தஞ்சமாகினார் ஹக்கீம்.

நான் இப்ப அவங்க கூட இல்ல, என்னை நம்புங்க என்று சொல்லி அள்ளிய வாக்குகளை அப்படியே தாரை வார்க்க இவருக்கு எப்படி மனசு வந்ததென்று இன்னும் நிறையப்பேர் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டே - யிருக்கிறார்கள். இறுதியில் இப்படித்தான் நடக்கும் என சிலர் முன் கூட்டியே ஆரூடம் சொல்லியிருந்தாலும் நோன்பைப் பிடித்துக் கொண்டு, தலையில் தொப்பியும் போட்டுக்கொண்டு தலைவர் பொய் சொல்லுவாரா...? என்கின்ற நியாயமான கேள்வியுடன் மக்கள் நம்பி வழங்கிய ஆணை கடைசியில் பூனையாய்ப் போய்விட்டது.

முஸ்லிம் முதலமைச்சர், அதிலும் உரத்துப்பேசும் ஆளுமையுள்ள எல்லா இனத்தவர்களையும் நேசிக்கின்ற, உரிமைகளை வென்றெடுக்கும் தைரியமுள்ள முதலமைச்சர் என்ற கோசத்தோடு முஸ்லிம்கள் வாக்களிக்க ரவூப் ஹக்கீமோ ரோசமே இல்லாமல் அரசாங்கத் தரப்பிலுள்ளவருக்கு முதமைச்சர் பதவியைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இதுதான் மக்களின் விருப்பமாக இருந்திருந்தால் அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து அரச தரப்பிலிருந்து தேர்தலில் குதித்த வேட்பாளர்களுக்கே அதிகப்படியான விருப்பு வாக்குகளை அள்ளி இரைத்திருப்பார்களே...?

முஸ்லிம்களின் தேசியத் தலைவர் அவர்களே...! இப்படியொரு முடிவை எடுக்க ஏன் உங்களுக்கு அவ்வளவு நாள் தேவைப்பட்டது...? இப்படி நடிக்குமாறு உங்களிடம் சொன்னார்களா....? என்கின்ற மக்களின் கேள்விக்கு விடை சொல்வதைப் போல அண்மைய மின்னல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவை எதிர்காலத்தில் நடக்கும் என்பதைப் போன்றதொரு தோரணையில் ஹக்கீம் பேசியதை அவதானிக்க முடிந்தது. இல்லாத பொல்லாததையெல்லாம் சொல்லி அரசியல் செய்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இருக்கிற நன்மைகளை கொதித்துக்கொண்டிருக்கும் மக்களிடம் மறைத்து அரசியல் செய்கிறாரா ஹக்கீம் என்கின்ற வினா மனதில் எழுந்து சிரிப்பை ஏற்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவூப் ஹக்கீமின் இந்த முடிவின் பின்புலத்தில் என்னதான் இருந்தாலும் வாக்கு வாங்குவதற்கு முன்னர் பேசுவதும் அதன் பின்னர் முடிவெடுக்கும் போதும் அவர் காலங்காலமாக மக்களின் அபிலாசைகளைக் கணக்கிலும் எடுப்பதில்லை என்கின்ற விடயம் தற்போது அழிக்கமுடியாத பதிவாகிவிட்டது.

கட்சியிலிருக்கும் அங்கத்தவர்களைப் பாதுகாப்பதற்காக அவர் எடுக்கும் முயற்சியில் ஒரு பகுதியைக் கூட வாக்களித்த மக்களைத் திருப்திப்படுத்துவதில் அவர் காட்டுவதாய் இல்லை. எது நடக்கக்கூடாது என தமிழ் பேசும் மக்கள் அக்கறையாய், அவதானமாய் வாக்களித்தார்களோ அது தற்போது நடந்துவிட்டது. ரவூப் ஹக்கீம் நடத்தியிருக்கிறார். அதிகம் பேர் தேர்தலில் வாக்களிக்காமல் விட்டதற்கும் தேர்தலின் பின் என்ன நடக்கும் என முன்கூட்டியே அறிந்திருந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். இனி இது குறித்துப் பேசுவதில் பயனில்லைதான். இருந்தும் அவ்வாறு விட்டுவிடவும் முடியாது. ஏனெனில் என்றாவது மீண்டுமொரு முறை தேர்தல் வரத்தான் போகிறது... அதில் வாக்குக் கேட்டு ரவூப் ஹக்கீம் இதே மக்களிடம் வரத்தான் போகிறார். அதற்கு பொதுமக்கள் எவ்வாறு பதில் சொல்லுவார்கள் என்பது இனி வருகின்ற காலங்களில் எவ்வாறு அமையப்போகிறது என்பது இந்தக் கட்டுரையில் ஒளிந்துகிடக்கும் எதிர்பார்ப்பு.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் இவ்வாறானதொரு முடிவைத் தன்னிச்சையாக மேற்கொண்டதாகவே பரவலாகப் பேசப்படுகிறது. அவர் இந்த முடிவை எடுத்தமைக்கு சில காரணங்களும் பல பக்கத்திலுமிருந்து கசிந்தவண்ணமுள்ளன.

01. முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருத்தர் முதலமைச்சரானால் கட்சியின் ஒட்டுமொத்த ஆதரவாளர்களின் பார்வையும் முதலமைச்சர் மீது விழவே அதிக வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் முஸ்லிம் காங்கிரஸ் என்பது கிழக்கு மாகாணத்தையே அடிப்படைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு கட்சியாகும். இந்நிலையில் தேசியத் தலைமைத்துவம் கணக்கிலெடுக்கப்படாத ஒன்றாக மாறும் அபாயம்.

02. அரசாங்கத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் இணையாமல் போனால் முஸ்லிம் காங்கிரஸில் இருக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சிலரும் கட்சியிலிருந்து பிரிந்து அரசாங்கத்துடன் இணையும் வாய்ப்பிருந்தமையினால் கட்சியின் ஸ்த்திரம் பேணவேண்டிய அவசியம் இருந்தமை.

03. கிழக்கு மாகாணத்தில் அரசுக்கு எதிராக நின்றால் மத்திய அரசில் தனக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்த்தின் நிலை (அமைச்சுப் பதவி) என்னாவது?

மாகாண மக்களுக்கு மேலுள்ள காரணங்களால் திருப்தி காண முடியுமா...? அவர்கள் சார்பில் இவையெல்லாம் நியாயமாக முடியுமா?

முதலமைச்சர் என்கிற அந்தஸ்த்து கடந்த மாகாண சபையில் வெறும் நாம அளவில் மட்டுமே வைத்து அழகு பார்க்கப்பட்டது. அதுபோலதான இம்முறையும் நிகழக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஏனெனில் இருவரும் அரச தரப்பினரே.

இந்நிலையைத் தகர்த்து கிழக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக் கூடிய நல்லாட்சியை புதிய முதலமைச்சரால் மேற்கொள்ள இயலுமாகவிருந்தால் பழம் நலுவிப் பாலுக்குள் விழுந்த கதையாய் யாவரும் மகிழலாம்!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருகிவரும் இளவயதுத் தவறுகளுக்கு யார் காரணம்...?

2013.04.08ம் திகதி நள்ளிரவில் 48 வயதுடைய சிவகுரு எனும் வர்த்தகரும் அவரது மனைவியான 41 வயதுடைய சுந்தரமூர்த்தி விப்ராவும் படுக்கையறையில் வைத்து பரிதாபகரமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். இப்படுகொலைக்கு அவர்களது 16 வயது நிரம்பிய மகளே திட்டமிட்டு கொலையாளிகளை வழிநடத்தினார் எனும் உண்மை பின்னர் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து எழுதப்பட்டதே இக் கட்டுரையாகும்.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 15.05.2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் யாரும் பிறக்கும் போது கெட்டவர்களாகப் பிறப்பதில்லை. அவனது வாழ்வியல் அரங்கேறுகின்ற சமூகத்தளமே ஒருத்தனை நல்லவனாகவோ கெட்டவனாகவோ செதுக்கி விடுகின்றது. சமூகத்தளம் என்று சொல்லும் போது அவனது பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலை, பல்கலைக்கழகம், வேலைத்தளம் மற்றும் ஏனைய சமூக உறுப்பினர்கள் என யாவரையும் குறிக்கும்.

இன்றைய உலகம் நவீனத்தால் அலங்கரிக்கப் பட்டுக்கொண்டிருந்தாலும் அதைக் கையாளத்தெரியாமல் மனித சமூகம் தடுமாறிக்கொண்டிருக்கின்றது. அந்தத் தடுமாற்றமே உலகில் ஆங்காங்கே அரங்கேறிக்கொண்டிருக்கும் அதிசயமான குற்றச் செயல்களுக்குக் காரணமாய்க்கிடக்கின்றன. கையடக்கத் தொலைபேசி, கணணி, தொலைக்காட்சி என நவீனங்களை அறிமுகப்படுத்த முடிந்த இந்த அறிவியலுக்கு அதைக் கையாள்வது குறித்த நேரான வழிகளைக் காட்ட முடியவில்லை. இதனால் இன்றைய சமூக உறுப்பினர்கள் உளவியல் நோயாளிகளாக மாறி வருகின்றனர்.

இனி ஒட்டுமொத்த மனித சமூகமும் விளிப்படைய வேண்டிய தேவையை உலகளாவிய ரீதியில் அரங்கேறிக்கொண்டிருக்கும் பல குற்றச் செயல்கள் உணர்த்திக்கொண்டிருக்கின்றன. அவ்வாறான உலக வரலாறு இதுவரை கண்டிராத குற்றச் செயலாகவே அண்மையில் எமது நாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடிப்பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக்கொலைச் சம்பவம் அமைந்துள்ளது.

2013.04.08ம் திகதி நள்ளிரவில் 48 வயதுடைய சிவகுரு எனும் வர்த்தகரும் அவரது மனைவியான 41 வயதுடைய சுந்தரமூர்த்தி விப்ராவும் படுக்கையறையில் வைத்துப் பரிதாபமாக படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலைகளுக்கான காரணம் என்ன?
யார் இந்தக்கொடூரத்தைச் செய்தனர்?
வியாபாரத் தகராறுதான் இதற்குக் காரணமாக இருக்க முடியும்?
ஏதாவது பொருளாதாரப் பிரச்சினை காரணமாக இருக்குமோ?
என்றெல்லாம் எல்லோரும் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்க கொஞ்சம் கொஞ்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் கசிந்து மனிதாபிமானம் உள்ள அனைவரது உயிரையும் ஒரு கணம் உறையச் செய்தது. தமது பெற்றோரை 16 வயதுடைய மகளே கொலை செய்யக் காரணமாக இருந்த செய்தி கேட்டு கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியவில்லை. தன் பெற்றோரைக் கொலை செய்ய தன் காதலனுடன் சேர்ந்து திட்டம் தீட்டி, அவர்களைக் கொல்லுவதற்கு டோச் லைட் அடித்து வழிகாட்டி, அப்பாவின் கண்களைத் தோண்டியெடுக்குமாறு கட்டளையிட்டிருக்கிறாள் அந்தப் 16 வயதுப் பெண். இந்தக் கொலையை அரங்கேற்றிய மூவரும் குறித்த பெண்ணுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் 16 வயதான மாணவர்களே.

போதைப் பொருள் பாவனை...
16 வயதிற்குள் 6 காதலன்கள்...
2 தடவைக் கருக்கலைப்பு...

இப்படியாக 16 வயதே நிரம்பிய ஒரு பெண் பிள்ளை சீரழிந்து போகுமளவிற்கான ஏற்பாடுகளை இந்தச் சமூகக் கட்டமைப்புக்கள் ஏற்படுத்தியிருக்கிறதென்றால் நமது மானுடச் சமூகம் எங்கே சென்று கொண்டிருக்கின்றதென்று சிந்திக்கவேண்டியிருக்கின்றது.

ஏற்கெனவே டெல்லியில் மருத்துவத்துறை மாணவிக்கு நேர்ந்த கொடூரத்தில் அதிகம் பங்கெடுத்தவரும் 17 வயதான ஒரு பள்ளி மாணவன்தான் என்ற செய்தியை யாரும் மறந்துமுபோகுமுன்னமே இந்தக் கொடூரமும் அரங்கேறியிருக்கிறது.

இத்தகைய கொடூரங்கள் இப்படியான இளவயதுகளில் அரங்கேற்றப்படுகிறதென்றால் அதற்கான ஒட்டுமொத்தக் காரணமும் பெற்றோரும் பாடசாலைச் சமூகமும்தான் என்றால் அதனை யாரும் மறுக்க முடியாது. ஆகவே பருவ வயதை அடையவில்லை என்பதற்காக இள வயதினர் கொடூரமான குற்றங்களைச் செய்த போதிலும் அவர்களுக்குத் தண்டனை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே அத்தகையோர் இத்தகைய கொடூரங்களை மேற்கொண்டால் அவர்களது பெற்றோருக்கும் பாடசாலை அதிபர் ஆசான்களுக்கும் அதற்கான தண்டனை பகிரப்படும்படியான ஏற்பாடுகள் எதிர்காலத்தில் வந்தாலொழிய இவர்கள் தம் பிள்ளைகளையும் மாணவர்களையும் நல்ல மனிதர்களாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோர்கள்

தற்போது பெற்றோர்கள் பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேற்றில் கவனம் செலுத்துமளவிற்கு அவர்களுக்கு பண்பொழுக்கங்களைக் கற்றுக்கொடுப்பதிலும் மனிதாபிமானம் புகட்டுவதிலும் அக்கறை காட்டுவதாய்த் தெரியவில்லை.

அவர்களது நண்பர்கள் பற்றிய கவனமில்லை, அவர்களது கையடக்கத் தொலைபேசி பாவணை மற்றும் இணையப் பயன்பாடு என்பன குறித்த எந்தவொரு யோசனையும் தற்போது பெற்றோர்களிடமில்லை.

சில பெற்றோர்கள் நடந்துகொள்வதைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது, ஏனெனில் இளமைப்பருவத்துத் தவறுகள் குறித்த முன்னறிவிருந்தும், அந்தப் பருவத்தைத் தாண்டியவர்களாகவிருந்தும் தமது பிள்ளைகள் விடயத்தில் அவர்கள் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள்.

ஒரு பெண்பிள்ளை வீட்டுக்குள் இருந்துகொண்டே பெற்றோருக்குத் தெரியாமல் கைத்தொலைபேசியை அநாவசியமாகப் பயன்படுத்துகிறதென்றால், இரா நேரத்தில் விடிய விடியக் காதலனுடன் பேசுகிறதென்றால், காதலனை அழைத்து தனது படுக்கையறையில் அவர்களுக்குத் தெரியாமலேயே வைத்திருந்துவிட்டு அனுப்புகிறதென்றால், ஏன் இன்னும் சிலர் தமது பெற்றோரின் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தியே இத்தனையையும் செய்கிறார்களென்றால் இத்தகைய பெற்றோரை என்னவென்பது...?

சிலர் தமது பிள்ளை கைத்தொலைபேசி பயன்படுத்துவதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். இன்னும் சிலர் தமது பிள்ளை விடிய விடிய இணையத்தில் உலா வருவதை நாகரிகம் எனக் கருதுகிறார்கள். அவர்கள் எப்படியான இணையத் தளங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கவனிப்பதே இல்லை.

பேஸ்புக் சட்டிங் என்றும் டேட்டிங் என்றும் இந்த இணையப்பாவனையால் தம் பிள்ளை சீரழிவதை தாம் வீட்டிலிருந்தும் கூட இனங்கண்டு அதனைத் தடைசெய்ய முடியாத பெற்றோர்கள் இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

சதா ஆபாச இணையத்தளங்களை பார்வையிடுவோரிடம் மனிதாபிமானம் மங்கிப்போவதாகவும், அவர்களிடம் அன்பு, பாசம் என்பன குன்றிப்போவதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகையோர் உளவியல் ரீதியிலான பாதிப்புக்களுக்கு ஆளாகுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குடும்பத்தோடு வீட்டுக்குள் அமர்ந்து சினிமா பார்க்கிறார்கள். அது எவ்வாறான சினிமா என்பது குறித்துப் பெற்றோர்கள் அலட்டிக்கொள்வதில்லை. இன்று வருகின்ற ஏராளமான சினிமாக்களில் குறைந்தது ஒரு காட்சியிலாவது பாலியல்சார் உணர்வுகளைத் தூண்டுவதான விடயங்கள் இல்லாமலில்லை. இவையெல்லாம் தம் பெற்றோருடன் சேர்ந்தே குறித்த பிள்ளை பார்க்கும் போது அதன் பாரதூரம் அப்பிள்ளையின் மனதில் பெரிதாய்த் தோன்ற சாத்தியமில்லை. ஏனெனில் அவை பெற்றோரின் அனுமதியுடன் அவர்களுடன் சேர்ந்தே பார்த்த விடயங்களென்பதாலாகும்.

"அயன்", "குருவி" போன்ற சினிமாக்களைப் பார்த்துத்தான் தனது போதைப் பழக்கம் முதல் கொலைத் திட்டமிடல் வரை தான் பழகியதாகக் குறித்த அந்த 16 வயதுப் பிள்ளை பொலிஸில் வாக்கு மூலம் கொடுத்திருப்பதை இங்கு ஞாபகப்படுத்துகிறேன்.

இன்னொரு அனுபவத்தை இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எனது நண்பனின் தாயார், ஒரு பள்ளி ஆசிரியை. அவர் தன் மகனுக்குச் சொன்ன அறிவுரை இன்னும் என் காதுக்குள் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.
"இப்ப கவனமாப் படிச்சி நல்ல ரிசல்ட் எடுக்கப்பாருடா... யுனிவசிட்டிக்குப் போனப்புறம் நீ இப்ப பண்ணுற மாதிரி ரெண்டு மடங்கு பண்ணிக்கலாம்..."

தாயின் சொல்லை அவன் தட்டவில்லை, படித்து பல்கலைக்கழகம் தெரிவானான். பல்கலைக் கழக வளாகத்தை அண்டிய பகுதியிலுள்ள ATM இயந்திர அறைக்குள் அவனும் தன் காதலியும் கையுமெய்யுமாகப் பிடிபட்டதாகத் தகவல் கிடைத்தது.

இப்படித்தானிருக்கிறது தற்போதுள்ள பெற்றோரின் வழிகாட்டல்கள். இப்படியானதொரு பின்னணியில்தான் மேற்படி ஆச்சரியமளிக்கத்தக்கவாறான குற்றச் செயல்கள் உலகில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

252649

**பாடசாலைகள்**

இன்று பாடசாலைகள் தமது கடமைகளைச் சரியாகச் செய்கின்றனவா? என்ற கேள்விக்கு "இல்லை" என உறுதிப்பட வாதிடுவதற்கு ஏராளமான சான்றுகள் என்னிடமிருக்கின்றன. இருப்பினும் கட்டுரையின் அளவு கருதி அவைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்து மோலோட்டமாய்க் குறிப்பிட விளைகிறேன்.

இலங்கையைப் பொறுத்த வரைக்கும் பெரும்பாலான மாணவர்கள் இலவசக் கல்வி வழங்கும் பாடசாலைகளிலேயே கல்வி கற்கிறார்கள். இலவசப் பாடசாலைகளோ தமது இயலாமை மற்றும் அக்கறையின்மை என்பவைகளால் மாணவர்களைப் பிரத்தியேகக் கல்வி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கின்றன. இந்தக் கைங்கரியத்தைத் தவிர தற்போதைய பாடசாலைகள் பெரிதாய் ஒன்றும் கிழித்துவிடுவதாய்த் தெரியவில்லை.

அரச நிறுவனங்களின் அசமந்தப்போக்கிற்கான நல்லதோர் உதாரணமாக இன்றைய அரச பாடசாலைகளைக் குறிப்பிட முடியும். மாணாக்கர் பிரத்தியேக வகுப்புக்களில் கற்றதன் விளைவாய்க் கிடைக்கும் பெறுபேறுகளை வைத்துத் தம்பட்டம் அடித்தல் மற்றும் ஆங்காங்கே கிடைக்கின்ற விளையாட்டு போன்ற இணைப்பாட விதான வெற்றிகளுக்காய் பெனர் அடித்து பள்ளி முன்றலில் கட்டுதல், ஊர்வலம் கொண்டு வருதல் என்பவை தவிர மாணாக்கரின் பண்பாட்டொழுக்க விருத்திக்காய், மனிதாபிமானம் வளர்ப்பதற்கு மற்றும் வழிகாட்டுவதற்கு இன்றைய பாடசாலைகளில் என்னென்ன வேலைத்திட்டங்கள், முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவென்றால் பாடசாலை அதிபர் ஆசான்களிடத்தில் காத்திரமான விடையில்லை.

எத்தனையோ குற்றச் செயல்கள் இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெருகிக்கிடந்தும் அவைகள் குறித்து மாணவர்களை விளிப்பூட்டி வழிப்படுத்துவதற்கான எந்த முன்னெடுப்புமின்றி காலத்தைக் கடத்துவதிலேயே அதிபராசான்கள் குறியாயுள்ளனர். அவர்கள் போராடுவதெல்லாம் சம்பள அதிகரிப்புக்காக மாத்திரமே.

மாணவர்கள் தவறான காதல் தொடர்புகளால் நாளுக்கு நாள் பாதிப்படைந்து கொண்டேயிருக்கிறார்கள். இன்று தேவையற்ற கைத்தொலைபேசிப் பாவணை மற்றும் ஆபாச இணையத்தளப் பாவணை என மாணவர்கள் மத்தியில் பரவிக்கொண்டிருக்கும் தீய பழக்க வழக்கங்களிலிருந்து மாணவ சமூகத்தைப் பாதுகாப்பதற்கு இதுவரை இலங்கையில் எந்த அரச பாடசாலையாவது இது தொடர்பிலான விளிப்பூட்டும் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதாகத் தகவல்களில்லை.

இதுவொன்றும் ஓரிரு நாட்களில் காலையாராதனையில் பேசித் தீர்வு காணவல்ல விடயமல்ல. பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தமது மாணவர்களை இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் கண்காணித்து வழிப்படுத்த வேண்டும்.

இள வயதினரிடத்தில் மனிதாபிமானம் வளர்க்கும் வேலைத்திட்டத்தை வீட்டில் பெற்றோரும் பாடசாலையில் அதிபராசான்களும் கட்டாய பாடத்திட்டமாக்க வேண்டும். இனிமேலாவது மாணவர்களை மனிதர்களாக்குவது குறித்து யாவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும். அன்றேல் இன்னும் பல ஆச்சிரியமிக்க கொடூரங்களை எமது மானுடச் சமூகம் அனுபவிக்க வேண்டியேற்படும்.

II II II

## கவனிக்குக:

இக்கட்டுரையில் பெற்றோர்கள், பாடசாலைகள், அதிபர், ஆசான்கள் என்றெல்லாம் குறிப்பிட்டுச் சாடுவது தமது கடமைகளைச் சரியாகச் செய்யாதவர்களை மாத்திரமே. ஆகவே தமது கடமைகளைச் சரியாகச் செய்யும் எந்தப் பெற்றோர், அதிபர், ஆசான்கள் ஆகியோர் யாரையும் அந்தப் பதங்கள் குறித்து நிற்கவில்லை என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு தமது கடமைகளைச் சரியாகச் செய்யும் எந்தப் பெற்றோரும், அதிபராசான்களும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எதனையும் கண்டுகொள்ளத் தேவையில்லை என்பதையும் பணிவுடன் அறியத்தருகிறேன்.

நல்ல பெற்றோர்களாலும் நல்லாசான்களாலும் மாத்திரமே எமது மானுடத்தின் மகத்துவத்தைப் பாதுகாக்க முடியும்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

**- ரா.ப.அரூஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "அதுவும் சரிதான், இதுவும் பிழையில்லை!"

இலங்கை ஒரு பல்லின தேசம். இங்கே கனிசமான அளவு இஸ்லாமியர்கள் வாழ்கிறார்கள். இங்கு பல்வேறு இஸ்லாமிய இயக்கங்களும் இயங்கிவருகின்றன. இவை மக்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்த ஒன்றாகவும் காணப்படுகின்றன. ஏனெனில் இலங்கை இஸ்லாமியர்கள் சமயக் கட்டுக்கோப்பினை பெரிதும் மதித்து நடப்பவர்கள். இவ்வாறானதொரு சூழலில் இலங்கை முஸ்லிம்களின் அரசியலில் இஸ்லாமிய இயக்கங்கள் ஆற்றவேண்டிய பங்களிப்பு குறித்த ஒரு பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 05.11.2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியலில் இஸ்லாமியர்களின் நிகழ்காலமும் எதிர்காலமும் சங்கடமான நிலையை சந்தித்துக்கொண்டும், சந்திக்கவும் இருப்பதனை உணரமுடிகிறது. இந்த நிலைமைக்கு இச்சமூகத்தைச் சார்ந்த ஒட்டுமொத்த உறுப்பினர்களும்தான் காரணம் என்றால் அதை மறுத்துப்பேச முடியாதுள்ளது.

இலங்கை இஸ்லாமியர்கள் தற்போது அரசியல் ரீதியிலான வழிகாட்டல்கள் எதுவுமின்றி தனித்து விடப்பட்டதனைப் போன்றதொரு நிலை நிலவிக்கொண்டிருக்கின்றது.

இதனால் என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் மக்களும் வாழ்வாதாரத் தேடல்கள் குறித்தே கவனித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களது அரசியல் அனுபவிப்புக்கள் பூச்சியமாகவே இருக்கின்றன. இவர்களை வைத்து அரசியல் செய்வோர் இவர்களுக்காய் எதுவுமே செய்யாத நிலையில் இவர்களின் வாக்களிப்புத் தொடர்வதுதான் பொதுமக்கள் செய்கின்ற தவறு என்று சொல்கிறேன்.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரைக்கும் இஸ்லாமியர்களின் அரசியலுக்கென்று ஒரு கொள்கையோ, ஒரு இலக்கோ இனங்காணப்படாமலேயே இயங்கிக்கொண்டிருப்பதையே காணமுடிகிறது. ஆனால் இவர்களை வைத்து அரசியல் செய்யும் தலைமைகள் தங்களுக்கான சொந்த இலக்குகளை ஒவ்வொரு தேர்தலின் பின்னும் அடைந்துகொள்கிறார்கள்.

கொழும்பில் வீடு வாசல்
சொகுசான வாகனங்கள் - தம்
சொந்தங்களின் பேரில் வங்கிக்கணக்குகள்
அரச செலவில் சுகபோகப் பயணங்கள்.

இப்படியாக நீண்டு செல்லும் தலைமைகளின் இலக்குகள் எப்போதும் நிறைவேறிக்கொண்டே இருக்கின்றனவே தவிர இவர்களது பொய் வாக்குகளை நம்பி வாக்களித்தவர்கள் அரசியல் அநாதைகளாக நிற்கிறார்கள். இங்கு எந்த இஸ்லாமியனிடமும் உங்களது சமூகத்தின் அரசியல் இலக்கு, கொள்கை எதுவெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டால் அவனால் தீர்க்கமான விடை சொல்ல முடிவதில்லை. ஏனெனில் அவ்வாறானதொரு எந்த வழிகாட்டல்களும் அவனது தலைமையால் அவனுக்கு வழங்கப்படவில்லை.

இங்கு காலங்காலமாக என்ன நடந்துகொண்டிருக்கிறதென்றால்– சகோதரச் சிறுபான்மையினர் உரிமைக்காய் குரல்கொடுப்பார்கள், போராடுவார்கள். இவர்களோ ரெண்டுங்கெட்டான் நிலையில் அமைதி காப்பார்கள் அல்லது ஆளும் அரசுக்கு வால் பிடிப்பார்கள். இறுதியில் தீர்வு என்று வருகிறபோது மட்டும் பிச்சைத் தட்டை ஏந்தி நிற்பார்கள்.

வாழுகின்ற தேசத்தில் தமக்கான உரிமைகளைப் பெறுவதற்கும் அநீதிகளுக்கெதிரான அதட்டல்களை நியாயமான முறையில் அணுகுவதற்கும் இன்று நேர்மையான அரசியல் வழிகாட்டல்கள் இஸ்லாமியர்களுக்குத் தேவைப்படுகின்றது. ஆனால் இங்குள்ள இஸ்லாமிய அரசியல் தலைவர்களும் சரி, இஸ்லாமிய இயக்கங்களும் சரி அந்த விடயத்தினை எந்த அளவிற்கு முன்னெடுக்கின்றனர் என்று பார்த்தால் சிலாகித்துச் சொல்லுமளவிற்கு எதுவுமே இல்லை.

தமது சமூகத்திற்கெதிரான திட்டத்தை யார் வகுக்கிறார்களோ அவர்களுக்கெதிராக அறிக்கை விட்டுவிட்டு பின்வழியால் அவர்களிடமே சென்று "அரசியலில் இதெல்லாம் சகஜம்தான்" என்று சொல்லி ஒன்றாகத் தேநீர் அருந்துகிற தலைமைகளுக்குத்தான் இலங்கை இஸ்லாமியர்கள் இன்று வாக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே இந்த இழிநிலைக்கு அவசரமாய் ஒரு தீர்வு காணவேண்டியது அவசியமாய் இருந்துகொண்டிருக்கிறது. அரசியல் ரீதியிலான இஸ்லாமியத் தலைமைத்துவங்கள் இவ்வாறாக துரோகமிழைத்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இஸ்லாமியர்களுக்கான நல்லதோர் அரசியல் வழிகாட்டல்களை வழங்கவேண்டிய பொறுப்பு சமயம்சார் இயக்கங்களுக்கும் இருக்கிறது எனும் விடயத்தைத் தெளிவுபடுத்தவே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது. ஏனெனில் இலங்கை இஸ்லாமியர்களைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையாக சமய ரீதியிலான கட்டுக்கோப்புக்குள் வாழ்பவர்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. அந்த வகையில் அவர்களுக்கான அரசியல் வழிகாட்டல்களையும் அழகிய முறையில் எடுத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு இஸ்லாமிய இயக்கங்களுக்கு இருக்கிறது.

தற்போதுள்ள இஸ்லாமிய அரசியல் தலைமைகளின் தாறுமாறான போக்குகளைக் கண்டித்தோ அல்லது அவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாத்தோ மக்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கொள்கையை, அடைய வேண்டிய இலக்குகளை இலங்கையில் இருக்கின்ற இஸ்லாமிய இயக்கங்கள் பிரகடணப்படுத்தி மக்களை வழிநடாத்த வேண்டும்.

ஆனால் அவ்வாறான எந்த முன்னெடுப்புக்களும் இங்கு நடைபெறுவதாய்த் தெரியவில்லை. அதையும் தாண்டி யாராவது ஓரிரு விடயங்களை உதாரணமாய்ச் சொல்ல வந்தாலும் அவற்றின் பின்னணியைப் பார்த்தால் எந்தவொரு அரசியல் முதிர்ச்சியுமற்ற செயற்பாடுகளாகத்தான் அவற்றைக் காணமுடிகின்றன. தனித்துவத்திற்காய் குரல் கொடுத்தல் என்ற பேரில் குறித்த சமய ரீதியிலான ஊடகம் செய்வதோ அரசியல் செய்வதோ இலங்கையைப் போன்ற பல்லின தேசத்தில் பலிக்காது என்கின்ற உண்மையை உணர்ந்து அந்த வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்த வழிகாட்டலில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு இடங்களுக்கேற்றாற் போல் பேணப்படுமாறு அமையப் பெறவேண்டும்.

அதைவிடுத்து இஸ்லாம் என்கின்ற அகிலத்தார் அனைவருக்குமான மார்க்கத்தை ஒரு சில செயற்பாடுகளால் கூறு போட்டு அதனடிப்படையில் ஊடகம் செய்வதோ, அரசியல் செய்வதோ, தேசத்தின் மீதான இஸ்லாமிய மயமாக்கல் கனவைக் கட்டவிழ்த்து விடுவதோ இன்றைய சூழ்நிலையில் நல்லதொரு வழிகாட்டலாக இராது. மாறாக இன்னும் பிரிவினைக்கும் பிரச்சினைக்குமே வழிகோலும். இவ்வாறான சில முன்னெடுப்புக்களில் குதித்து அதன் பிள்விளைவுகளை அறிந்து சில இஸ்லாமிய இயக்கங்கள் அந்த ஆசைகளைத் தள்ளிப்போட்டிருக்கின்றன. இவை ஒரு புறமிருக்க நிகழ்கால அரசியல் நிலவரங்களை உணர்ந்து எது சரி, எது தவறு என்கிற விடயத்தைத் தமது சமூகத்தினருக்கு உறுதிப்பட எடுத்தியம்ப வேண்டிய கட்டாயம் தற்போது இஸ்லாமியர்களின் சமயம்சார் இயக்கங்களின் மீதுள்ளது.

ஆனால் இதுவரைக்கும் அவ்வாறானதொரு எந்த வழிகாட்டலையும் இந்த இஸ்லாமிய இயக்கங்கள் மேற்கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியது. இருக்கின்ற இஸ்லாமிய அரசியல் தலைமைத்துவங்களின் பிழையான போக்குகள் மீதான கருத்துக்களை பகிரங்கப்படுத்தி மக்களுக்கு விளிப்புணர்வு எற்படுத்தவோ, இருக்கின்ற அரசியல் அமைப்புக்களில் குறைந்த பட்சம் ஒப்பீட்டு ரீதியிலாவது எது சிறந்தது என்பதை பகிரங்கமாக அடையாளப்படுத்தாமலோ மிதவாதப் போக்கைக் கடைப்பிடிப்பது ஆக்கபூர்வமானதல்ல என்பதைப் பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

*"உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையைத் தெரிந்துகொண்டு அதை மறைக்கவும் செய்யாதீர்கள்" (அல்குர்ஆன் 2:42)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அரசியல் வழிகாட்டலின்றிக் கிடக்கின்ற இஸ்லாமியர்களுக்கு அவர்களை நிகழ்கால நிர்க்கதியிலிருந்து காப்பாற்றவல்ல வழிகாட்டல்களை வழங்கவேண்டும். இந்த வழிகாட்டல் இஸ்லாமியர்கள் நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள வழி செய்யவேண்டும்.

தற்போது இஸ்லாமியர்களுக்கென்று அரசியல் செய்யும் அரசியல் தலைமைகள் செய்துகொண்டிருக்கின்ற சுயநலக் கூத்துக்களை, யாருக்கும் சார்பின்றி பகிரங்கமாக மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். இப்படியானவர்களுக்கு வாக்களிப்பது பாவத்திற்குத் துணைபோகும் காரியம் என்றும் அதற்கு நாமே ஒத்துழைப்பு வழங்கிவிட்டு புலம்புவதில் அர்த்தமில்லை என்றும் உணர்த்தவேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்கள் ஒரு பெரும்பான்மைச் சமூகத்தினரால் ஒடுக்கப்படும் போது அதிலிருந்து தம்மைப்பாதுகாத்துக்கொள்ள அந்தச் சிறுபான்மைச் சமூகங்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்றும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் பிரிவினை வளர்த்தல் ஆபத்துக்கே வழிகோலுமென்றும் எடுத்துக்கூற வேண்டும்.

எமக்கான அரசியல் கொள்கை, இலக்கு இப்படித்தான் இருக்கவேண்டும் என்றும் அது நடைமுறைப்படுத்தப் படும்போது மாற்று மதத்தவர்களும் மதிக்கும்படி அமையும் என்றும் வரையறை செய்து கொடுக்கவேண்டும். எத்தனை பேர் எந்தக் கூட்டத்தின் பின்னால் நிற்கிறார்கள் என்ற அளவை விடவும் எந்தக் கூட்டம் சமூகத்திற்கான குரலாய் உள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு அடையாளங்காட்ட வேண்டும். ஏனெனில் இஸ்லாத்தின் துவக்கம் சிறிதளவு எண்ணிக்கையிலிருந்துதான் ஆரம்பமானது. இனவாதம் பேசுவதும், துவேசத்தைக் கக்குவதும் சுயநலத்திற்கான அடையாளமே தவிர அது சமூக நலனுக்கான நடைமுறையல்ல என்பதையும் அந்த வார்த்தைகளில் உணர்ச்சிவசப்பட்டு மாட்டிக் கொள்ளல் அபாயமானது என்பதனையும் எடுத்தியம்பவேண்டும்.

மேற்படி விடயங்கள் பற்றிய தெளிவை இஸ்லாமியர்கள் மத்தியில் அவசியம் ஏற்படுத்தியாக வேண்டிய காலகட்டத்திலேதான் தற்போதைய இலங்கை அரசியல் நகர்ந்துகொண்டிருக்கிறது. அதைவிடுத்து இஸ்லாமிய இயக்கங்களும் தமது இருப்புக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுவதைப்போல, "அதுவும் சரிதான், இதுவும் பிழையில்லை" என்கின்ற கணக்கில் இருந்துவிட்டால் எதிர்கால அரசியல் தீர்வில் இஸ்லாமியர்களுக்கு "அரசனுமில்லை, புருஷனுமில்லை" என்கின்ற நிலை ஏற்படும் வாய்ப்புக்கள் நிறையவே தென்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அரசியலில் யார் பிழையான விடயங்களை முன்னெடுத்தாலும் அதனை வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் மக்கள் மத்தியில் உறுதிப்படத் தெரிவித்து அத்தகையோரை நிராகரிக்குமாறு இஸ்லாமியர்களை அறிவுறுத்தும் திராணியை இஸ்லாமிய இயக்கங்கள் தங்களில் உற்பத்தி செய்யவேண்டிய அதே சமயம் நல்லதொரு அரசியல் கலாசாரத்திற்காய் எந்தவொரு அமைப்பு உழைத்தாலும் முயற்சித்தாலும் அதையும் மக்களுக்கு அடையாளங்காட்டி ஆதரவு வழங்கவேண்டிய கடமை இஸ்லாமிய இயக்கங்களைச் சாரும். மாறாக இஸ்லாமிய இயக்கங்களின் கனவு, இலக்கு, இருப்பு- இதனால் சேதமாகிவிடும் என்று அஞ்சி அதைக் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டால் இந்த இஸ்லாமிய இயக்கங்களும் சுயநலப் பட்டியலுக்குள் சுருண்டுவிட்டதாகவே கொள்ளவேண்டிவரும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தமிழர்கள்: முள்ளிவாய்க்காலுக்கு முன்னரும் பின்னரும்

இலங்கையில் தமிழர்கள் பிரதான சிறுபான்மையினராக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் முப்பது வருடங்களாகப் போர்ச் சூழலில் சொல்லொண்ணா இடர்பாடுகளை எதிர்கொண்டனர். இலங்கையில் போர் ஓய்ந்ததன் பின்னரும் கூட ஏதோவொரு அடக்குமுறைக்குள் சிக்கித் தவிப்பதாக அவர்கள் உணருவதனையே அவதானிக்க முடிகிறது. யுத்த காலப்பகுதியிலும் யுத்தம் முடிவுற்றதன் பின்னருமாக அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சவால்கள் குறித்த பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 12.11.2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழும் இந்த தேசத்தில் பிரதான சிறுபான்மையினரான தமிழ் மக்கள் காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டே வருகின்றமையே வடுவாகிவிட்ட வரலாறு. ஒரே தேசத்தவர்கள் என்று நோக்கவேண்டிய நிலையிலிருந்து விலகி இனரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகமாகவே பேரினவாதம் தமிழ் மக்களை நடாத்தி வருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இந்த அடக்குமுறை அரசியலுக்கெதிரான போராட்டம் அரசியல் ரீதியாக ஆரம்பித்தது. இந்தப் பேரினவாத அடக்குமுறையிலிருந்து தமிழ் மக்களைக் காக்க - அரசியல் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அல்லது வெற்றியளிக்கும் படியான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே அரசியல் ரீதியிலான தீர்வில் நம்பிக்கையிழந்ததன் விளைவு அல்லது தான் தலைவராக வேண்டும் என்ற உள்மனத்து ஆசை ஆகிய காரணத்தினால் இந்த அரசியல் போராட்டத்தில் இருந்து மாற்றமாக இலங்கையில் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தது. இந்தப் போராட்டத்தின் ஆரம்ப நோக்கம் முழுக்க முழுக்க தமிழ் மக்களின் விடிவுக்கெனவே அமைந்திருந்த போதிலும் காலவோட்டத்தில் அந்த நோக்கம் தாறுமாறாகிப்போனது என்பதனை எவரும் மறுத்துவிட முடியாது. இந்தக் கருத்தை யாராவது மறுத்துப்பேச முனைந்தால் அவர்கள் மனச்சாட்சியை கழற்றி வைத்திருந்தால் மட்டுந்தான் அது சாத்தியம்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் தமிழ் மக்கள் முழுக்க முழுக்க நன்மையை மட்டுமே அனுபவித்தனர் என்று எவரும் சொல்லிவிட முடியாது. விடுதலைப்புலிகளாலும் தமிழ் மக்கள் ஏதோவொரு அடக்கு முறைக்கே உட்படுத்தப்பட்டிருந்தனர். எத்தனையோ தமிழர்கள் விடுதலைப் புலிகளாலும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள், கடத்தப்பட்டிருக்கிறார்கள், கப்பம் வசூலிக்கப்பட்டிருக்கிறார்கள். இவையனைத்தையும் விட மேலாக விருப்பமின்றியே எத்தனையோ இளைஞ, யுவதிகள் ஆயுதமேந்தவேண்டிய கட்டாயத்திற் குட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். எத்தனையோ புலம்பெயர் தமிழர்களிடம் அவர்களது விருப்பத்திற்கு மாறாகப் பணம் பறித்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் ஏந்தவேண்டிய எத்தனையோ சிறார்கள் துப்பாக்கியேந்தவேண்டிய கட்டாயத்திற்குட்படுத்தப் பட்டிருந்தார்கள். ஓராயிரம் பெற்றோர்களின் கண்ணீருக்கு இந்த விடுதலைப்புலிகள் காரணமாயிருந்திருக்கிறார்கள். தமது கருத்துக்கு சற்று மாற்றமாய் பேசிய எத்தனையோ தமிழ் புத்திஜீவிகளை விடுதலைப் புலியினர் போட்டுத்தள்ளியிருந்தார்கள். இந்தக் கொடுமைகளோடு சேர்த்து, ஒரு குடப்பாலுக்கு ஒரு துளி விசம் என்பது போல தமிழர்கள் யாவரையும் ஆயுததாரிகள் என்றும் தற்கொலைக்குண்டுதாரிகள் என்றும் சிங்கள இராணுவத்தினர் வாட்டியெடுக்கவும், சந்தேகத்தின் பேரில் கைது செய்யவும், சித்திரவதைக்குள்ளாக்கவும் இந்த விடுதலைப் புலிகள் இயக்கம் காரணமாயிருந்தது.

இந்நிலைமைகளுக்கு நடுவே சிக்கித் தவித்த எத்தனையோ உள்ளங்கள் ஏன் தமிழர்களாய்ப் பிறந்தோம் என எண்ணிய நாட்கள் ஏராளம். அதிகாரங்கள் முழுவதும் தமது கரங்களிலேயே இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ் ஈழம் குறித்த ஏனைய போராட்ட இயக்கங்களின் தலைவர்களை விடுதலைப்புலியினர் கொன்றொழித்தனர். சிங்கள எதிர்ப்புத் தன்மையை குருட்டுத் தனமாகப் பாவிக்கத் தொடங்கியதன் விளைவு அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்றொழிக்க ஆரம்பித்தனர். இந்நிலைமையினால் சிங்கள அரசினால் தமிழ் அப்பாவிப் பொதுமக்களும் போராட்டக்காரர்களாகவே பார்க்கப்படவும் சுட்டுத் தள்ளப்படவும் விடுதலைப் புலிகள் காரணமாயினர்.

இவ்வாறாக நகர்ந்த இந்த யுத்தம் முடிவுறும் வரையிலும் தமிழ் மக்கள் யாரும் நிம்மதியாய் இருக்கவில்லை. முடிந்ததன் பின்னும் அவர்கள் நிம்மதியாய் இல்லை.

இலங்கை அரசு 30 வருட காலமாக நாட்டில் நிகழ்ந்துவந்த இந்த யுத்தத்தை முள்ளிவாய்க்காலுடன் முடித்துவைத்தது. முடித்த கையோடு தமிழர்களின் உரிமை மீதான யுத்தத்தினை கட்டவிழ்த்து அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது. விடுதலைப்புலியினரால் ஆனாலும் சரி, இலங்கை அரசாங்கத்தினால் ஆனாலும் சரி தமிழ் மக்கள் துயரங்களையே அனுபவித்தனர், அனுபவித்துவருகின்றனர் என்பதை உணர்த்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

முள்ளிவாய்க்காலுடன் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலியினருக்குமான யுத்தம் முடிவுக்கு வந்தது. ஆனால் அதன் பின்னரோ தமிழர்களுக்கும் அரசாங்கத்திற்கிடையிலுமான யுத்தமொன்று ஆரம்பமாகியிருக்கிறது. இது உரிமைப் பறிப்பு யுத்தம். இந்த யுத்தத்தில் தமிழர்கள் சொல்லொண்ணா இடர்பாடுகளை அனுபவித்து வருகின்றனர். இந்தப் பேரினவாதிகளுக்கு நடுவே தமிழ் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி ஒட்டுமொத்த சிறுபான்மையினரும் ஒரு வகையான ஊமை அடக்குவாதத்தினுள் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்நிலைமையை வைத்து உலகின் நாலா பாகங்களிலும் அரசியல் காய்நகர்த்தல்கள்தான் இடம்பெறுகின்றனவே தவிர பொதுமக்களுக்கான தீர்வு எனும் விடயம் இன்னும் சூனியமாகவே இருக்கின்றது.

யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் விடயத்தில் அரசாங்கம் காட்டும் அசட்டுத்தனமான அக்கறை கண்களைக் கசியச் செய்கின்றது. யுத்தத்தினால் வீடுகள் அழிந்துபோய்விட்ட போதிலும் அவர்களது வீடுகளை நிர்மானிக்கும் பணி ஆமை வேகத்தில்தான் நகர்ந்துகொண்டிருக்கிறது. அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான வாழ்விடத்தை அமைத்துக்கொடுப்பதில் இப்படியான அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கும் அரசாங்கம், வீதியென்றும் பாலமென்றும் வெளியே அபிவிருத்தி அரசியல் செய்வது எந்த அளவு நியாயம்?

அங்குள்ள மக்களின் கோயில்களும் ஆலயங்களும் பள்ளிவாயல்களும் சீரழிந்துகிடக்கும் நிலையில் அங்கே விகாரைகள் கட்டப்பட்டு, புத்தர் சிலைகள் வைக்கப்படுவது நெஞ்சு கொதிக்கும் வேதனை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யமுடியாமல் அல்லல் படும் போது அரசாங்கமோ அங்கு பௌத்த மதத்தைப் பரப்பும் தனது செயற்பாட்டைப் பரவலாக்கம் செய்துவருகிறது.

அதுமட்டுமல்லாமல் யுத்தத்தால் நேரடியாகப்பாதிக்கப் பட்டவர்களின் விவசாய நிலங்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. நிலத்தை நம்பி வாழ்வாதாரத்தை ஓட்டும் எத்தனையோ மக்கள் இதனால் ரொம்பவும் சிரமப்படுகிறார்கள். பாதுகாப்பு என்று சொல்லி மக்களின் வயிற்றிலடிக்கும் நிலையை இந்த அரசாங்கம் தமிழ் மக்கள மீது தற்போது கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

யுத்தம் முடிந்ததன் பிற்பாடு தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியலில் இவ்வாறான சிரமங்களை ஏற்படுத்திவரும் அரசாங்கம் அவர்களது உரிமை தொடர்பிலான தீர்வு விடயத்தில் ஒரு வகையான சாக்குப்போக்கு நிலையைக் காட்டி மக்களையும் உலகையும் ஏமாற்றிக்கொண்டே இருக்கின்றது. சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த உரிமைகளையும் பறித்தெடுத்து அவர்களை நடுத்தெருவில் நிறுத்தும் தந்திரோபாயத்தையே அரசாங்கம் கையாண்டு வருவதனை அதன் ஒவ்வொரு செயற்பாடும் நிரூபித்துக்கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மையினரின் சுதந்திர அரசியலுக்காகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையை ஒழித்துக் கட்டுவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் எல்லா வேலைத்திட்டங்களும் வெளிப்படையாகத் தெரிந்தும் கூட இதுவரைக்கும் அதற்கு எதிரான அரசியல் ரீதியிலான போராட்டமோ மக்கள் போராட்டமோ இடம்பெறாமலேயே இருக்கிறது. இந்த நிலைமைக்கு இரண்டு காரணங்கள். ஒன்று அரசியல் ரீதியிலான போராட்டங்கள் நடாத்துவதற்கு சிறுபான்மை அரசியல் தலைமைத்துவங்களுக் கிடையில் ஒற்றுமையோ அல்லது அதற்கான முதுகெலும்போ அற்ற நிலை. அடுத்தது இந்த அரசின் நடவடிக்கைகளுக்கெதிராக குரல்கொடுக்க பொதுமக்கள் அஞ்சுகிறார்கள்.

"நீதி தேவதைகளுக்கே" இங்கு நீதி கிடைக்காத போது அப்பாவிப் பொதுமக்களாகிய தம்மை சுட்டுப்பொசுக்கினால் கேட்க யார் இருக்கிறார்கள் இந்த உலகில்? என பொது மக்கள் மிகையாகப் பயப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் பெரும்பாலான பொதுமக்கள் அரசியல் சீர்திருத்தம், யாப்பு போன்ற விடயங்களில் போதிய அறிவு இல்லாமலும் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் தாம் வாக்களித்து தெரிவு செய்த பிரதிநிதிகள் கவனித்துக்கொள்ளுவார்கள் என்கின்ற நியாயமான தைரியத்திலும் இருக்கிறார்கள்.

இவையனைத்தையும் அரசாங்கம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சிறுபான்மையினரை ஒரங்கட்டும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. "திவிநெகும", "13ம் திருத்தச் சட்டத்தை அகற்றுதல" ஆகிய கோசங்களெல்லாம் சிறுபான்மையினரை சக்தியற்ற கூட்டமாக மாற்றி தமது விருப்புக்கு ஆடுவதற்கான தந்திரோபாயங்கள்தானே தவிர வேறொன்றுமில்லை. அரசாங்கத்தின் இந்தக் கனவு நிறைவேறிய மறுகனமே இங்குள்ள சிறுபான்மைத் தலைவர்கள் கணக்கிலும் எடுக்கப்படாதவர்களாக மாறிவிடுவார்கள் என்கின்ற யதார்த்தத்தை சிறுபான்மை அரசியல் தலைமைத்துவங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தச் சுயநலத்திற்காகவாவது மேற்சொன்ன இத்தகைய அரசின் முன்னெடுப்புக்களுக்கு எதிராக அவர்கள் செயற்பட்டு சிறுபான்மையினரின் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும்.

இப்படியாக தமிழ் மக்கள் யுத்த முடிவுக்கு முன்னரும் சரி அதற்குப் பின்னரும் சரி ஏதோ ஒரு வகையில் துன்புறுத்தப்பட்டும் பாதிக்கப்பட்டுமே வருகிறார்கள். இனியும் இந்த நிலை இவ்வாறே தொடர்ந்தால் முடியுமானவர்கள் வெளிநாடுகளில் குடியேறுவார்கள். முடியாதவர்கள் உயிரைக் காக்கவும் சாகும் வரை வாழ்வை ஓட்டவேண்டுமே என்ற நிர்ப்பந்தத்திற்காகவும் போதி மரத்தின் கீழ் தஞ்சமடையவேண்டிய நிலைதான் ஏற்படும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுப்புச் சந்தை வியாபாரத்தை திறைசேரி வெள்ளையாக்கியுள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தீர்வையற்ற வாகன அனுமதியை திறந்த சந்தையில் விற்பனை செய்வதற்கான அனுமதியை 2012 இல் திறைசேரி வழங்கியது. இதற்கு முன்னர் இத் தீர்வையற்ற வாகன அனுமதி கறுப்புச் சந்தையிலேயே விற்பனை செய்யப்பட்டது. அன்றேல் விற்பனை செய்யவேண்டுமாயின் 5 வருடங்கள் காத்திருக்கவேண்டிய நிலை இருந்தது. ஆனால் தற்போது இதனை விற்பனை செய்வதற்கான அனுமதியை அரசாங்கமே வெளிப்படையாக வழங்கியிருக்கின்றமை குறித்த ஒரு மாற்றுப்பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 17.12.2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் ஆசிரியர்களுக்காகவும் அதிபருக்காகவுமல்ல, மாணவர்களுக்காக!
வைத்தியசாலைகள் வைத்தியர்களுக்காகவும் தாதியர்களுக்காகவுமல்ல,
நோயாளிகளுக்காக!
அரச அலுவலகங்கள் அதிகாரிகளுக்காகவல்ல, பொதுமக்களுக்காக!

இந்த வரிசையில்தான் நாட்டின் பாராளுமன்றமும் அமையவேண்டும்.
பாராளுமன்றமும் அதன் சலுகைகளும் வெறுமனே ஆட்சியாளர்களையும்
அதன் உறுப்பினர்களையும் மட்டும் திருப்திப்படுத்துவதல்ல, அது ஒட்டுமொத்த நாட்டு மக்களின் சொத்து! அங்குள்ளவர்கள் நாட்டு மக்களின் ஏஜென்சிகள்தானே தவிர பாராளுமன்றத்தின் உரிமைக்காரர்களல்ல.

அவர்கள் சில சமயங்களில் அங்கு செல்லலாம். இன்னும் சில சமயங்களில் அங்கு செல்ல முடியாமல் போகலாம். இவையெல்லாம் தீர்மானிப்பவர்கள் நாட்டு மக்கள்தான். பாராளுமன்றத்தின் உரிமையை யாரும் நிரந்தரமாய் எழுதி வாங்கிவிட முடியாது. அது எப்பொழுதுமே பொதுமக்கள் கையில்தான் இருக்கும்.

இப்படியிருக்கையில், அந்தப் பாராளுமன்றத்தின் ஏகபோக சொந்தக்காரர்கள் சமூகம்சார் விடயங்களிலும் சரி, சொந்த வாழ்வியலிலும் சரி சொல்லொண்ணா இடர்பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கையில் அரசோ தமது சொந்தத் தேவை கருதியும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் குளிர்வித்து தமது சொந்தத் திட்டங்களை அமுல்படுத்தும் நோக்குடனும் சலுகை என்ற பெயரில் செய்யும் சில முன்னெடுப்புக்கள் இலங்கையில் ஊழலுக்கு உதாரணமாகிவிடுகின்றன.

அவ்வாறானதொரு செயற்பாடானது அண்மையில் நடந்தேறியது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தீர்வையற்ற வாகனங்களை உடனடியாகத் திறந்த சந்தையில் விற்பனை செய்வதற்கு இலங்கையின் திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி 50 ஆயிரம் டொலர் (6.5 மில்லியன் ரூபா) பெறுமதியான தீர்வையற்ற வாகன அனுமதியைக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லியனுக்கு தமது அனுமதியை விற்பனை செய்ய முடியும். அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்றே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா ஜெயசேன தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக தீர்வையற்ற வாகன அனுமதியை விற்பனை செய்வதற்கு 5 வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலையில் அந்த வியாபாரமானது கறுப்புச் சந்தையில் இடம்பெற்று வந்தது. ஆனால் அண்மையில் திறைசேரி வழங்கிய அனுமதியின் மூலம் அந்தக் கறுப்புச் சந்தை வியாபாரம் வெளிப்படையாவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரமும் தனிமனித வாழ்வியலும் அவ்வளவாக விருத்தி காணாத நிலையில், நாட்டின் பல பாகங்களிலும் வறுமை வாட்டியெடுத்துக்கொண்டும் விலைவாசி மக்களின் கழுத்தை இறுக்கிக்கொண்டும், நாட்டின் கடன்தொகை விண்ணைக் கிழித்துக் கொண்டுமிருக்கையில் பொதுமக்களின் ஏஜென்ஸிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் சொகுசு வாழ்க்கையில் மிதக்க முடிகிறது. அதிலும் அரசாங்கத் தரப்பென்றால் சொல்லவே தேவையில்லை.

நாட்டு மக்களுக்காய் இயங்கவேண்டிய பாராளுமன்றம் இன்று தனி மனிதர்களின் விருத்திக்காய் வித்திட்டு பொதுமக்களை விரக்தியடையச் செய்துகொண்டிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வளவு சொகுசான வாகனங்களும் அதற்கான ஒதுக்கீடுகளும் அவசியம்தானா என ஏற்கெனவே எழுந்துநிற்கின்ற வினாவுக்கு, பொதுமக்களுக்கான சேவைகளைத் திறம்பட வழங்க அவர்களுக்கான பிரயாண வசதி இலகுபடுத்தப்படவேண்டியது அவசியம் என்றொரு விடையிருந்தது.

அப்படியானால் இவ்வாறாக பாராளுமன்றத்தினால் செய்யப்படுகின்ற சலுகையை பாராளுமன்ற உறுப்பினர்கள் விற்று காசாக மாற்றுவதற்கும் அதை அவர்கள் தமது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்துவது தொடர்பிலுமான கேள்வி எழுகின்ற போது மேற்சொன்ன விடை பொருத்தமற்ற ஒன்றாகவே போய்விடுகிறது.

பாராளுமன்றமென்பது வெளியே பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கும் தீர்வு காண்பதற்கும், அவர்களின் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கும் நாட்டின் இறைமையை காப்பதற்கும் என்கின்ற கலாசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபகாலமாக மங்கி, தற்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொந்தப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கும் ஆளுக்காள் சுயலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்குமான கூடமாக மாறி வருவதனை அவதானிக்க முடிகிறது.

தமது சாப்பாட்டுப் பிரச்சினைக்காக பகிஷ்கரிப்பு நடாத்தப்பபோவதாகக் குரல் கொடுப்பதும், சிகப்புப் பகுதி வியாபாரம் ஆரம்பிப்பதற்காக சட்டமூலம் நிறைவேற்ற எத்தனிப்பதும், சாராயக் கடைகளுக்கான உரிமம் கேட்டு சண்டை போடுவதும் என நீண்டு சென்ற பட்டியலில்தான் தீர்வையற்ற வாகன அனுமதியை உடனே விற்பதற்கான அங்கீகாரம் கேட்டும் கோரிக்கை விடுக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெற்றியடைந்திருக்கிறார்கள்.

வெளியே பொதுமக்கள் சார் ஆயிரம் பிரச்சினைகள் கொட்டிக்கிடக்கின்றன. ஒவ்வொரு அதிகாலை விடியலும் ஏதோ அசம்பாவிதத்துடனேயே ஆரம்பிக்கிறது. அதிலும் குறிப்பாக சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நாட்டில் நாளுக்குநாள் பல்கிப்பெருகிக்கொண்டே செல்கிறது.

இவை பற்றியெல்லாம், இப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியெல்லாம் தற்போது பாராளுமன்றத்தில் அவ்வளவாகக் கோரிக்கை விடுக்கப்படுவதுமில்லை, விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் மேற்படி வரிச்சலுகை வியாபாரத்திற்குக் கிடைத்த வெற்றி போல் வெற்றியளிப்பதுமில்லை. ஏனெனில் இது மக்களின் பிரச்சினை. மக்கள் என்ன ஆனாலும் அதுபற்றிக் கவலையில்லை. அனால் பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் குளிர்ச்சியாய் வைத்திருத்தல் தலையாய கடமை என அரசாங்கம் உணருகிறது போல!

நாம் இவர்களைக் கவனித்துக்கொண்டால் இவர்கள் எப்படியாவது மக்களை ஏமாற்றி தேர்தலில் ஜெயிக்கும் கைங்கரியத்தை செய்துவிடுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது அரசாங்கத்திற்கு அலாதியான நம்பிக்கையும் பொதுமக்கள் மீது கவனயீனமும் இருக்கின்றமையினையே இந்த வரிச்சலுகையும் அதை விற்பதற்கான அனுமதியும் காட்டி நிற்கின்றது.

தமது சொந்தத் தேவை என்பதற்காய் ஆளுங்கட்சியென்றும் எதிர்க்கட்சியென்றும் பாராது ஒருமித்துக் கோரிக்கை விடுத்து கறுப்பு வியாபாரமாக இருந்த வரிச்சலுகை வியாபாரத்தை வெள்ளை வியாபாரமாக மாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களின் பிரச்சினைகள் என்று பேசும் போது மாத்திரம் ஆளுக்காள் எதிர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறார்கள். இந்தச் சான்று ஒன்றே போதும், பாராளுமன்றம் தற்போது சுயநலமிகளால் மட்டுமே நிரம்பிவழிகின்றது என்பதைக் காட்ட.

இதனால்தான் இன்று நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மேலும் மேலும் சலுகைகளை அனுபவித்துக் கொண்டும் சொகுசு வாழ்க்கையின் உச்சத்திற்கும் சென்றுகொண்டுமிருக்க ஏனைய வர்க்கத்தினர் அன்றாட வாழ்க்கையையே அல்லலின்றி ஓட்ட முடியாது துன்புற்றுக் கொண்டிருப்பது வேதனையளிக்கிறது. கல்வித் துறை மற்றும் ஏனைய துறைகளிலுள்ளோர் எவ்வளவுதான் போரட்டம் நடாத்தினாலும் அவர்களைக் கடைக்கண்ணால் கூட கண்டுகொள்ளாத அரசு அரசியல்வாதிகளுக்கு மட்டும் இவ்வாறான சலுகைகளை வழங்கிக்கொண்டிருக்கிறது.

இத்தகைய கண்மூடித்தனமான ஏற்பாடுகள் அரசியலில் இருப்பதனால்த்தான் எப்பாடுபட்டேனும் அரசியல்வாதியாக வேண்டும் என்று நிறையப் பேர் கிளம்பி ஊழலை மலிய வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் பல்வேறு வங்கிகளிலும் தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகையாக இருக்கின்ற பெருந்தொகைப் பணமானது பல வருடங்களுக்கு ஏழைகளுக்கு சமுர்த்தி வழங்கப்போதுமானதாக இருக்கின்றது. இத்தகைய கடன்கள் அரசியல் பின்னணிக்காகவும் அரசியல்வாதி களுக்காகவும் தள்ளுபடி செய்யப்படுகின்ற கலாசாரமும் எமது நாட்டில் உண்டு.

அரசியல்வாதிகளின் இத்தகைய எதிர்பார்ப்புக்களுடன் கூடிய அரசியல் பயணத்தினால்தான் அரசியல் ரீதியான அனுபவிப்புக்கள் பொதுமக்களுக்கு மிகக் குறைந்த அளவுக்கே கிடைப்பதற்கு காரணமாக அமைவதுடன் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும் வழிசமைத்து விடுகிறது.

கறுப்புச் சந்தையில் நடைபெற்றுக்கொண்டிருந்த வியாபாரத்திற்கு சட்ட ரீதியான அனுமதியை வழங்கியிருக்கும் அரசு எதிர்காலத்தில் இன்னொரு விடயத்தையும் சலுகை என்ற பெயரில் வழங்கிவிடுமோ என்கின்ற கேள்வி எழுகிறது. அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள் விமான நிலையத்தில் எவ்விதப் பரிசோதனையுமின்றி சௌகரியமாகப் பயணிக்கும் கடவை ஏற்பாடுகள் உள்ளமை யாவரும் அறிந்ததே. சௌகரியத்திற்காய் வழங்கப்படுகின்ற வாகன வரிவிலக்கு அனுமதியை விற்றுக் காசாக்க அனுமதி வழங்கியது போல சௌகரியத்திற்காய் அமைக்கப்பட்டுள்ள விமான நிலையக் கடவை வழியே கடத்தல் பொருட்கள் கொண்டுவருதற்கும் அதன் மூலம் அவர்கள் சம்பாதிப்பதற்கும் அவர்களுக்கு எதிர்காலத்தில் பாராளுமன்றம் அனுமதி வழங்கிவிடுமோ???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சொந்தச் சுகபோகங்களுக்காக அரசியல் செய்பவர்களிடமிருந்து தேசத்தை மீட்டெடுப்பது ஒவ்வொரு குடிமகனதும் அத்தியவசியக் கடமையாகும். பாராளுமன்றப் பிரதிநிதிகள் மக்கள் பிரச்சினையை முன்வைத்து தீர்வு காண்பவர்களாகவும் மக்களோடு மக்களாய் கலந்து, மக்களுக்காக வாழக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். அவ்வாறான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யாதவிடத்து அதன் எல்லா வகையான விளைவுகளையும் மக்களே எதிர்கொள்ளவேண்டி வரும்!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் காங்கிரஸ்: ஆவேசப்படுதலும் அடங்கிப்போதலும்

முஸ்லிம் காங்கிரஸின் 24வது பேராளர் மாநாடு 29.12.2012 அன்று தெஹிவளை ஜெயசிங்க மண்டபத்தில் இடம்பெற்றது. அம்மாநாட்டில் அதிகாரப் பகிர்வு குறித்த தீர்மானங்களே முக்கிய இடம் வகித்தன. ஆனால் மாநாட்டை முடித்த கையோடு முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான அம்சமாகத் திகழ்கின்ற "திவிநெகும" சட்டமூலத்திற்கு ஆதரவளித்தனர். இதன் பின்னணியில் எழுதப்பட்டதே இக்கட்டுரையாகும்.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 21.01.2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸின் 24வது பேராளர் மாநாடு கடந்த 29.12.2012 அன்று தெஹிவளை ஜெயசிங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் பெரிதும் அதிகாரப் பகிர்வு பற்றிய கருத்துக்குவிப்புக்களாகவே இருந்தன. மாநாட்டை முடித்த கையோடு அதிகாரப் பகிர்வின் எதிர்ப்பதத்திற்கு உதாரணமாய் விளங்கும் "திவிநெகும" சட்ட மூலத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்தனர்.

முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்கள் கிழக்கு மாகாண சபையில் இச்சட்ட மூலத்திற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் அவர்களை ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதாகக் கூறிக்கொண்டு கட்சியின் தலைமைத்துவம் உட்பட இன்னும் சிலர் பொதுமக்களிடமும் ஊடகங்களிடமும் நல்ல பிள்ளையானார்கள். ஆனால் இன்று அந்த நல்ல பிள்ளைகளே தவறிழைத்து விட்டார்கள்.

இதுகுறித்து அவர்களிடம் வினவும் போது மாகாண சபை உறுப்பினர்கள் "திவிநெகும" சட்டமூலத்திற்கு ஆதரவளிக்கும் போது அச்சட்ட மூலத்தில் எந்தத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லையென்றும் தற்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அதனாலேயே ஆதரவளித்ததாகவும் தெரிவிக்கின்றனர். உங்களால் முன்வைக்கப்பட்ட எந்தத் திருத்தம் சட்ட மூலத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்ற கேள்விக்கு - அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் உள்மனசை ஜோசியம் பார்த்தவர்கள் போல், "எதிர்காலத்தில் பார்ப்போம்", "நிருவாக முறைமையில் இந்தத் திருத்தங்களை உட்படுத்துவது குறித்து யோசிப்போம்" என அவர் சொன்ன வாசகங்களை ஆதாரமாக முன்வைக்கிறார்கள். அத்தோடு "நீங்கள் கொண்டு வந்துள்ள திருத்தங்கள் யாவும் ஆக்கபூர்வமானவை" என அவர் தம்மை குளிர்வித்ததாகவும் நெகிழ்ந்துகொள்கின்றனர்.

இவ்வாறான "பார்ப்போம்"களையும் "யோசிப்போம்"களையும் நம்பியே ஓடிக்கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸை இனி இறைவன்தான் பாதுகாக்க வேண்டும். எப்படித்தான் படித்துவிட்டுப் போனாலும் பரீட்சை மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துவிடும் பள்ளி மாணவன் கதையாய் கட்சியின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் எவ்வளவுதான் பேசப்பட்டு தலையாட்டி ஆமோதித்தாலும் அரச தரப்பினரைச் சந்திக்கும் போது மட்டும் அத்தனை விடயங்களையும் தலைவர் மறந்துவிடுவதாக கட்சியின் முக்கிய உயர்மட்டக் குழு உறுப்பினர் ஒருவர் அங்கலாய்த்தார்.

வெளியே பேசும் போது ஆவேசமாக ரோசமெடுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடைசித் தருணத்தில் மட்டும் அத்தனை விடயங்களையும் பூச்சியத்தால் பெருக்கி விடுகிறார், பெட்டிப்பாம்பாய் அடங்கிவிடுகிறார். இதற்காக அவர் சொல்லும் ஒரே காரணம் "கட்சியைக் காத்தல்" என்பதே. அப்படி யார்தான் அந்தக் கட்சியைவிட்டு எதிரணியில் அமர அவசரப் படுகிறார்கள் என்று ஆராய்ந்தால் அவ்வாறு யாரும் அங்கிருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்தாலும் அது வெறும் பூச்சாண்டியாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் அவ்வளவு ஆக்ரோசமாய் முஸ்லிம் காங்கிரஸை விட்டு விலகித் தேர்தலில் வெற்றிபெறும் வல்லமை அங்கு யாருக்குமில்லை என்பதை சிலரின் அனுபவங்களிலிருந்து புரிந்துகொள்ளமுடியும். ஆனால் இதைக் கட்சியின் தலைவர் புரிந்துகொள்ளாததுதான் வேடிக்கை!

கட்சியைக் காப்பாற்றல் என்னும் காய்நகர்த்தல்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் செல்லுபடியாகும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கடந்த வருடம் ரவூப் ஹக்கீம் கதாநாயகனாய் நடித்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் களம் எனும் சினிமாவில் வில்லனாக இருந்தவர்தான் படத்தின் இயக்குனர் எனும் உண்மை "என்ன சார் நான் நடித்தது சரியா…" எனக் கேட்டுக்கொண்டு அரசாங்கத்தின் பக்கத்திலமர்ந்து ஆட்சியமைத்தலுக்குக் கைதட்டிய போதுதான் யாவருக்கும் புரிந்தது. இந்த விடயத்தை சில ஊடகங்கள் எதிர்வு கூறியிருந்தாலும் மக்கள் அதைக் கண்டுகொள்ளாமல் முஸ்லிம் காங்கிரஸிற்கு வரலாறு காணாத ஆதரவை வழங்கியிருந்தார்கள்.

தற்போதும் தலைவர் ஹக்கீம் ஆங்காங்கே ஆவேசமெடுத்துக்கொள்கிறார். அரசாங்கம் தன்னையும் கட்சியையும் சீண்டிப்பார்ப்பதாக பஞ்ச் டயலொக் விட்டுக்கொள்கிறார். ஆனால் தற்போது மக்கள் சலித்துவிட்டார்கள். நானும் சண்டியன்தான் என சண்டையிட்டுச் சொன்னாலும் பாவம், பச்சப்புள்ள என்று சொல்லி ஒதுங்கிக் கொள்ள மக்கள் தயாராகி வருவதனை இவரால் உணர முடியுமோ தெரியவில்லை.

அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதாக பேராளர் மாநாட்டில் தீர்மானங்கள்



Donated by National Library & Documentation Services Board
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றிய முஸ்லிம் காங்கிரஸ் அதிகாரப் பகிர்வுக்கு சாதகமான தீர்ப்பு வழங்கியதற்காக பழிவாங்கப்பட்ட பிரதம நீதியரசர் கலாநிதி சிராணி விடயத்தில் நடந்துகொண்ட விதமானது ரொம்பவும் கேவலமானது.

பிரதம நீதியரசர் விவகாரத்தில் ஒவ்வொருவரும் மனச்சாட்சிப்படி நடந்துகொள்ளுமாறு தெரிவித்த கட்சியின் தலைமைதான் மனச்சாட்சியே இன்றி இறுதி நேரத்தில் ஷிராணி பண்டாரநாயக்காவை அகற்றுவதற்கு ஆதரவு வழங்கியிருந்தார். இலங்கையின் நீதித்துறை துவம்சம் செய்யப்பட்டுக்கொண்டிருப்பதனை நீதியமைச்சராய் இருந்தும் எதிர்ப்பதற்கு வலிமையில்லாமல் போய்விட்டது தலைவர் ஹக்கீம் அவர்களுக்கு.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவில் ஆட்சியமைக்க ஆதரவு வழங்கும் போது நாட்டில் பாதியைக் கேட்டது போல ரகசியப் பேச்சுவார்த்தை நடாத்திக்கொண்டதாகப் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஒரு "மின்னல்" நிகழ்ச்சியோடு அந்த ரகசியத்தில் சிலவற்றை பரகசியப்படுத்தியிருந்தார். அப்புறம் அவர் பரகசியப்படுத்திய அவ்வளவும்தானே தவிர வேறு எதுவும் இல்லை என்று எல்லோருக்கும் புரிந்தது.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிப்பதற்கான பேரம் பேசுதலில் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினர் முன்வைத்த விடயங்களில் அடுத்த அரைக் காலப்பகுதிக்கான முதலமைச்சர் பதவி முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவருக்கு வழங்கப்படும் என்கின்ற விடயத்திற்கு மாத்திரம்தான் இன்னும் அவகாசம் இருக்கிறது. ஆனால் அரசாங்கம் உத்தரவாதமளித்ததாக இவர்கள் சொன்ன வேறெந்த விடயங்களும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அதுகுறித்து முஸ்லிம் காங்கிரஸ்ம் அலட்டிக்கொண்டதாகவும் தெரியவில்லை.

அரசு உத்தரவாமளித்த விடயங்களில் இதுவரை எது நிறைவேற்றப்பட்டுள்ளது? என கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூதுடனான கலந்துரையாடலொன்றில் வினவப்பட்ட போது "எதுவுமில்லை..." எனத் தடிப்பான தொனியில் கூறினார். அதே வினாவை கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸனலியிடம் வினவிய போது அவரும் அதே தோரணையில் "எதுவுமில்லை..." என்றார். இப்படிப் பேசும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் திவிநெகும சட்ட மூலத்திற்கான திருத்தங்களாக தங்களால் முன்வைக்கப்பட்டமை தொடர்பில் "பார்ப்போம" என அமைச்சர் பசில் சொன்னதை அச்சட்ட மூலத்திற்கு பாராளுமனறத்தில் தாம் ஆதரவளித்தமைக்கான காரணங்களாக முன்வைக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக முஸ்லிம் காங்கிரஸானது ஏராளமான விமரிசனங்களைத் தன்னகத்தே சுமந்து ஒரு கையாலாக அரசியலைச் செய்து மக்களை ஏமாற்றி வருவதனை இனியும் மக்கள் மன்னித்து விடவோ மறந்துவிடவோ கூடாது. காலத்திற்குக் காலம் ஆவேசப்படுதலும் பின்னர் அடங்கிப்போதலுமாக செய்யப்படுகின்ற சுயநல அரசியலை ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மூலம் செப்பனிடவேண்டியதும் முடியாதபட்சத்தில் மாற்றியமைக்க வேண்டியதும் வாக்குரிமையுள்ள ஒவ்வொருத்தரினதும் கடமையாகும்.

II II II

11954



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்கிழக்குப் பல்கலைக் கழகப் பொறியியல் பீடம் சாதிக்கப்போவது என்ன...?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் அமைப்பதற்காக பல வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள், போதிய வளங்கள் உத்தரவாதமளிக்கப் படாமையினால் பல்கலைக்கழக நிருவாகத்தினரால் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 05. 02. 2013 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் திறந்து வைக்கப்பட்டது. இது குறித்து அனேகர் நீண்ட காலக் கனவு நிறைவேறியதாய் புளகாங்கிதப்பட அது குறித்த மாற்றுப்பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

(பிரசுரம்: “கிழக்கு” வார இதழ் - 20.02.2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் எழுச்சியில், வளர்ச்சியில் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு எவ்வாறாக இருக்கவேண்டும் என்பதை ஆழமாக ஆராய்ந்தால் அதில் எந்தப் பல்கலைக் கழகமாவது இலங்கையில் அந்தப் பங்களிப்பை முழுமையாகச் செய்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள முடியும்.

அப்படியானால் நிகழ்காலத்தை வைத்துப் பேசும் போது இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் பெரும்பாலானவை தற்போது எவ்வாறான பங்களிப்புக்களைச் செய்துகொண்டிருக்கின்றன என்பதைப் பட்டியலிட முடியும்.

1. வருடா வருடம் பெருமளவில் பட்டதாரிகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றன.
2. அரசாங்கத்திடம் தொழில் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்யும் குறை ஆளுமைகளை அதிகரித்துக்கொண்டிருக்கின்றன.
3. பரீட்சைக் கல்விக்குள் பதுக்கி வைத்திருந்து நடைமுறைப் பிரயோகம் தெரியாதவர்களாய் சமூகத்திற்குள் பிதுக்கி விடுகின்றன.
4. ஒழுக்கக் கலாசாரத்தை ஒழுங்காகக் கட்டியெழுப்பாமல் எப்படியும் வாழ முடியும் என்கின்ற எண்ணக்கருவுடன் பட்டதாரிகளை வெளியேற்றுகின்றன.

அப்படியானால் இவைதானா நாட்டின் பல்கலைக் கழகங்கள் செய்கின்ற பங்களிப்புக்கள்....?

நாட்டின் தேவையை மையப்படுத்தியதாக உயர்கல்வித்திட்டமிடல் அமைய வேண்டும். இது எமது நாட்டைப் பொறுத்த வரையில் எந்தளவு நடைமுறையிலுள்ளது என்றால் ஏறாழுமான குறைகளை முன் வைக்கலாம். இவை பற்றி இன்னொரு சமயம் விரிவாக எழுதலாம் என நினைக்கின்றேன். தற்போது பேச வந்த விசயத்திற்கு வருகிறேன்.

எல்லா மாடுகளும் ஓடுகிறதென்று வயிற்று மாடும் வாலைக் கிளப்பிக்கொண்டு ஓடிய கதையாய் அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அரங்கேறிய விடயமொன்றைச் சுட்டிக்காட்டுதலே இந்தக் கட்டுரையின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அங்கு புதிதாக நிறுவப்பட்டுள்ள பொறியியல் பீடத்தைத் திறந்து வைத்தார். இவ்விடயம் குறித்து ஊடகங்கள் பல சந்தோசமான செய்திகளையும் வெளியிட்டிருந்தன. அதில் இணையத்தளமொன்றில், "கிழக்கு வாழ் மக்களின் நீண்ட கால கனவாக இருந்த தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தை ஒலுவில் வளாகத்தில் திறந்து வைத்ததன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இப்பகுதி வாழ் கல்விமான்கள், புத்திஜீவிகள் மத்தியில் மற்றுமொரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்துள்ளார்…." என அந்தச் செய்தி அமைந்திருந்தது.

அங்கு பொறியியல் பீடம் உருவாக்கப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பு நீண்ட காலமாக இருந்து வந்ததென்றால் அதற்கான காரணம் யாது என்பது புரியவில்லை. தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் உருவாக்கப்பட்டமையினால் இனிவருகின்ற காலங்களில் குறித்த பிரதேசத்திலிருந்து பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளதா…? என்றால் அதுவும் இல்லை.

அவ்வாறானால் எந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நீண்ட காலக் கனவு காணப்பட்டதாகவும் அது தற்போது நிறைவேறியுள்ளமையினால் மகிழ்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது…?

1. தமது பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள்களின் பிரயாண தூரம் இலகுபடுத்தப்படும்.

2. மாணவர்கள் வீட்டிலிருந்தே பல்கலைக் கழகம் சென்று வரலாம்.

3. கலாசாரப் பாதிப்பிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கலாம்.

இவைகளைத்தவிர வேறு எந்த விடயங்களை வைத்தும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் உருவாக்கப்பட்டமை குறித்து மகிழ்வடைய முடியும் என்று தெரியவில்லை. அதிலும் மூன்றாவது சொல்லப்பட்ட விடயத்தில் பல்கலைக் கழகத்தால் மாணவர்களை நெறிப்படுத்த முடிந்திருக்கிறதா என்றால் அதற்கும் பதில் "இல்லை" என்பதுதான்.

நாட்டிலுள்ள பழைமை வாய்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசப் பல்கலைக் கழகத்திலும் எல்லா வகையான துறைகளையும் கற்றுக்கொள்ளுமாறான வசதிகள் கிடைக்க வேண்டும் என்கின்ற நியாயமான எதிர்பார்ப்பையும் இங்கு குறிப்பிடலாம். ஆனால் அவ்வாறு எதிர்பார்ப்பது ஒன்றும் தவறில்லை. ஆனால் அந்த எதிர்பார்ப்பு முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கான உத்தரவாதங்கள் உறுதிப்படுத்தப்படும் போது மட்டும்தான் கனவு மெய்ப்பட்டதாகவோ ஆசை நிறைவேறிவிட்டதாகவோ சந்தோசிக்க முடியும்.

ஆனால் ஏதோ ஜனாதிபதி பல்கலைக்கழகத்திற்கு வருகிறார், கட்டிடத்தைத் திறந்து வைத்தோம் என்று மட்டும் யாரும் இவ்விடயத்தில் மகிழ்வடைய முடியாது. ஏனெனில் பல்கலைக் கழகமொன்றின் பொறியியல் பீடம் என்பது ஆசைக்கு ஆரம்பித்து மாணாக்கரை ஏமாற்றி விடுவதாய் அமைந்துவிடக் கூடாது.

நான் இவ்வாறு கூறுவதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு.

1. ஏற்கெனவே கிழக்குப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள மருத்துவ பீடமானது போதியளவு வசதிகளின்றி அந்தக் குறைபாடுகளுக்குள்ளிருந்து குறைபாடுகளுடன் கற்றே ஒரு தொகுதிப் பட்டதாரிகள் வெளியாகியிருக்கிறார்கள். (இவ்விடயத்தை நான் சொல்லும் போது, கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய முதற் தொகுதி மருத்துவப் பட்டதாரிகளில் தேசிய ரீதியிலான மதிப்பீட்டில் சிறந்த 100 பேரினுள் மூவர் அடங்குகிறார்களே என வினாவெழுப்ப முடியும். கல்வி கற்பதற்கான வசதிகளே இல்லாத பின்தங்கிய பிரதேசங்கள் சிலவற்றிலுள்ள மாணவர்கள் அசாதாரணமாகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவிடுவதொன்றும் நடக்காத காரியமல்ல. அதற்காக குறித்த ஒரு சில பெறுபேறுகளை வைத்து அந்த அந்தப் பிரதேசம் போதிய வசதி வாய்ப்புக்களைக் கொண்டது என யாரும் கூறிவிடமுடியாது)

2. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் உருவாக்கப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதிய வளங்கள் உத்தரவாதமளிக்கப்படாமையினால் நிராகரிக்கப்பட்டது.

3. மொரட்டுவப் பல்கலைக் கழகத்தில் உள்ள பொறியியல் பீடத்துடன் ஒப்பிடும் போது பேராதனைப் பல்கலைக் கழகப் பொறியியல் பீடத்திலேயே வளக்குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4. தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஏற்கெனவே உள்ள நான்கு பீடங்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறுகின்ற பட்டதாரிகளுக்கும் பழைமை வாய்ந்த ஏனைய பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறுகின்றவர்களுக்குமிடையில் பாரிய ஆளுமை வித்தியாசம் உணரப்படுவதாக ஒரு விமர்சனமிருக்கிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடம் சாதிக்கப்போவது என்ன...?

கலை மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிகளைக் கூட முழு ஆளுமையுள்ளவர்களாக உருவாக்குவதில் பல்வேறு சவால்களை இன்னும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் சர்வதேசத் தொழிற் சந்தையில் கேள்வி மிகுந்த பொறியியலாளர்களை உருவாக்குமா?

தென்கிழக்குப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளில் பெரும்பாலானவர்களில் காணமுடிகிற மிகப்பெரிய ஆளுமைக் குறைபாடாக அவர்களது மொழியாளுமையைக் குறிப்பிடலாம். அது கலைப்பிரிவாக இருந்தாலும் சரி, முகாமைத்துவப் பிரிவாக இருந்தாலும் சரி. அத்தோடு சேர்த்து இதர விடயங்களிலும் கொழும்பு மற்றும் பேராதெனிய போன்ற பல்கலைக் கழகப் பட்டதாரிகளுடன் ஒப்பிடும் போது பல்வேறு விடயங்களில் வித்தியாசப்படுவதாக தனியார் தொழில் வழங்குனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கிழக்குப் பல்கலைக் கழகமோ அல்லது தென்கிழக்குப் பல்கலைக் கழகமோ உருவாக்கப்படுவதற்கு முன்னர் பல்கலைக் கழகம் தெரிவாகும் மாணவர்கள் நாட்டின் சிறந்த பல்கலைக் கழகங்களில் கற்று வெளியேற முடிந்தது. ஆனால் இந்தப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர் ஏராளமான வாய்ப்புக்களை மாணவர்கள் இழந்துவிட்டார்கள் என்றே சொல்ல முடியும்.

ஆனால் மருத்துவத்துறைக்கும் பொறியியல் துறைக்கும் அந்த வாய்ப்புக்கள் கிடைத்துக்கொண்டிருந்த போதும் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்ட மருத்துவ பீடமும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள பொறியியல் பீடமும் மாணவர்கள் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சவால்களாகவே அமையும் சாத்தியங்கள் அதிகம் தென்படுகின்றன.

அவ்வாறானால் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் பல்கலைக் கழகம் அமைந்திருக்கவே கூடாதா என்கின்ற கேள்வி எழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகம் உருவாக்கப்படுவது தவறல்ல. ஆனால் அங்கு வழங்கப்படுகின்ற கல்வியின் தரம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பன திருப்தியான முறையில் பிற பல்கலைக் கழகங்களுக்கு ஈடாக ஏற்படுத்திக்கொடுக்கப்படல் வேண்டும். அதைவிடுத்து வெறுமனே ஊரின் பெயரில் பல்கலைக் கழகம் உருவாக்கிப் பெருமைப்படுதல், குறித்த பிரதேச மாணவர்களின் ஆளுமையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துவதோடு தொழிற்சந்தையில் அவர்கள் பாரிய சவால்களையும் எதிர்கொள்ளவே வழி வகுக்கும்.

பொறியியல் துறையைப் பொறுத்த வரைக்கும் அது வெறும் இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேசத் தொழிற் சந்தைக்கு ஏற்றாற் போல வடிவமைக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். அதற்கான மனித வளங்கள் தொடக்கம் எல்லா பௌதீக வளங்களும் ஏற்படுத்தப்படல் வேண்டும். பழைமை வாய்ந்த பல்கலைக் கழகங்களில் கூட இவ்வாறான விடயங்களில் சிறு சிறு குறைபாடுகள் இருந்து வருகின்ற நிலையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பொறியியல் பீடத்திற்கான வளங்களை எப்போது, எங்கிருந்து, எவ்வாறு ஏற்பாடு செய்வது?

மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்துவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக வளங்களை சேர்த்துக்கொள்ளலாம் என்றால் குறித்த மாணவர்களைப் பலிக்கடாவாக்குவதும் தரமற்ற பொறியியலாளர்களாய், பேருக்கு அவர்களுக்குப் பட்டம் வழங்கி வெளியேற்றுவதும் நியாயமானதா?

இந்தப் பொறியியல் பீடத்தின் மூலம் நீண்ட காலக் கனவு நிறைவேறுவதாகவும் இதைத் திறந்து வைத்த ஜனாதிபதிக்கு குறித்த பிரதேச மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிப்பதற்கும் இதுவொன்றும் பாலமோ வீதியோ அல்ல, இது எமது சந்ததிகளின் கல்வி, எதிர்காலம் தொடர்பான விடயம்.

எல்லா வகையான வளங்களும் தலைநகரிலே குவிக்கப்படுகின்றன. அங்குள்ள எந்த மனித வளமும் வளர்ந்து வருகின்ற பிரதேசங்களில் தங்கியிருந்து சேவையாற்ற விரும்புவதில்லை. ஆனால் அவ்வாறான தருணங்களில் தலைநகருக்குச் சென்று அந்த வளங்களின் பயனைப் பெற முடிந்தது. அத்தகைய வாய்ப்பினைக் கூட இத்தகைய ஏற்பாடுகள் இல்லாமல் செய்கின்றன.

எனது இந்தக் கருத்தை உறுதிப்படுத்த ஒரு விடயத்தை உதாரணம் காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலுள்ள ஒரு மாணவன் அகில இலங்கை மட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் சிறந்த பெறுபேறுகளைப் (Merit) பெறும் போது அவனது ஆற்றலை கௌரவித்து அவனுக்கு வழங்கும் பரிசாய் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கற்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. மற்ற மாணவர்கள் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கற்க நேரிடுகிறது. அப்படியானால் கிழக்குப் பல்கலைக் கழகத்திலுள்ள மருத்துவ பீடத்தின் தரத்தினை அரசாங்கமே குறைத்துத்தானே மதிப்பீடு செய்துவைத்திருக்கிறது...?

பேரினவாதத்தின் போக்கினைப் பார்க்கும் போது இவைகள் கூட சிறுபான்மை யினரின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான திட்டமிட்ட முன்னெடுப்புக்கள் என்றே கருத முடிகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினர் பொறியியல் பீடத்தை நிராகரித்தமைக்கு இதுவே பிரதான காரணியாகும். ஆனால் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தினரோ அதை வரப்பிரசாதமாகக் கருதுகிறார்கள். முஸ்லிம் தலைமைத்துவங்கள் அமைச்சுப் பதவிகளுக்காகச் செய்யும் ஆளும் அரசுசார் அரசியல் போலவே இந்தப் பல்கலைக் கழகத்தினரும் ஏதோ தமக்கான பதவிகளுக்காகவே இதனைச் செய்ததாகவே கருதக்கிடக்கிறது. இதில் பலிக்கடாவாவது பெரும்பாலும் சிறுபான்மைச் சமூகம்தான்.

பொறியியல் பீடத்தைத் திறந்துவைத்திருப்பது இங்கு முக்கியமல்ல, அதைத் தரமான வளங்களைக் கொண்டு முன்னெடுத்துச் செல்வதில்தான் தென் கிழக்குப் பல்கலைக் கழகம் அதிக சவால்களைக் கொண்டுள்ளது. சிறுகச் சிறுக எற்பாடு செய்யலாம் என்று கதையளந்தவாறே ஒரு தொகுதி மருத்துவ மாணவர்கள் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமது படிப்பை முடித்திருக்கிறார்கள். ஆனால் தற்போது கூட அங்கு போதிய வளங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறானதொரு நிலைதான் இங்கும் வருமானால் அது சமூகத்திற்குச் செய்யும் பாரிய துரோகமாக அமைந்துவிடும்.

இந்தக் கட்டுரையில் நான் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அத்தனையினையும் தகர்த்து அவைகளைச் சமூகத்திற்கு சாதகமாக அமைத்துக் காட்டவேண்டுமானால் இங்கு நிறுவப்பட்டுள்ள பொறியியல் பீடத்திற்கான சகல வளங்களையும் (மனித வளம், பௌதீக வளம் ஆகியவற்றை) ஏற்படுத்திக் கொள்வதற்கு மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்யும் கையோடு அதீத பிரயத்தனம் எடுக்கவேண்டும். ஆனால் பொறியியல் பீடத்தைப் பொறுத்த வரையில் இலங்கையில் அது அவ்வளவு இலகுவான காரியமல்ல, காலந்தாழ்த்தாமல் அதைச் செய்து முடித்துவிட்டால் அது மெச்சும்படியான சாதனைதான்!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கொலைக்கே வித்திடும் நாட்டின் தரமற்ற பொருளாதாரம்

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடிகள் நிலவுகின்றன. இதனால் என்றுமில்லாதவாறு குற்றச் செயல்களும் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. அரசாங்கம் மக்களுக்கு எதிராகச் செயற்படும் போது சட்டத்தை மீறி நடப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்கின்ற அரசியல் அறிஞர்களின் கருத்துப்படி இன்று நாட்டின் சகலபாகங்களிலும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இந்தப் பின்னணியில் எழுதப்பட்டதே இக்கட்டுரையாகும்.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 15.05.2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமில்லாதவாறு இலங்கையில் தனிமனிதக் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. இப்போதெல்லாம் க்ரைம் செய்தியாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் காட்டில்தான் நல்ல மழை!

நாட்டில் நடக்கும் குற்றச்செயல்கள் பிரதானமாக இரண்டு பிரச்சினைகளின் பின்னணியில்தான் பெரும்பாலும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. ஒன்று பாலியல்சார் பிரச்சினை. மற்றையது பொருளாதாரம்சார் பிரச்சினை. ஆனால் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவற்றைக் குறைப்பதற்கும் களைவதற்கும் அரசாங்கம் கட்டாயம் நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும் என்றொரு கடமைப்பாட்டை உணர்த்திய மறுகணமே ஞாபகத்திற்கு வருவது, நிறையப்பிரச்சினைகளுக்கு அரசாங்கமே காரணமாக இருக்கிறது என்பதுதான்.

## குற்றச் செயல்கள் அதிகரிப்பு

கடந்த வருடத்தில் (2012) முதல் 3 மாதங்களில் மாத்திரம் இலங்கையில் பதிவான அனைத்து வகையான குற்றச்செயல்களினதும் தொகை 13209 ஆகும். இதில் அதிக குற்றச் செயல்கள் பதிவாகி இருப்பது, களனி (869), நுகேகொடை (787), கல்கிஸ்ஸ (755), கம்பஹா (701), இரத்தினபுரி (682), கண்டி (641), அநுராதபுரம் (586) ஆகிய பொலிஸ் பிரிவுகளிலாகும்.

இலங்கையில் பதிவாகும் முறைப்பாடுகளின் அடிப்படையில் நாளொன்றுக்கு 5 கற்பழிப்புகள் நடைபெறுவதாக ஆங்கில நாளிதழொன்றில் வாசிக்கக் கிடைத்தது. அரசியல் தலையீடுகளால் அல்லது அரசியல்வாதிகளே செய்த குற்றச்செயல்கள் என்பதால் பதிவாகு முன்னமே பஸ்பமாகிப்போன குற்றச்செயல்கள் ஏராளமிருக்கலாம், அவை இந்தப்புள்ளி விபரங்களில் சேர்க்கப்படவில்லை என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இனி விடயத்திற்கு வருவோம், நான் மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான பிரச்சினைகளில் இரண்டாவதாகச் சொன்ன பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி சற்று சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் அதிகரிக்கும் தற்கொலைகள்

ஊடகங்கள் அண்மைக்காலமாகச் சுமந்து வந்துகொண்டிருக்கும் கொலை மற்றும் தற்கொலைச் செய்திகளைக் கேள்விப்பட்டாலே ஏதோ பொருளாதாரப் பிரச்சினைதான் என்று உறுதிப்பட எதிர்வு கூறுமளவிற்கு நாட்டின் நிலைமை மோசமடைந்துவிட்டது.

யுத்தத்தினை முடித்த கையோடு நாட்டின் பொருளாதாரமும் தனி மனித விருத்தியும் வீறுநடை போடுமென்று யாவரும் கண்ட கனவை மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் நனவாக்க முடியவில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்துப்பேசும் போது புள்ளிவிபரங்களைத் தயார்படுத்த முடிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு அதனைத் தனி மனித வாழ்வியலில் உணரும் படியாகச் செய்யமுடியவில்லை. பொருளாதார விருத்தி என்பது அஜித் நிவாட் கப்ராலின் மத்திய வங்கி அறிக்கையை வாசித்துக்கொண்டிருப்பதல்ல. அது நாட்டின் ஒவ்வொரு தனிமனித வாழ்வியலிலும் பிரதிபலிக்கவேண்டியது.

அது தற்போது எமது நாட்டில் எவ்வாறு பிரதிபலிக்கிறதென்றால் - வாழ்வாதாரத்திற்கான வருமானம் போதாது, தொழில் முயற்சிக்கான முதலீட்டுக்கு வழியில்லை, போதிய முதலீடு இன்றி தொழில் முயற்சியும் கைகூடுவதாயில்லை, பொருட்களின் விலைவாசிக்கேற்ற வருமானமில்லை, அன்றாடத் தேவைக்கும் கடன் வாங்கியே காலத்தைக் கடத்தவேண்டியிருக்கிறது. காலப்போக்கில் கடன் முற்றிவிடுகிறது... என்ன செய்யலாம்...? முடிவு தற்கொலையாகிவிடுகிறது.

இன்னும் சிலர் இதிலிருந்து கொஞ்சம் அட்வான்டேஜாக சிந்திக்கிறார்கள். நாம் இறந்துவிட்டால் நம் மனைவியையும் குழந்தைகளையும் கடன்காரர்கள் தொந்தரவு செய்வார்கள். ஆகவே அவர்களையும் கொன்றுவிட்டு நாமும் இறப்போம்...! என்று சிந்திக்கிறார்கள்.

## அரசாங்கமே பொறுப்பு

இதை என்னால் தற்கொலை என்று ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இப்படியான நெருக்கடிக்குள் ஒரு தனிமனிதனைத் தள்ளிவிடும் அரசாங்கம்தான் இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இது மாத்திரமல்ல, ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள் என எல்லாக்குற்றச்செயல்களுக்கும் நாட்டின் பொருளாதார நிலைமைக்கும் நெருக்கமான தொடர்பிருக்கிறது. தனி மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார முன்னேற்றமின்மை மற்றும் அவற்றுக்கான வழிகளின்மை என்பவையே இவ்வாறான குற்றச் செயல்களுக்குப் பெரும்பாலும் தூண்டுதல் அளிக்கின்றது.

## நாட்டின் பொருளாதார நிலை

நாட்டின் பொருளாதார நிலையை அறிந்துகொள்ள, "தேசிய அபிவிருத்தியின் இயக்கி" எனக் கருதப்படும் நெசவுக்கைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்தையும், தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வாழ்க்கைச் செலவுச் சுட்டியையும் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்.

எமது நாட்டின் 2011ம் ஆண்டுக்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டியின் அடிப்படையில் 4 உறுப்பினர்களைக் கொண்ட சிறு குடும்பமொன்றுக்கு மாதாந்தச் செலவிற்காக 46000 ரூபாவுக்கும் அதிகமாகத் தேவைப்படும் நிலையில் கடந்த டிசம்பர் மாதம் வரை வரவு செலவுத் திட்டத்தின் கொடுப்பனவுகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னரான கொடுப்பனவாக நெசவுக்கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களின் மாதாந்தச் சம்பளம் 7900 ரூபாவாகவே வரையறுக்கப்பட்டுள்ளது. அப்படியான ஒருத்தர் எந்த விடுமுறையும் எடுக்காமல் மேலதிக நேர வேலைகளிலும் ஈடுபட்டாலும் அதிகப்பட்சமாக 12000 ரூபா சம்பளத்தையே மாதாந்தம் வீட்டுக்கு எடுத்துச்செல்ல முடியும். இந்தத் தொகையானது இவ்வருடம் முடிவு செய்யப்பட்ட அதிகரிப்பின் விளைவாக 14000 ரூபாவாக அதிகரிக்கலாம். அப்படியாயினும் வாழ்க்கைச் செலவுச் சுட்டியின் அடிப்படையில் நோக்குமிடத்து குறித்த பெண் தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்தைக் கவனிக்க மேலதிகமாக 30000 தேவைப்படுகிறது. இதனடிப்படையில் இரண்டு வருமானம் பெறும் குடும்பம் கூட மேலதிகமாக 8000 ரூபா கடன் வாங்க வேண்டிய நிலையே காணப்படுகிறது.

## அரசாங்கம் எம்மைக் கடன்காரர்களாக்கியுள்ளது

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று உயர் ரக வீதிகளும், பாலங்களும், துறைமுகமும், விமான நிலையமும், தியெட்டரும் அமைத்துவிடுதல் அபிவிருத்தியின் உண்மையான அடையாளமாகாது. துறை முகத்திற்கும், விமான நிலையத்திற்கும் தனது பெயரைச் சூட்டவேண்டும் என்ற விருப்பம் நிறைவேறியமையைத் தவிர யுத்தம் முடிந்து பல வருடங்கள் கழிந்தும் மக்கள் எதிர்பார்த்த எந்தப் பொருளாதார எழுச்சியையும் அடைந்துகொள்ள முடியவில்லை. மாறாக அவ்வெதிர்பார்ப்புக்கள் தலைகீழாய்த்தான் மாறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுப்பிறந்த குழந்தை தொடக்கம் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழுள்ள நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் 300,000 ரூபா வரையில் சர்வதேசத்திற்குக் கடன் காரராகியிருக்கிறார்கள். இலங்கையிலுள்ள 203 லட்சம் பேர் மீதும் இத்தகைய கடன் சுமைகள் இருப்பதாக 2011ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீடு குறிப்பிடுகிறது. எம்மை மேலும் மேலும் கடன் காரராகவே ஆக்கிக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் எமது பொருளாதார வளர்ச்சி குறித்த ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை முன்னெடுக்கத் தவறிக்கொண்டே இருக்கின்றது.

## எம்.பிக்களைக் கவனிக்கும் அரசாங்கம் எம்மைக் கைவிட்டுவிட்டது

பாராளுமன்றத்தில் தமக்கு ஆதரவாகக் கையசைக்க வேண்டும் என்பதற்காக (மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தக்கவைக்க) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சலுகைகளைக் கொடுக்கும் அரசாங்கம் குடிமக்களுக்கு விமோசனம் வழங்குவதாகத் தெரியவில்லை.

அரசியல்வாதிகளின் தயவில் பெறப்பட்ட வங்கிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் பொதுமக்களின் விடயத்தில் மட்டும் எந்தவொரு அக்கறையுமின்றி அரசு செயற்பட்டு வருகின்றது. இத்தனைக்கும் நாட்டின் பொருளாதாரமோ அதாளபாதாளத்தில் கிடக்கின்றது.

## ஏமாற்றமடைந்துள்ள அரசாங்கம்

பெற்றோலியத்தைக் கொள்வனவு செய்யப் பணமில்லாத நிலையில் அதற்காக 8.5% வட்டி வீதத்தில் கேட்கப்பட்ட கடன் தொகையைத் தர சீனா மறுப்புத் தெரிவித்ததாக அண்மையில் அறிய முடிந்தது. அதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்கப்பட்ட கடனும் மறுக்கப்பட்டமை இன்னும் ஞாபகத்தில் இருக்கின்றது. அதே சமயம் “எங்களுக்கு அமெரிக்கா இல்லாவிட்டாலும் சீனா இருக்கிறது…” என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியதையும் இன்னும் எவரும் மறந்துவிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைக்கேறிய சந்தோசம் அனைத்தையும் தலைகீழாக்கியுள்ளது

பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளை மக்களின் தலையின் மேல் போட்டுவிட்டு விடிவை நோக்கிப் புறப்பட முடியாது. யுத்தத்திலிருந்து விடிவு பெற்ற இலங்கையினால் நிரந்தர விடிவை நோக்கிய பயணத்தை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளது. “துக்கமும் சந்தோசமும் தலைக்கேறினால் செய்வதறியாது” என்றொரு பழமொழியை எங்கோ படித்த ஞாபகமிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கும் அதுவே நடந்திருக்கிறது. விடுதலைப் புலியினரை அழித்தொழித்துவிட்டு பாற்சோறு உண்டு கொண்டாடிய சந்தோசம் ராஜபக்ஷவின் குடும்பத்திற்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும் வெகுவாகத் தலைக்கேறியதன் விளைவுதான் அடுத்தடுத்த தேர்தல் வெற்றிகளும் கூட. ஆனால் தற்போது மக்கள் அதிலிருந்து தெளிவடைந்து வருகிறார்கள். ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தினர் இன்னும் தெளிந்ததாய்த் தெரியவில்லை.

அனைத்துடனும் சேர்த்து இலங்கையிலுள்ள மனித உரிமைப்பிரச்சினைகள் சர்வதேசத்தின் மத்தியில் கடுப்பினை ஏற்படுத்தியிருக்கின்றமையும் யாவரும் அறிந்ததே. திரும்பும் திசைகளிலெல்லாம் பொருளாதாரத் தடை என்கின்ற சப்தமே கேட்பதாக உணர முடிகிறது. நாட்டு மக்கள் இருக்கின்ற நிலையில் சர்வதேசத்திலும் பொருளாதாரத் தடையேற்பட்டால் அடுத்த கட்டத்தைப் பற்றிப் பேசித்தான் அறியவேண்டுமென்றில்லை.

### பாதையே தெரியாத பயணம்

பிரயாணம் தூரத்தை நோக்கியதா அன்றேல் அண்மையை நோக்கியதா என்பது பிரச்சினையே இல்லை. ஆனால் எங்கு செல்கிறோம் என்று தெரியாமலேயே பயணிப்பதுதான் பயங்கரமானது, பாரதூரமானது. அப்படியானதொரு பாதையில்தான் இன்றைய அரசாங்கம் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஏன் இதைச் செய்கிறோம், ஏன் இதைச் செய்யவில்லை என்பதற்கான எந்த வெளிப்படைத்தன்மையுமற்ற இந்த அரசாங்கத்தின் பின்னால் எதிர்க்கட்சிகளும் நானும் நீங்களுமாய் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

இதுவரைக்கும் சர்வதேசத்திடம் கடன் வாங்கிச் செய்த எந்தவொரு அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் அவ்வளவாக வெற்றியடையாத நிலையில், குத்தகைக்கு வழங்கப்பட்டு வெளிநாட்டு முதலீடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற திட்டங்கள் எதுவும் நாட்டுப்பிரஜைகளின் பொருளாதாரத்தில் எந்தச் சாதகமான செல்வாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தாத நிலையில் இன்னுமின்னும் கடன் விண்ணப்பங்களே ராஜபக்ஷ அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

நாட்டின் பொருளாதாரம் பற்றிய தெளிவின்றியும் எதிர்காலம் பற்றிய திட்டமிடலுமின்றியும் பயணிக்கும் இந்த அரசாங்கத்திற்கு, கூட இருக்கும் புத்தி ஜீவிகளோ எதிர்க்கட்சிகளோ சரியான பாதையைக் காட்டுவதாகத் தெரியவில்லை. ஆக, இனி நாட்டு மக்களே இதைத் தீர்மானிப்பவர்களாக மாற வேண்டியதைத் தவிர வேறு மாற்று வழியில்லை என்றே உணர முடிகின்றது. இன்னுமின்னும் பேசாமலிருந்தால் பட்டினி எம்மை வாட்டியெடுக்கும் போது பேசவேண்டியதைப் பேசக்கூடச் சக்தியிழந்து போய்விடுவோம்.

நாமினி சர்வாதிகாரத்தை சர்வாதிகாரமாகவும் ஜனநாயகத்தை ஜனநாயகமாகவும் பார்க்கவேண்டும்.
சர்வாதிகாரத்தை சர்வாதிகாரமென்று சொல்வோம்!
யாவருமாய்ச் சேர்ந்து நாட்டில் ஜனநாயகத்தை வெல்வோம்!!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் பேசுவோர் உறவு தளைத்தோங்க வழி செய்வோம்!

2012ம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலகட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சிறுபான்மையினருக்கான மாகாண சபையாக கிழக்கு மாகாண சபை அமையவேண்டும் என்று எதிர்பார்த்து முஸ்லிம் காங்கிரஸினருக்கு திறந்த மனதோடு அழைப்பு விடுத்தனர். அது தொடர்பில் கடந்த 05. 10. 2012 வெளியான "மீள்பார்வை" 255வது இதழில் சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் அவர்களால் எழுதப்படிட்டிருந்த "கூட்டமைப்பினருக்கு முஸ்லிம்கள் மீது வந்த திடீர்க் காதல்" என்ற கட்டுரைக்கான பதில் கட்டுரையே இது.

(பிரசுரம்: "கிழக்கு" வார இதழ் - 15.10.2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகில் ஊடகங்கள் ஆற்றும் பங்குதான் எல்லா விடயங்களிலும் முதன்மை பெற்றுவிளங்குகிறது. அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையாக இருந்தாலும் சரி. அதிலும் குறிப்பாக அரசியலுக்கும், ஊடகத்திற்கும் மற்றும் பொதுமக்களின் வாழ்வியலுக்கும் ஊடகத்திற்கும் இன்று இறுக்கமான தொடர்புகள் இடைவிடாது இருந்துகொண்டே இருக்கின்றன. நேரடியாகச் சொல்லப்போனால் நாட்டு அரசியலையும் சரி மக்கள் வாழ்வியலையும் சரி தீர்மானிக்கின்ற, மாற்றியமைக்கின்ற மாபெரும் சக்தியாக ஊடகங்கள் திகழ்கின்றன.

எமது நாட்டை எடுத்துக்கொண்டால் ஒரு மாபெரும் கொடூர யுகத்திலிருந்து நாம் மீண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லவேண்டும். மீண்டிருக்கிறோம்... ஆனால் இன்னும் மீண்டெழவில்லை என்பதுதான் கவனிப்புக்குரிய உண்மை. மீண்டெழுவதற்கு நாம் இன்னும் உழைக்கவேண்டியிருக்கிறது, நிறையவே மாறவேண்டியிருக்கிறது.

பச்சை மரகதமாய் இருந்த இந்த தேசம் யாரோ செய்த பாவத்தால் சிகப்பாகிப்போனது. இனமுரண்பாடுகளும் ஒடுக்கு முறைகளும் தாண்டவமாடியதன் விளைவு, தன்னிறைவாய் தலை நிமிர்ந்து நின்ற தேசத்தில் ஆயுதங்கள் பேசத்தொடங்கின. எத்தனையோ நாடுகள் வந்து பேசியும் ஆயுதங்களின் பேச்சை நிறுத்தமுடியாமலேயே இருந்தது.

இந்த முப்பதாண்டு யுத்தத்தில் இங்குள்ள யாவருக்கும் ஏதோ ஒரு வகையில் பாதிப்பு, இழப்பு எல்லாமே இருக்கத்தான் செய்கின்றன. எவருக்கும் இதில் நல்லசேதிகள் இருந்ததாகத் தகவல்களில்லை. அவ்வாறிருந்தால் அவை பொய்யான தகவல்களாகத்தான் இருக்கும். அன்றேல் அது சுயநலங்களுக்கான உதாரணமாயிருக்கும். மற்றப்படி இந்த யுத்தத்தின் முன்னால் பௌத்தம், இந்து, இஸ்லாம் என யாவரும் தோற்றுத்தான் போனார்கள். சில நேரங்களில் யாருக்கோ மூட்டிய தீ யாருக்கோ பரவியதும், காரணமின்றியே தீ மூட்டப்பட்டதும் உண்மைதான். ஆனால் அது தற்போது அணைந்துவிட்டது. இன்ஷைய ஒட்டுமொத்த இதயங்களின் ஒருமித்த ஆசையெல்லாம் "மீண்டுமொரு போர் வேண்டாம்" என்பதுதான். அவ்வாறிருக்க பழைய தீயைக் கிளறுவதும் புதிதாய் தீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டவும் நாம் எந்த வகையிலும் காரணமாகிவிடக் கூடாது. இனி இந்த தேசத்தின் தேவை இன நல்லுறவும் சகவாழ்வும், அதற்கான நல்லாட்சியுந்தான்!

ஆனால் இந்த எதிர்பார்ப்புக்களுக்கு உலை வைக்கும் வகையில் சில அரசியல் முன்னெடுப்புக்களும் அரங்கேறிக்கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அரசியலுக்குள் சுயநலங்கள் தீர்ந்துபோகும் வரைக்கும் இந்நிலை தொடர்ந்துகொண்டுதானிருக்கும். அதனை அவ்வளவு சாதாரணமாகத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

ஆனால் அவற்றிலிருந்து பொது மக்களைக் காப்பாற்றி நல் வழிப்படுத்த வேண்டிய பாரியதொரு கடப்பாடு இன்று ஊடகங்களிடம்தான் ஏதோ ஒரு வகையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய சில ஊடகங்கள் அந்தக் கடமையைச் சரியாகச் செய்கின்றனவா என்பதில் ஆங்காங்கே சந்தேகங்கள் எழுந்துவிடுகின்றன.

சில ஊடகங்களின் செயற்பாடுகள் ஏற்கெனவே எரிந்து அணைந்த தீயை மீண்டும் கிளரும் விதமாயும், அதை ஞாபகப்படுத்தி மறதிக்கு எண்ணெய் ஊற்றுவதாயும் அமைந்துவிடுகின்றன. இவை அறிந்தோ அறியாமலோ அரங்கேற்றப்பட்டுவிடுகின்றன. இதில் அவர்களது எதிர்பார்ப்பு என்ன என்பது புதிராகவே இருக்கிறது. தாம் சார் சமூகத்திற்காய் குரல் கொடுப்பதாய் எண்ணுகிறார்களா? அன்றேல் இனவாதம் பேசி தனித்துவம் காக்க ஆசைப்படுகிறார்களா? என்னதான் என்றாலும் நிகழ்காலத்தின் தேவை இவையல்ல என்பதை யாவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தவகையில் கடந்த ஒக்டோபர் 05இல் வெளியான "மீள்பார்வை" 255 வது இதழில் சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் எழுதிய கட்டுரையொன்று மனதைச் சங்கடத்திற்குள்ளாக்கியது.

"மீள்பார்வை" ஊடகத்துறையில் காத்திரமான பங்களிப்பினை வழங்கிவரும் ஒரு பத்திரிகை என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை. அதில் ஒவ்வொரு பக்கத்திலும் கனதியான, ஆவணப்படுத்தவல்ல ஆக்கங்கள் இடம்பெற்றுவருவது என்றும் சிலாகித்துச்சொல்லக் கூடிய ஒரு விடயமாகவே இருந்துகொண்டிருக்கிறது.

ஆனால் மேற்சொன்ன இதழில் சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் இனால் எழுதப்பட்ட, "கூட்டமைப்பினருக்கு முஸ்லிம்கள் மீது வந்த திடீர்க்காதல்" என்ற தலைப்பிலான கட்டுரை உண்மையிலேயே வரவேற்கப்படவேண்டியதொன்றாகக் கருத முடியாது. அந்தக் கட்டுரையைப் படிக்குமுன்னமே அதன் தலையங்கம் எமது இந்துச் சகோதரர்களைக் கேவலப்படுத்தும் உணர்வினையே உள்ளத்தில் விதைத்துவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்கால அரசியல் நிலவரங்கள் தெரிந்தும், அதிலும் நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அரங்கேற்றிய நாடகம் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து முஸ்லிம்களின் அபிலாஷைகளை மண்தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் அந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரும் சரி பின்னரும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முஸ்லிம்களைத் தம்மோடு இணைத்து அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கவேண்டும் என்றே குரல் கொடுத்து வந்தனர். ஆனால் முஸ்லிம் தலைமைத்துவங்களோ அதனைக் கணக்கிலும் எடுக்கவில்லை. இன்னும் அதே நிலைதான் தொடருகிறது. "சேர்ந்து வாருங்கள்" என அழைப்பு விடுக்கும் குணத்தை கொச்சைப்படுத்த சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் அவர்களுக்கு எப்படி மனது வந்ததென்று தெரியவில்லை.

"முஸ்லிம்கள் தமிழர்களை நம்பவில்லை என்ற மிகவெளிப்படையான யதார்த்தத்தை தேர்தலுக்கு முந்திய, பிந்திய அரசியல் போக்குகள் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றன..." என்று அவர் தனது கட்டுரையில் எழுதியுள்ளார். இப்படி எவ்வளவு காலத்திற்கு நம்பாமல் இருப்பதும் இப்படி எழுதுவதும்? அப்படியானால் கடைசி வரையிலும் தமிழ் - முஸ்லிம் உறவு கனவாகியே போவதுதான் விதியா? எத்தனை நாளைக்குத்தான் தனித்துவம் என்ற பேரில் இப்படி இனவாத அரசியல் மற்றும் ஊடகம் என்பவற்றை எமது முஸ்லிம் சமூகம் முன்னெடுக்கப்போகிறது...? இன ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் இஸ்லாம் தெளிவாக வலியுறுத்தியும் அம்மார்க்கத்தைப் பின்பற்றும் நாம் பிரிந்து நிற்பதிலும் இனவாதம் பேசுவதிலும் அக்கறை காண்பிப்பது கவலைக்குரியது.

கடந்துபோன கசப்பான அனுபவங்களையே எமக்குள் பகிர்ந்துகொண்டிருத்தல் ஒரு போதும் தமிழ் - முஸ்லிம் உறவு வலுப்பெறத் துணை நிற்காது. இன்றைய மிகப் பிரதான அரசியல் தேவையாகத் திகழ்வது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைதான் என்பதில் சகோதரர் சிராஜ் மாற்றுக்கருத்தேதும் வைத்திருக்கிறாரா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

கடந்தகாலங்களில் சில தவறுகள் நடந்தேறியமை என்னவோ உண்மைதான். அதனை மறுக்கவில்லை. ஆனால் அதற்குக் காரணமாய் இருந்த விடயம் இன்று இல்லாமல் போயுள்ளது. அப்படியானதொரு நல்ல சூழலில், ஆயுதங்கள் பேசாத நிலையில் மனதால் யாவற்றையும் உணர்ந்தே ஒற்றுமைக்கான அழைப்பைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் விடுக்கின்றனர் என ஏன் ஒரு சந்தர்ப்பம் வழங்கிப் பார்க்கக் கூடாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது வரை முஸ்லிம் இறைமை என்ற வார்த்தையை அவர் (சம்பந்தன்) பயன்படுத்தியதே இல்லை. இப்போது மட்டும் ஏன் அப்படிப் பேசுகிறார்?" என்று தனது கட்டுரையில் ஒரு இடத்தில் சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் குறிப்பிடுகிறார். எப்போதுமே இப்படியான சந்தேகக் கண்ணோட்டங்கள் கொண்டே நோக்குவது நல்லதோர் வழிமுறையாகுமா? முஸ்லிம்களாகிய நாம் பொறுமையும் சகிப்புத்தன்மையும் நிறைந்தவர்கள், மன்னிக்கும் மனப்பக்குவம் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் ஏன் ஒரு சந்தர்ப்பம் வழங்கிப்பார்க்கக் கூடாது...?

அவர் தனது கட்டுரையில் மேலும் ஒரு இடத்தில், "கிழக்கில் முஸ்லிம்களே பெரும்பான்மையினர் என்ற தெளிவான யதார்த்தத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கூட்டமைப்பு தடுமாறியது. அந்தத் தடுமாற்றமே முஸ்லிம்கள் மீது வந்த இந்தத் திடீர்க்காதலுக்கு மிக முக்கியமான காரணம். முடிந்தால் இதே அரசியலை வட மாகாணத்தில் அவர்கள் செய்து காட்டட்டும் பார்க்கலாம். வடக்கில் ஐந்தே ஐந்து வீதமான முஸ்லிம்கள் குறித்து இவர்கள் எங்கே அக்கறை காட்டப்போகிறார்கள்?" என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் முஸ்லிம் காங்கிரஸைப் பேச வருமாறு பலமுறை தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் அழைத்திருந்த போதிலும் அத்றகு முஸ்லிம் காங்கிரஸ் போதியளவு ஒத்துழைப்பு வழங்கவில்லை. மாறாக சந்திக்க வருவதாக நேரம் வழங்கிவிட்டு அதே நேரத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்திக்கச் சென்றார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்.

இப்படியிருக்கையில் வடக்கிலுள்ள ஐந்தே வீதமான முஸ்லிம்கள் குறித்து இவர்கள் எங்கே அக்கறை காட்டப்போகிறார்கள்? என முஸ்லிம்கள் தரப்பிலிருந்து நாம் கேள்வியெழுப்புவது நியாயமா? அப்படி உண்மையிலேயே வடக்கு முஸ்லிம்களில் அக்கறையிருந்திருந்தால் இந்தக் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலிந்து அழைத்த சந்தர்ப்பத்தினையும் பயன்படுத்தி வடக்கு முஸ்லிம்கள் விவகாரங்களைக் கூட முஸ்லிம் காங்கிரஸ் மிகத் தெளிவாகப்பேசி ஒரு நல்ல தீர்வினை எட்டியிருக்கலாம். அதைவிடுத்து எமது முஸ்லிம் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்திருக்கும் நிலையில் வடக்கு முஸ்லிம்கள் விடயத்தில் கூட்டமைப்பினர் மட்டும் அக்கறை காட்டவேண்டும் என ஆசைப்படுவது நியாயமானதா? என்பதனை சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் அவர்கள் சற்று சிந்திக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்குகளால் பிரிந்து போன ஒரு நண்பன் காலவோட்டத்தில் உணர்தலில் நம்மோடு சேர்ந்துகொள்ள வரும் போது அவனது உணர்தலைக் கொச்சைப்படுத்துவது எந்தளவு நியாயமானது என்பதை கட்டுரையாளர் ஒரு முறை சுயவிசாரனை செய்யவேண்டும். அதையும் தாண்டி, கட்டுரையாளர் சொல்வதைப்போன்று "இயல்பான அரசியல் விருப்பின் மீது கட்டியெழுப்பப்பட்ட அரசியல் புரிதலாக இருந்தால் இதனை வரவேற்கலாம்..." என்ற கண்ணோட்டத்தில்தான் நோக்கினாலும் இது இயல்பான புரிதலா அல்லது திட்டமிட்ட முன்னெடுப்பா என அறிவதில் முஸ்லிம் காங்கிரஸ் என்ன முயற்சியைச் செய்திருந்தது? எனும் வினாவிற்கு இவரிடம் பதிலிருக்க சாத்தியமில்லை.

எந்த முன்னெடுப்புமின்றி, எதுவுமே பேசாமல் ஒற்றுமைக்கான அழைப்பைக் கொச்சைப்படுத்தல் எமது இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையில் அழகாகுமா? என்பதை முஸ்லிம்கள் யாவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இறுதியாக, மாற்று மதச் சகோதரர்களை அணுகுவதற்கும் அவர்களுடன் சேர்ந்து செயற்படுவதற்கும் பின்வரும் அல்குர்ஆன் வழிகாட்டல் பொருத்தமாக இருக்கும் எனக் கூறி கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

***"...உங்களுக்கும் எங்களுக்கும் இடையே உள்ள பொதுவான விடயத்தின் பக்கம் முதலில் வாருங்கள்..." (அல்குர்ஆன் 3:64)***

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆசிரியர் தலையங்கங்கள்

இதுவரை வெளியான "கிழக்கு" வார இதழ்களில் என்னால் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கங்களில் சில இங்கே இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 01 – 06.10.2012

# புதிதாய் ஒரு கிழக்கு செய்வோம்!

**கி**ழக்கு மாகாணத்தின் அருமையும் பெருமையும் நடந்து முடிந்த தேர்தல் காலத்தை நினைவு கூர்ந்தால் நன்கு புரியும். யாவருமாய்க் கூடி வாழுகின்ற ஒரு புண்ணிய பூமி இது. தனக்கென்றொரு கலாசாரம், பண்பாடு என்பவைகளைக் கொண்டு தனித்துவத்துடன் விளங்கும் இந்த மண்ணின் மீது நீண்ட காலமாக பேரினவாதத்திற்கு ஒரு கண் இருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் இந்த மாகாணத்தின் அபிவிருத்தியில் சர்வதேசத்தின் அக்கறை கூட சிலாகித்துச் சொல்லுமளவிற்கு சிறப்பாயிருக்கிறது. ஏனெனில் இன்றைய உலகத்தின் ஒட்டுமொத்தத் தேவையாய் விளங்குகிற இனநல்லுறவு இந்த மாகாணத்திலிருந்து உதாரணமாய் உயர்ந்து நிற்குமளவிற்கு இங்குள்ள மக்களின் கட்டமைப்பு விளங்குகிறது. மூவினங்களும் இங்கு வாழுகிறார்கள்!

எனவே இந்த நிலையைத் தகர்த்து அந்தப் பிளவுகளில் அரசியல் செய்யவும், இங்குள்ளவர்களின் நிலைத்தலை நிலை குலையச் செய்வதிலும் சிலர் திட்டமிட்டுச் செயற்பட்டுக்கொண்டிருப்பது கண்ணீர் கலந்த நிதர்சனம்.

தேசத்தின் குறித்ததொரு பிரதேசத்தில் தாம் சாராத ஒரு சமூகம் தளைத்தோங்கி வாழும்போது அது தமது மத்திய ஆட்சிக்கு தலையிடியாக இருந்து வருவதாகவே உயர்மட்ட ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். அவ்வாறானதொரு எண்ணப்பாடு தங்களுக்குள் உருவெடுக்கும் போது குறித்த அந்தப் பகுதியில் உரிமை மறுப்பும் ஆக்கிரமிப்புக்களும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவை அப்பகுதி மக்களின் இருப்புக்கே சவாலாகிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானதொரு நிலைதான் கிழக்கு மாகாண மக்களுக்கும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. காணிகளைச் சுவீகரிப்பதற்கான முஸ்தீபுகள், சிறுபான்மையினரின் கலாசாரச் சுவடுகள் அழிக்கப்படுதல், அவை தளைத்தோங்குவதைத் தடுத்தல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் என்பவைகளெல்லாம் மேற்படி விடயத்தின் பிரதிபலிப்புக்களே.

இத்தகைய அபாயத்திலிருந்து எம்மைக் காக்க இங்கு பெரும்பான்மையாய் இருக்கும் தமிழ் பேசும் சிறுபான்மைச் சமூகம் ஒன்றுபட வேண்டும். எமது எதிரிகள் எது நிகழக்கூடாது என ஆசைப்படுகிறார்களோ அது நிகழ்ந்தால்த்தான் நாம் வெற்றியடைய முடியும்.

இனவாதத்தைத் தீயாய்க் கிளறி அதில் அரசியல் சுய லாபத்திற்காய் குளிர்காய ஆசைப்படும் அரசியல் தலைமைத்துவங்கள் இன்று எமக்கு மத்தியில் பெருகிக் கிடக்கிறார்கள். அவர்கள் எமது பூர்வீகம் பற்றியோ, உரிமை பற்றியோ சிந்தித்துச் செயற்படுவதாய் காணக் கிடைப்பது ரொம்பவும் அரிதாகவே இருக்கிறது. மத்திய பேரினவாத ஆட்சியாளர்கள் வழங்குகின்ற சுகபோகங்களுக்காக எம்மை அடமானம் வைக்கின்ற தலைமைகளிடமிருந்து நாம் எம்மைப் பாதுகாக்க வேண்டும்.

ஏனெனில் நாம் கொழும்பில் வீடு வாசல் வாங்கி அமைச்சர்கள் போல் சொகுசாய்க் குடியிருக்க முடியாது . எமது மண்ணில்த்தான் நாம் நிம்மதியாய், ஒற்றுமையாய் வாழ முடியும், வாழவும் வேண்டும். தமிழ் பேசும் சமூகங்களாகிய எமக்குள் ஒரு தனிமனிதக் கொள்கையுடைய குழுவினரால் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் அவை காலங்காலமாக நினைவு கூர்ந்து போற்றிப் பின்பற்றப்படவேண்டும் என்று அவசியமில்லை. அந்தக் கசப்பான நிலையினை ஆளுக்காள் ஞாபகப்படுத்தி எமக்குள் குரோதத்தை வளர்த்துக் கொண்டே இருப்பது எமது பிரிவினைக்கும் பேரினவாத ஆக்கிரமிப்புக்கும் வழிகோலுமே தவிர அதனால் நமக்கு நன்மையேதும் நிகழப் போவதில்லை.

ஆகவே இந்து, இஸ்லாம் என இருவேறு சமயக் கோட்பாட்டுடன் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள் மொழி என்கின்ற ஒரு பொதுக்குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும். தமிழ் பேசும் மக்கள் என்கின்ற பதத்தின் கீழ் ஒன்றிணைந்து எமக்கான உரிமைகளை வென்றெடுக்க முயற்சிக்கவேண்டும். யாவரும் சகோதரராய் வாழும் நிலை ஏற்படும் போது நல்லதொரு கிழக்கு தானாய் வெளுக்கும்!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 02 – 15.10.2012

# தனித்துவமான ஊடகம் என்றால் என்ன?

எழுத்தாளர்கள் எனப்படுவோர் இந்த உலகக் குழந்தையை வழிநடாத்தும் பெற்றோர்கள் என மகாத்மா காந்தி கூறியுள்ளார். அதாவது ஒரு குழந்தை இனிப்பை அதிகம் விரும்பினாலும் தாயோ, இனிப்பு அதிகம் சாப்பிடுவதனால் வயிற்றில் பூச்சி வளரும் என்பதற்காய் அது இனிப்பாக இருந்தாலும் தன் குழந்தைக்கு அதை அதிகம் வழங்கமாட்டாள். அதே சமயம் குழந்தை வெறுத்தாலும் கசப்பான மருந்துகளை வற்புறுத்தியாவது தன் குழந்தையின் உடல் நலனுக்காய் ஊட்டுவாள்.

ஒரு ஊடகமும் இப்படித்தான் செயற்படவேண்டும். அதை விடுத்து எவ்வாறு எழுதினால் அதிகம் பேர் வாங்குவார்கள், படிப்பார்கள் என்றோ எவ்வாறு எழுதினால் தாம் சார்ந்தவர்கள் சந்தோசப்படுவார்கள், திருப்திப்படுவார்கள் என்றோ எழுதுவதும் ஊடகம் நடாத்துவதும் இந்த உலகக் குழந்தைக்கான நல்ல வழிகாட்டலாக இராது.

ஆனால் இன்று அநேகமான ஊடகங்கள் இதனையே செய்து வருகின்றன. இந்தநிலையில் சில ஊடகங்கள் வழிப்படுத்தும் நல்ல பெற்றோர்கள் போலன்றி மனம்போன போக்கில் அழைத்துச் செல்லும் கெட்ட நண்பர்களாகவே நடந்துகொள்வதனைக் காண முடிகிறது.

அந்த வகையில் தனித்துவம் என்கின்ற வார்த்தைப் பிரயோகத்தை மேலெழுந்தவாரியாகப் புரிந்துகொண்டு தனித்துவக் குரல் என்ற சுலோகத்துடன் சில ஊடகங்கள் இயங்குகின்றன. அவர்கள் தனித்துவம் என்று கருதுபவைகள் எதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆழப்பார்த்தால் தமது சமயம் சார்ந்த விடயங்கள், நபர்கள் - தமது இயக்கம் சார்ந்த விடயங்கள், நபர்கள் என முதன்மைப்படுத்தி எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். இவற்றைத் தவறெனச் சொல்லவில்லை. ஆனால் எழுதப்படுகின்ற, பேசப்படுகின்ற விடயங்கள்தான் இங்கு பிரதானமான அம்சம்.

அதாவது தமது சமயம் சார் வழிகாட்டல்களை குறித்த மக்களிடம் தனித்துவமாகப் பேசலாம், எழுதலாம். ஆனால் அங்கு பொதுவான விடயங்களையும் அதே கண்ணோட்டத்துடன் நோக்கும் போது அவை இனவாதத்திற்கும் பிரிவினைக்குமே வழி வகுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் சமயம் சார் ஊடகங்கள் தனித்துவமாக இருக்கலாம். ஆனால் அவை தமக்கான சமயம்சார் விடயங்களில் தனித்துவமான கருத்துக்களை முன்வைப்பதே சாலப் பொருத்தம். அதைவிடுத்து பொதுவாகவுள்ள - உரிமைகள், பொருளாதாரம் மற்றும் அரசியல் தீர்வுகள் என்று வருகிறபோது தனித்துவம் என்ற பேரில் செய்யப்படுகின்ற ஊடகச் செயற்பாடுகள் பெரும்பாலும் இனவாதத்திற்கும் பிரிவினைக்குமான வித்தாக அமைந்துவிடுவதனை ஆழமாய் சிந்திப்போர் புரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறான எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் மறைமுகமாய் தாம் சார்ந்தவர்களின் சுயநலங்கள் பிரதிபலித்துவிடுகின்றன. அவ்வாறான ஊடகச் செயற்பாடுகளால் இன்று, இந்த ஊடகம் இவர்களுக்கு சார்பானது என மக்களின் மனங்களிலே ஒரு பதிவு ஏற்படுத்தப்பட்டு விடுகின்றது. அதனால் அந்த ஊடகத்தின் தகவல்கள் மற்றும் ஏனைய ஆக்கங்கள் மற்ற சமூகத்தால் கணக்கிலெடுக்கப் படாமலும் நம்பகமின்றியும் போய்விடுகின்றன.

இந்த நிலை ஊடகங்களுக்கு ஏற்படுதல் ஆரோக்கியமானதல்ல. ஏனெனில் ஊடகம் என்பது ஒரு பொது வழங்கியாக இருக்கும் போது அந்த ஊடகத்தின் கருத்துக்களின் பரவலாக்கம் பலமாக இருக்கும். மற்றப்படி குண்டாஞ்சட்டிக் குதிரையோட்டமாய் குறுகிவிடவே வாய்ப்புக்களதிகம்.

எனவே, இலங்கை போன்ற பல்லின தேசத்தில் ஊடகங்களைப் பொறுத்த வரை தனித்துவம் என்ற பிரயோகம் நன்மையைப் பேசுவதிலும் உண்மையைப் பேசுவதிலும் இருக்கவேண்டுமே தவிர யாருக்காய் பேசுகிறோம் என்பதிலல்ல.

|| || ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 03 – 22.10.2012

# கழுதை தேய்ந்து கட்டெறும்பாய்...

பல்லின மக்கள் வாழும் இந்தச் சிறுதேசத்தில் பேரினவாத அரசியலின் அடக்கு முறையிலிருந்து தமது மக்களைக் காக்க, அவர்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கவென சிறுபான்மையினருக்கான கட்சிகள் தோற்றம் பெற்றன. 1949ம் ஆண்டு எஸ்.ஜே.வி.செல்வ நாயகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பயணத்தின் ஓரங்கமாகவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது.

சிறுபான்மையினரைக் காக்கவென்று ஆரம்பிக்கப்பட்ட இந்தக்கட்சிகள் ஆரம்பத்தில் எத்துணை அளவு செல்வாக்குடன் திகழ்ந்ததென்று வரலாறு அறிந்தவர்களுக்குத் தெரியும். இதற்குக் காரணம் அந்தக் கட்சியை உருவாக்கியவர்களின் தூய எண்ணம், சமூக நோக்கம், சுயநலமற்ற பார்வை என்பனவேதான். ஆனால் இன்று இவையெல்லாம் தலைகீழாய் மாறி ஆளுக்காள் தலைமையென்றும் பதவியென்றும் ஓடத்தொடங்கவே சிறுான்மைக் கட்சிகளும் அதன் நோக்கங்களும் சின்னா பின்னமாகிப்போயின.

அதிலும் குறிப்பாக எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களால் உருவாக்கப்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று நிறையப் பேரைத் தலைவர்களாக்கிவிட்டிருக்கிறது. நிறையப் பேரை தமது சுகபோகங்களுக்காக பேரம் பேசும் சக்திகளாக்கிவிட்டுள்ளது. நான்தான் தலைவர் என்று ரவூப் ஹக்கீமும், இல்லை நான்தான் தலைவர் என்று அதாவுல்லாவும், நானும் தலைவர்தான் என்று றிஸாத் பதியுதீனும் தடியெடுத்து, மூவரும் தற்போது தூண்டில் காரர்களாகிவிட்டார்கள். கட்சியின் கொள்கைகள் யாவையும் தூக்கிலிட்டு! தந்தையைக் கொலை செய்துவிட்டு சொத்தைப் பங்கிடுவதைப் போல கட்சியைப் பங்கிட்டு, "காங்கிரஸ்" எனும் இனிஷியல் வைத்து அரசியல் வியாபாரம் நடாத்தத் துவங்கிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரினவாதக் கட்சிகளின் அடக்கு முறைகளிலிருந்து சிறுபான்மையினரைக் காத்தல் எனும் அரசியல் முன்னெடுப்பின் அங்கமாய்த் தோன்றிய கட்சி, இன்று பேரினவாதக் கட்சியின் ஆட்சி ஆட்டங்காண விடாமல் காப்பதற்கும், சர்வதேசத்திடமிருந்து பேரினவாதக் கட்சியைக் காப்பதற்கும் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றது... இது எவ்வளவு பெரிய முரண்?

இந்தச் சிறிய தலைவர்கள் தமது மக்களை வைத்து தமக்கானவைகளைப் பேரம் பேசினார்களே தவிர தாம் யாருக்கானவர்கள் என்பதை எப்போதும் சிந்திக்கத் தவறிக் கொண்டே இருப்பதுதான் இந்தப் பிளவும் இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கக் காரணம். இதெல்லாம் நடந்து, இன்று ஆளுக்காள் பகை வளர்த்து - அமைச்சுப் பதவிகள் வளர்க்கும் நிலைக்கும் வந்தாயிற்று.

தற்போது இன்னொரு பிரச்சினை முளைத்திருக்கிறது, யார் பிரிந்து போனாலும் இதுதான் உண்மையான முஸ்லிம் காங்கிரஸ் என்று கூறி ஹக்கீம் நடாத்திவந்த அந்த முஸ்லிம் காங்கிரஸ் மேலும் பிளவுபடும் அபாயம்! கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும் நிலையில் இன்று முஸ்லிம் காங்கிரஸ் தள்ளாடுகிறது.

கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட மூலத்திற்கு தமது கட்சியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் ஆதரவு அளித்தமை தொடர்பில் எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் மேற்படி நிலைக்கு வழிவகுக்கலாம் என பேச்சுக்கள் எழத்துவங்கியிருக்கின்றன. தலைவர் நாட்டில் இல்லை, செயலாளருக்கு சட்ட மூலம் குறித்தே எதுவும் தெரியாது, பிரதிச் செயலாளருக்கு ஆதரவளித்தமை அதிர்ச்சித் தகவலாயிருக்கிறது என்றிருக்க மாகாண சபை உறுப்பினர்கள் அத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

மேற்படி விடயத்தில், வாக்களிக்கும் மக்களின் அவதானத்திற்குரிய நிறைய வினாக்கள் உள்ளன. அதாவது கம்பீரமாய் நிமிர்ந்து நின்ற ஒரு கட்சி இன்று அதன் பிரதிநிதிகளால் சின்னாபின்னமாகி, சுயநலங்களில் ஊறி, நாறி, ஒற்றுமையிழந்து நிற்கும் நிலையில் சிறுபான்மையினருக்கான குரலாய் ஒலிக்கும் வலிமையை இவர்கள் இன்னும் கொண்டுள்ளனரா? இவர்களை ஒன்றுபடுத்துவதா? அன்றேல் இன்னொன்றை உருவாக்குவதா?

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 04 – 05.11.2012

# சின்னாபின்னமாகிப் போகும் சிறுபான்மையினரின் கனவுகள்...

எமது தேசத்தில் சிறுபான்மையினர் விடயத்தில் என்ன நடக்கின்றதென்பதனைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை என்று சொல்ல முடியாது. புரிந்தும் எம் தலைமைகள் புரியாதது போல நடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் யாரால் எமது சமூகத்திற்கு துரோகமிழைக்கப்படுகின்றதோ, யார் இன்னும் துரோகமிழைக்கக் காத்துக்கொண்டிருக்கின்றார்களோ அவர்களுடனே கைகோர்த்துக்கொள்கிறது ஒரு கூட்டம். இன்னொரு கூட்டமோ தங்களுக்குள் முட்டிமோதி எதுவுமில்லாமல் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறது.

எத்தனையோ பிரச்சினைகள் இங்கு மக்கள் மத்தியில் மலிந்துகிடக்க தங்களுக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தடுமாறிக்கொண்டிருப்பதை எண்ணும் போது வெட்கமாய் இருக்கிறது. அண்ணன் - தம்பி ரெண்டு பேரும் தமக்குள் அடிச்சி மாண்டுபோக அடுத்தவன் அனுபவித்த கதையாய் அமைந்துவிடுமோ என்கின்ற அச்சம் அடிக்கடி தோன்றி மறைகிறது.

இவர்களின் பாடு இவ்வாறிருக்க, முஸ்லிம் தலைமைகளைக் கொஞ்சம் திரும்பிப்பார்த்தால் சுயநலங்களில் ஊறி அரசாங்கம் எது சொன்னாலும் கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். பேசவேண்டிய இடத்தில் மௌனமாயிருக்கிறார்கள். வெளியே வந்து கொக்கரிக்கிறார்கள். எதிலுமே தெளிவானதும் உறுதியானதுமான நிலைப்பாடு இல்லாமல் தமது இருப்பை நிலைநாட்டுவதிலேயே கண்ணாய் இருக்கிறார்கள். தம் சமூகம் மண்ணாய்ப் போனாலும் பரவாயில்லை என்ற கணக்கில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியின் பலவீனம்தான் நமது பலம் என்கின்ற கணக்கில் இந்தச் சிறுபான்மைத் தலைமைத்துவங்களின் பலவீனங்களை மிகக்கச்சிதமாக அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைத்த செய்தி காற்றோடு கலந்து அடுத்த நொடிகளிலே ரவூப் ஹக்கீமை வெளிநாட்டுக்கு வழியனுப்பிவிட்டு திவிநெகும சட்ட மூலத்தைக் கொண்டு வந்து, தாதாக்கள் மாமுல் வசூலிப்பதைப் போல் கிழக்கு மாகாண சபையிலும் ஆதரவை அள்ளிக்கொண்டு சென்றது அரசு. ஏன் ஆதரவளிக்கப்பட்டது என்று கேட்டால், தலைவர் வெளிநாட்டில் இருந்தமையினால் தலைவரின் ஆலோசனை பின்பற்றப்படவில்லை என்றொரு நொண்டிச் சாக்கை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கிறது. எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு மக்களை ஏமாற்றுவது…?

ஏதோ திவிநெகும என்பது திடீரென வானத்தில் இருந்து விழுந்ததைப் போலவும் இதுவரை தலைவர் ஹக்கீம் இது பற்றி எதுவுமே அறிந்திருக்கவில்லை என்பது போலவும் காரணங்கள் சொல்லப்படுகின்றன. என்னதான் காரணம் சொன்னாலும், நான் இருந்தால் ஆதரவளிக்க அனுமதித்திருக்க மாட்டேன் என்றோ முஸ்லிம் காங்கிரஸ் திவிநெகுமவை எதிர்க்கிறது என்றோ வெளிப்படையாகச் சொல்ல தலைவர் ஹக்கீமுக்கு திராணியில்லாமலிருப்பது அவரது நிலைப்பாட்டைக் கட்டியம் கூறுகிறது.

இது ஒரு புறமிருக்க 13 ஆம் திருத்தச் சட்டம் மீதான பேரினவாதப் பாய்ச்சல் தற்போது ஆரம்பித்திருக்கிறது. இந்தத் திடீர்ப்பாய்ச்சல் ரொம்பவும் சூசகமாக ஒரு சிலரை வைத்து சிறுபான்மையினரின் நாடித்துடிப்பை பரிசோதிப்பதான அணுகுமுறையை அரசாங்கம் கையாள்கிறது. 13ம் திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்தல் என்ற கோசத்திற்கான எதிர்வினை என்னவாக இருக்கிறது என்ற பரிசோதனையே அது.

போகிற போக்கில் அதிலும் சிறுபான்மையினர் தோற்று விடுவார்களோ என்கின்ற அச்சமே எழுந்துநிற்கிறது. ஏனெனில் முட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கும் முஸ்லிம் தலைமைகளால் இது குறித்து அவ்வளவாக அலட்டிக் கொள்ளப்படுவதாய்த் தெரியவில்லை. ஆகவே இனி நாம் நமது பிரதிநிதிகளை நம்புவதை விடவும் நல்லதோர் மாற்று உபாயம் பற்றிச் சிந்தித்தாலன்றி எமக்கு அரசியல் விமோசனம் கிடைப்பது அவ்வளவு சுலபமானதாக இருக்க முடியாது.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 05 – 12.11.2012

# சர்வாதிகார வைராக்கியம் சமாதியானதுதான் வரலாறு...!

இலங்கை அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்வும் உலகில் தோன்றி சமாதியாகிப்போன சர்வாதிகாரத் தன்மையை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டே இருப்பதாக உணர முடிகிறது. யார் என்ன பேசினாலும், யார் என்ன சொன்னாலும் நாங்கள் நினைப்பதைத்தான் செய்வோம், எங்களைத் தட்டிக்கேட்க இங்கு யாருக்கும் உரிமையில்லை என்கின்ற கணக்கில்தான் அரசின் அநேக செயற்பாடுகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

இதற்குப் பல விடயங்களை உதாரணமாக அடுக்கிக் கொண்டே போகலாம். தங்களது நகர்வுக்கு யாரும் இங்கு தடையாக இருக்கக் கூடாது என்கின்ற அதிரடிப் போக்கில் அரசாங்கம் பயணித்துக்கொண்டிருக்கின்றது. ஊடகத்துறையில் எத்தனையோ விளையாட்டுக்களைக் காட்டி முடித்து சன்டே லீடர் ஆசிரியர் பிரெட்ரிக்கா ஜேன்ஸ் வரை வந்து அதே வேகத்தில் நீதித்துறையிலும் கைவைத்திருக்கிறது அரசு.

எந்த தேசமாக இருந்தாலும் என்னென்ன அடக்கு முறைகளைச் செய்தாலும் நீதித்துறை முறைமையைத் தமது தேவைக்கேற்றாற்போல மாற்ற எத்தனிப்பது ரொம்பவும் பாரதூரமானதாகும். இந்நிலைமை இன்னும் தொடருமானால் இலங்கை குறித்த சர்வதேசத்தின் பார்வை மென்மேலும் கடினமாக நிறையவே வாய்ப்பிருக்கிறது.

அண்மைக்காலமாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் அத்தனை நடவடிக்கைகளிலும் ஏகப்பட்டோரின் எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் நிரம்பிவழிந்து கொண்டே இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்

மாகாண சபைத் தேர்தல்கள் முடிந்த கையோடு மிக்க சாணக்கியமாக திவிநெகுமவிற்கான மாகாண சபைகளின் அங்கீகாரத்தை ஆயிரம் விமர்சனங்களுக்கு மத்தியில் பெற்றக்கொண்டது அரசு. அதனைத் தொடர்ந்து அந்தக் கூச்சல் அடங்குவதற்கு முன்னமே 13ம் திருத்தச் சட்டத்தை அகற்றுவது குறித்த கருத்தாடல்களைப் பரவலாக்கம் செய்யத் தொடங்கியது.

தற்போதோ மாகாண சபையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும் மாகாண சபை முறைமையில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்றும் அரசு பகிரங்கமாகவே பேச ஆரம்பித்துள்ளது. அதிலும் குறிப்பாக அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலர் இதில் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள். அதுமட்டுமன்றி அவர்கள் இதுபற்றி வெளியிடுகின்ற கருத்துக்கள் சர்வாதிகாரச் சாயம் பூசியவைகளாகவே தெரிகின்றன. வட மாகாண சபை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கையில் கிடைத்தால் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தால் கொண்டு வரும் சட்டத்திற்கு அது தடையாக இருக்கும், அத்தோடு அதிகாரங்களைக் கேட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றங்களை நாடும் என்றும் அது அபாயமானது என்றும் அரசாங்க அமைச்சர்கள் சிலர் தெரிவித்திருக்கிறார்கள்.

அப்படியானால் அரசாங்கம் என்ன செய்தாலும் அதனைக் கேட்க, எதிர்க்க யாரும் இருக்கக் கூடாது என்பதும் அதிகாரம் கேட்டு நீதிமன்றத்திடம் செல்வது அபாயமானது என அஞ்சுவதன் மூலம் அரசாங்கம் அநீதியிழைக்கவே விரும்புகிறது எனும் விடயமும் அப்பேச்சிலிருந்து முடிவாய்க் கிடைக்கிறது.

இந்த வரிசையில் இன்னொரு விடயத்தினையும் சேர்த்துக்கொள்ளலாம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் இலங்கையில் மனித உரிமை தொடர்பில் முன்வைத்த பரிந்துரைகளில் ஏறக்குறைய அரைவாசிப் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் புறந்தள்ளியுள்ளது.

இந்த விடயங்களையெல்லாம் அப்படியே பட்டியலிட்டுப் பார்க்கும் போது இலங்கை அரசின் சர்வாதிகாரப் போக்கினை சாமானியர்களாலும் புரிந்துகொள்ள முடியும். ஆனால் என்னதான் அடக்கினாலும், ஒடுக்கினாலும் சர்வாதிகார வைராக்கியம் இறுதியில் சமாதியாகிப் போனதுதான வரலாறு!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 06 – 19.11.2012

# உரிமைகளை அடியோடு பிடுங்குவதற்கான முஸ்தீபுகள்

11957

"பயங்கரவாதத்திற்கு எதிரான மிகவும் நம்பிக்கையான ஆயுதம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதே..."

இக்கூற்றைப் படிக்கும் போது சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற யாரோ ஒரு மாமனிதர் பேசியதைப் போன்றுதான் யாவருக்கும் தென்படும். ஆனால் உண்மை அதுவல்ல. 2006ம் ஆண்டு பெப்ரவரி 04ம் திகதி காலிமுகத் திடலில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் எமது அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் உரையாற்றும் போது அவர் பேசிய வார்த்தைகள்தான் மேலுள்ளவை.

தற்போது அரசாங்கம் செல்கின்ற போக்கிற்கும் மேற்சொன்ன அவரது உரைக்கும் கடுகளவும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ தவறுதலாகச் சொல்லிவிட்டதாகவே உணரக்கிடக்கிறது. அவ்வாறில்லையாயின் அவர் சொன்ன அந்த நியாயந்தான் என்ன...?

யுத்தம் முடிந்து பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அங்குள்ள மக்கள் இன்னும் அகதிகளாகவே வாழ்வதா...?
தமது சமய வழிபாட்டுத்தளங்கள் தடமழிந்து – சீரழிந்து கிடக்கும் நிலையில் விகாரைகள் கட்டப்படுவதும் புத்தர் சிலை வைக்கப்படுவதுமா...?
தமது சொந்த நிலத்தில் வாழ்வாதாரச் செயற்பாடுகளைச் செய்யமுடியாமல் ஆயுத முனைகள் புடை சூழ அச்சுறுத்தல்களுக்குள் அடங்கிக்கிடப்பதா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது வாக்குரிமையையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்த விடாமல் வடமாகாணத் தேர்தலை இழுத்தடித்துக்கொண்டே செல்வதையா…?

இவற்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும் என்று சொன்ன நியாயங்கள் என்ன இருக்கின்றன…?

மேடை கிடைக்கிறது, ஒலிவாங்கி இருக்கின்றது, புடைசூழ ஊடகங்கள் இருக்கின்றன என்கின்ற காரணங்களுக்காக மட்டும் வாக்குறுதி வழங்குவதும் பேசுவதும் வெறும் பம்மாத்துத்தான் என்பதை காலம் காட்டிக்கொடுத்துவிடும் என்பதனை வாக்குறுதி வழங்கு முன்னர் யாவரும் சிந்தித்தே பேசவேண்டும். அப்பாவித் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதுதான் பயங்கரவாதத்திற்கு எதிரான ஆயுதம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள், அந்த நியாயத்தை வழங்காமல் சிறுபான்மை மக்களின் உரிமைகளை எவ்வாறு சூறையாடலாம் என்றே தனது சகாக்களுடன் திட்டமிடுவதாகவே அனேகரால் விமர்சிக்கப்படுகின்றது. அவ்வாறானால் பயங்கரவாதத்திற்கு எதிரான ஆயுதம் என்று தானே ஒப்புக்கொண்ட நியாயத்தை வழங்க மறுக்கும் இவர் பயங்கரவாதத்திற்கு சார்பானவரா என்றே கேட்கத்தோன்றுகிறது.

ஏனெனில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட ஒட்டுமொத்த சிறுபான்மையினரின் உரிமைகளும் அதிகாரங்களும் எங்கெல்லாம் மேலோங்கி நிற்கிறதோ அங்கெல்லாம் புகுந்து அடியோடு பிடுங்கும் அத்தனை முயற்சிகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகளெல்லாம் தான் சார்ந்த, தனது அரசாங்கம் சார்ந்த ஆட்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு மக்களினதும் பிற அரசியல் தலைவர்களினதும் மற்றும் சர்வதேசத்தினதும் நாடித்துடிப்பை அளந்து பார்த்து அடுத்தடுத்ததாக அடியோடு பிடுங்கும் நடவடிக்கைகளை அரசு மிகச் சாதுரியமாக மேற்கொள்கின்றது. அவ்வாறானதொரு நாடித்துடிப்புப் பரிசோதனைதான் இந்தப் 13வது திருத்தச் சட்டத்தை அகற்றுதல் குறித்து எழுந்துள்ள சர்ச்சையாகும்.

இந்த "அடியோடு பிடுங்குதல்" எனும் மிலேசத் தனத்திலிருந்து சிறுபான்மையினரைப் பாதுகாக்கவேண்டுமாயின் ஒரே வழிதான் இருக்கிறது. ஆனால் அது இலகுவில் இயலாத வழி, அதுதான் சிறுபான்மை அரசியல் தலைமைத்துவங்களின் சுயநலம் துறந்த ஒற்றுமை!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 07 – 26.11.2012

# யுத்தவெற்றிக் கொண்டாட்டமும் மாவீரர் தின நிகழ்வுகளும்?

யுத்த வெற்றி நிகழ்வுகளை இலங்கை அரசாங்கம் கொண்டாடி வருவது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்த நிகழ்வானது போரில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு பெருங்கவலையளிப்பதாகவும் அது மனிதாபிமானம் சார்ந்த செயற்பாடாகவும் இல்லை எனும் கருத்தும் ஊடகங்களில் அவ்வப்போது கசிந்து கொள்வதும் வழக்கமாகியிருக்கிறது.

எத்தனையோ வருடங்களாக தேசத்தைப் பீடித்திருந்த யுத்த அரக்கனை நாட்டைவிட்டு இல்லாதொழித்து உயிர் மீதான பயம் உள்ளங்களில் ஒவ்வொரு கணமும் இருந்து வந்த கோரத்தை இல்லாமல் செய்து ஏதோ ஒரு வகையில் யாவருக்கும் விடுதலை கிடைத்தது யாரும் மறுக்க முடியாது உண்மை. அதே சமயம் அந்த யுத்தம் முடிவடைவதற்கு முன் அதை அழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது மக்கள் எத்தனையோ துன்பங்களையும், அழிவுகளையும் சந்திக்க நேர்ந்தமையும் எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாத யதார்த்தம்.

எனவே யுத்தவெற்றிக்கொண்டாட்டம் ஒருவகையில் நியாயமாகவும் இன்னொரு வகையில் நியாயமின்றியும் நோக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால் எந்த விடயமானாலும் அரசாங்கம் செய்கிறதென்பதற்காக மட்டும் அரசு சாரா ஊடகங்களும், அமைப்புக்களும், தனிநபர்களும் அரசை விமர்சித்தே பழக்கப்பட்டிருக்கும் கலாசாரத்தின் பின்னணியில் இந்த யுத்தவெற்றிக் கொண்டாட்டம் விமர்சிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அரசாங்கம் யுத்தவெற்றியைக் கொண்டாடுவதென்பது யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட பொதுமக்களுக்காகவோ அல்லது விடுதலைப்புலியினருக்காகவோ அல்ல, மாறாக தேசத்திலிருந்து விரட்டப்பட்ட பயங்கரவாதம் எனும் அரக்கனுக்காகவே என்ற யதார்த்தத்தை யாவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த விடயம் இங்கு விதந்து எழுதப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. 30 வருட காலமாக நாட்டில் யுத்தத்தை அரங்கேற்றிக் கொண்டும், எந்த உடன் பாட்டுக்கும் வராமல் நாட்களை நகர்த்திக்கொண்டும், பொதுமக்களைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்ளைக் கொன்றொழித்துக்கொண்டும் மற்றும் கொன்றொழிக்கக் காரணமாயும் இருந்த விடுதலைப் புலிகளுக்காக வருடா வருடம் தமிழ் மக்கள் “மாவீரா்” தின விழா கொண்டாடும் போது மக்களின் நிம்மதியை நிலைகுலையச் செய்துகொண்டிருந்த யுத்தத்தை அடியோடு அழித்தமையை நினைவுகூர்ந்து யுத்தவெற்றிக் கொண்டாட்டம் அரங்கேறுவதில் அவ்வளவாக விமர்சிக்க எதுவுமில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அரசாங்கத்தின் யுத்தவெற்றிக்கொண்டாட்டம் மனிதாபிமானமற்றதாகவும் போரில் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் வலிகளுக்குள்ளாக்கும் செயற்பாடு எனவும் கருதினால், மாவீரா் தினம் என்பதும் அத்தகையதொரு செயற்பாடாகவே நோக்கமுடியும்.

ஏனெனில் விடுதலைப் புலிகளாலும் எத்தனையோ பொதுமக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எத்தனையோ இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள். ஏன், சொல்லப்போனால் தமிழினத்தின் பேரழிவுக்கான காரணங்களைப் பட்டியல்படுத்தினால் அவர்களுக்கும் அதில் பிரதான இடம் கிடைக்கும் என்பதை நிரூபிக்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன, இன்னும் வெளியாகிக் கொண்டுமிருக்கின்றன.

இவ்வாறிருக்கையில் அவர்களுக்கான பிரார்த்தனைகளும் புகழாரமும் வருடா வருடம் “மாவீரா்” தினமாக நவம்பர் 27இல் இடம்பெறுகையில் யுத்தவெற்றிக் கொண்டாட்டத்தை இங்கு விமர்சிப்பதில் முழுமையான நியாயம் காணமுடியாதுள்ளது. அதையும் தாண்டி மனிதாபிமானம் பேசுவதாக இருந்தால் மேற்படி இரு நிகழ்வுகளும் இனிமேல் நிறுத்தப்படுவதே நியாயம்!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 08 – 03.12.2012

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு தம் பலம் அறியவேண்டும்!

இன்று இலங்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பலவீனப்பட்டு நிற்கின்ற நிலையில், சிறுபான்மையினரின் விடயத்தில் அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்களை இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாள்கிறது, நடாத்துகிறது என்பதனை அறிந்து கொள்ளவும் தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதியாகவும் சர்வதேசம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையே ஏற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேசம் மட்டுமல்ல இந்த நாட்டின் ஜனாதிபதியும் கூட தமிழ் மக்களின் அதிகப்படியான ஆதரவைக் கொண்ட தமிழர்களின் பிரதிநிதிகளாய் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையே கருதும் நிலை யாவரும் அறிந்த விடயமாகும். இந்தியா தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்குகின்ற கௌரவம் மற்றும் தெரிவுக் குழுவுக்குள் வருமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஜனாதிபதி அழைக்கும் அவசியம் என்பன தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறானதொரு அந்தஸ்த்தைச் சுமந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள உள் முறுகல் தமிழ் மக்களின் மத்தியிலும் புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் பாரிய சங்கடத்தினை ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமன்றி தங்களுக்கு ஒரு நிலையான, உறுதியான அரசியல் தலைமைத்துவமாக இன்றி கூட்டமைப்பு சிதறிச் சின்னாபின்னமாகிவிடுமோ என்கின்ற அலாதியான அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் தலைதூக்கியுள்ளமை தமிழர் அரசியலில் ஒரு பாரதூரமான அம்சமாகவே கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில், இது கொள்கை சார்ந்த முறுகலில்லை, மாறாக நிருவாகம் சார்ந்த கருத்து முரண்பாடுகளே என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கூட்டமைப் பிலுள்ள சில சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

இது அவர்கள் பக்க நியாயமாக இருந்தாலும் கூட்டமைப்புக்குள் முரண்பாடு இருக்கிறது என்பதை அவர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையே இது காட்டுகிறது. சிறுபான்மைத் தலைமைத்துவங்களுக்கிடையில் கருத்துவேறுபாடுகளை உருவாக்குவதிலும் அவர்களது ஒற்றுமைச் சிதைவில் குளிர்காய்வதிலும் பேரினவாத அரசு எப்போதும் கரிசனையாகவே இருந்து வருவது வரலாறு.

அந்த வகையில் அந்தக் கைங்கரியத்தை முஸ்லிம் தலைமத்துவங்களுக்கிடையில் ஏற்படுத்தி இன்று அவர்களைச் செல்லாக்காசாகவும் தலையாட்டி பொம்மைகளாகவும் இன்றைய அரசாங்கம் பயன்படுத்து வருகின்றமையும் கண்கூடு.

ஆனால் இத்தகையதொரு உடைப்பினை தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும் ஏற்படுத்த ஆரம்பம் முதலே அரசு எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டும் சிறிதும் அசைக்க முடியாமல் போனமை தமிழர்களுக்குப் பெரியதொரு ஆறுதலாக இருந்தாலும் தற்போது கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் உள்முறுகல் அரசின் இத்திட்டத்திற்கு வழிகோலிவிடுமோ என தமிழர்கள் மட்டுமல்ல சர்வதேசமும் கூட வெகுவாக அஞ்சுகிறது.

ஆகவே இந்த முறுகலானது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சொல்வதைப் போன்று நிருவாகம்சார் முரண்பாடு மட்டுமே என்றாலும் அதற்குத் தீர்க்கமான தீர்வு காணாமல் பராமுகமாக விட்டுவைப்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல. சுற்றிவரச் சூழ்ச்சிகள் தாண்டவமாடும் காலகட்டத்தில் மிக அக்கறையுடன் இந்த நோய்க்கு கூட்டமைப்பினர் மருந்திட்டேயாக வேண்டும். இல்லையேல் இந்நிலைமை பல பாதகமான விடயங்களை ஏற்படுத்திட நிறையவே வாப்புள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஒற்றுமையின் பலத்தையும் தமக்குத் தற்போதுள்ள அந்தஸ்த்தையும் முதலில் தாம் புரிந்துகொள்வதுதான் இந்தப் பிரச்சினைக்கான தீர்வில் முதல் அம்சமாகும்.

|| || ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 09 – 10.12.2012

# தேசத்தின் மீதான நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் அக்கறையின்றியிருக்கிறது அரசு!

இலங்கை தற்போது தொடர்ச்சியாக விமர்சனங்களுக்குள் சிக்கிக்கொள்ளும் ஒரு நாடாக மாறி வருவதனை அவதானிக்க முடிகிறது. எதிர்க்கட்சிகள், உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள் எனத் தொடங்கி சர்வதேசம் வரையிலும் இன்று பல்வேறுபட்ட விடயங்களுக்காக இலங்கை அரசாங்கம் தற்போது தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

சனல் 4 வீடியோ காட்சியிலிருந்து ஆரம்பித்து சரத் பொன்சேகா விவகாரம் வரை எழுந்த ஏகப்பட்ட விமர்சனங்கள் ஓரளவு ஓய்ந்து இன்று ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணை மற்றும் பல்கலை மாணவர் கைது விவகாரம் என அடுத்தடுத்ததாக விமர்சனங்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறது இலங்கை அரசு!

தற்போதெல்லாம் சில வெளிநாடுகள் அரசியல் நடாத்துவதற்கான துடுப்பினை வழங்கும் நாடாக இலங்கை மாறிக்கொண்டிருக்கிறது. இலங்கை மக்களுக்கு யாரென்றும் தெரியாதவர்கள், இலங்கை மக்களை யாரென்றும் தெரியாதவர்கள் கூட இன்று இலங்கை குறித்து அறிக்கை விட்டுக்கொண்டிருப்பதனை காணக்கிடைக்கிறது.

இலங்கை அரசு வேண்டுமானால் இந்த விமர்சனங்களையும் அவப்பெயர்களையும் பொருட்படுத்தாமல் தான்தோன்றித் தனமாய் இயங்கிக் கொண்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த விமர்சனங்கள் இப்படியே அடுத்தடுத்து தொடருதல் நாட்டின் நாமத்திற்கு நல்லதல்ல என்பதை எவருடைய உள் மனதும் உணராமலிருக்க முடியாது. இந்த விடயமானது எமது தேசத்தின் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிறையவே தென்படுகின்றன.

இங்கு தனிமனிதன் தொடங்கி நாடு வரை யாராலும் தனித்து வாழமுடியாது. அவ்வாறு முடியும் என்கின்ற மமதையில் ஆட்சி நடாத்தியவர்களின் கதி எவ்வாறாகியிருக்கிறது என்பதனை வரலாறு எம்மனைவருக்கும் கற்றுத்தந்திருக்கிறது. எனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வாங்கி வைத்திருக்கும் தைரியத்தில் இலங்கை அரசும் இவ்வாறான தொடர் விமர்சனங்களை இன்னுமின்னும் தம்மீது வலிந்து வாங்கிக்கொண்டால், அரசியல் ரீதியிலானாலும் சரி பொருளாதார ரீதியிலானாலும் சரி, அது அபாயகரமான எதிர்காலத்தை தேசத்திற்கு உருவாக்கிவிடும்!

எனவே இத்தகைய விமர்சனங்களுக்கு அரசாங்கம் மிக அவசரமாகத் தீர்வு காண்பதோடு இனிவருகின்ற காலங்களில் இவ்வாறான விடயங்களில் மிகவும் நிதானித்தும் அணுகவேண்டியது நாட்டின் நற்பெயரைக் கட்டி யெழுப்புவதற்கு இன்றியமையாததொன்றாக இருந்து கொண்டிருக்கிறது.

நிலைமை இவ்வாறிருக்க, அரசின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க சிலர் முயற்சிப்பதாக இலங்கையின் முக்கிய முஸ்லிம் அமைச்சர் ஒருத்தர் கவலைப்பட்டிருக்கிறார். அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டால் அரச தலைமைகளுக்கு குளிர்ச்சியூட்டுதல் மட்டுந்தான் தமது கடமை என்றே அனேக அரச பிரதிநிதிகள் எண்ணிக்கிடக்கிறார்கள். இதுவே ஒரு அரசாங்கம் பாதை மாறுவதற்குப் பிரதானமான காரணியாயிருக்கிறது. அவ்வாறில்லாமல் அரசை நெறிப்படுத்துவதற்கான தக்க ஆலோசனைகளையும் முன்னெடுப்புக்களையும் மேற்கொள்வதே அவர்களின் தற்போதைய பிரதான கடமையாகும்.

எனவே தம்மைக் குளிர்விக்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மையிருக்கிறது என்பதற்காக எதுவேண்டுமானாலும் செய்யாமல் நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்ப அரசு அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 10 – 17.12.2012

# இனங்களுக்கிடையே எண்ணக்கரு ரீதியிலான பிளவுகளை ஏற்படுத்தும் சதிகள்

இன்று சிறுபான்மையினர் இலங்கையில் வெவ்வேறாகக் குறிவைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கை என்ற பேரில் நேரடியாக அரசாங்கத்தாலும், முஸ்லிம்கள் சனத்தொகையைப் பெருக்கி நாட்டைப் பிடித்து விடுவார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் பௌத்த பேரினவாதிகளாலும் நாளுக்கு நாள் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

குறித்த சில பௌத்த பேரினவாதக் குழுக்கள் நாட்டில் எங்காவது ஓரிடத்தில் முஸ்லிம்களைக் குறிவைத்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் அங்கு சில அரச தரப்பு முஸ்லிம் அமைச்சர்கள் விரைவதும் மீடியாக்களுக்கு அறிக்கை விடுவதும் மற்றும் இது தொடர்பில் முஸ்லிம்கள் அஞ்சத் தேவையில்லை என அரச தரப்பிலிருந்து செய்திகள் வெளியாவதும் இன்று அடிக்கடி இடம்பெற்று வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் இந்தக் குழுவைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது குறித்த இடங்களில் இவர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தண்டனை வழங்கவோ எவரும் இன்னும் முன்வரவில்லை என்பது சிறுபான்மையினரை பெரிதும் சங்கடத்திற்குள்ளாக்கியுள்ளதோடு இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் பெரிதாய் ஏதுமிருக்குமோ என்கின்ற அச்சத்தையும் பரவலாக ஏற்படுத்தியிருக்கிறது.

பள்ளிவாயல் தொடங்கி குர்ஆன் மத்ரசாக்கள் வரை, வியாபாரம் தொடங்கி குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறல் வரை இன்று இலங்கை முஸ்லிம்கள் சவால்களை எதிர்கொள்ளத் துவங்கியுள்ளனர். ஒரு பல்லின தேசத்தில் இவ்வாறான அடிப்படை விடயங்களுக்காக ஒரு இனம் அச்சுறுத்தப்படுவதும் சதா அழுத்தங்களை எதிர்கொள்வதும் பாரதூரமான செயலாகும்.

இந்த தேசம் எல்லோருக்கும் சொந்தமானதென்றும் இங்கு சிறுபான்மை என்று எவரும் இல்லை, யாவரும் இலங்கையர்கள் எனக் கவர்ச்சிகரமாகப் பேசிய அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இவ்விடயத்தில் நேரடியாக அக்கறை எடுத்து ஒரு நல்ல தீர்வினை சிறுபான்மைச் சமூகத்திற்கு வழங்கவேண்டும். முஸ்லிம்கள் தொடர்பில் குறித்த பேரினவாதக் குழுக்களானது ஆதாரமற்ற பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு சிங்களவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பான தப்பான அபிப்பிராயத்தை விதைக்க விளைவதோடு உளவியல் ரீதியிலான சலவையினையும் மேற்கொள்ள முனைகின்றனர்.

இந்த நடவடிக்கையானது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கும் இனநல்லுறவிற்கும் பாரிய பங்கத்தினை ஏற்படுத்திவிடும் என்பதை அரசியல் தலைமைகள் உட்பட யாவரும் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். ஏனெனில் இந்த விடயம் முளையிலே கிள்ளப்படாமல் தொடரும் பட்சத்தில் விரும்பியோ விரும்பாமலோ இனங்களுக்கிடையே எண்ணக்கரு ரீதியிலான பிளவும் குரோதங்களும் ஏற்பட்டுவிடும். அது நாட்டின் அமைதியை பெரிதும் சீர்குழைத்து விடும்.

இந்த அபாயத்திலிருந்து தேசத்தை மீட்டெடுப்பதாயின் இந்த பௌத்த குழுக்களின் தொடர்ச்சியான இனவாத நடவடிக்கைகள் மற்றும் பொய்ப்பிரசாரங்கள் என்பவைகளை அவசரமாகத் தடுத்து நிறுத்துவதற்கும் இனங்களுக்கிடையிலான நல்லுறவை வலுப்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்களையும் உடனடியாக ஆரம்பித்தாகவேண்டும்.

இவ்விடயத்தில் சிறுபான்மைத் தலைமைத்துவங்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தி, அழுத்தம் வழங்கி ஆகுமான விடயங்களைத் துரிதமாய் மேற்கொள்ள வேண்டியது அவசியத் தேவையாகும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 11 – 31.12.2012

# சிறுபான்மையினர் நிதானித்து அணுகவேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது

கடந்த இதழிலும் சிறுபான்மையினர் குறி வைத்துத் தாக்கப்படுவது குறித்து பேசியிருந்தோம். மீண்டும் அவ்விடயம் குறித்தே பேச வேண்டிய தேவை எழுந்துள்ளது. இரண்டு விடயங்கள் இதில் முதன்மைப்படுத்திப் பேசப்பட வேண்டியவைகளாகின்றன. ஒன்று, அண்மைய நாட்களாக வடக்கு எதிர்கொண்டு வரும் கைதுகள் தொடர்பான பிரச்சினைகள். மற்றையது முஸ்லிம்கள் மீது குறி வைத்து நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பேரினவாதப் பிரசாரங்களும் ஒடுக்குமுறைகளும்.

வடக்கில் கைதுகள் அதிகரித்து வருகின்றன. அதுகுறித்து இலங்கைக் காவல் துறைப்பேச்சாளர் தெரிவிக்கையில் கைதுசெய்யப்பட்டவர்கள் யாவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களே என்று கூறியுள்ளதோடு அது புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் நிகழ்ந்தவை என்றும் தெரிவித்துள்ளார். இதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாய் கோசமிட்ட அரசாங்கம் அக்கருத்தை மீளத் திருப்பிப் பெற்றுக்கொண்டதாய் ஆகியிருப்பது புலனாகிறது.

எது எவ்வாறுதான் ஆனாலும் அண்மையில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருப்பது கட்டாயம் கவனிக்கப்படவேண்டியதொன்று. அதாவது, இலங்கையில் காலத்துக்குக் காலம் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களே புலிகள் உருவாகக் காரணமயிருந்தன என்பது ஒன்றும் இங்கு ரகசியமான விடயமல்ல. தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் அதை ஜனநாயக ரீதியாக தட்டிக்கேட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைகளால் பதிலளிக்கப்பட்டதன் காரணமாகத்தான் புலிகள் போன்ற ஆயுதக் குழுக்கள் உருவாகினர். அவர்கள் தாமாக உருவாகியவர்கள் அல்லர். ஒடுக்குமுறைகளால் உருவாக்கப்பட்டவர்கள்.

அப்படியானதொரு சூழ்ச்சியின் அடிப்படையிலேயே தற்போதும் சில முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. அந்த வலையில் தமிழர்கள் விழுந்துவிட்டால் சர்வதேசத்தில் தமக்குள்ள கெட்ட பெயரைத் துடைத்துக் கொள்ளலாம் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. எனவே தமிழர்கள் இவ்விடயத்தில் மிகவும் நிதானித்து நடந்து கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்தது முஸ்லிகள் என்றைக்குமில்லாதவாறு அண்மைக் காலங்களாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். பள்ளிவாயல் உடைப்பில் ஆரம்பித்த சமயம்சார் பிரச்சினை இன்று பொருளாதாரம், கல்வி என எல்லாத் துறைகளிலுமே பேரினவாதிகளால் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

முஸ்லிம்களின் உற்பத்திகளைப் புறக்கணிக்கவேண்டும் என அவர்களின் பொருளாதாரத்தில் கைவைத்த பேரினவாதிகள் கடந்த சட்டக்கல்லூரிக்கான போட்டிப் பரீட்சை விவகாரத்தின் மூலம் முஸ்லிம்களின் கல்வியிலும் கைவைக்க ஆரம்பித்திருக்கின்றனர். இது சாதாரணமான விடயமல்ல. இந்நிலை தொடருமானால் முஸ்லிம்களின் இருப்பு தொடர்பிலே பல்வேறு பிரச்சினைகள் எதிர்காலத்தில் ஏற்பட்டுவிட வாய்ப்பிருக்கிறது.

இப்படியான நெருக்கடியான நிலையிலும் முஸ்லிம் தலைமைத்துவங்கள் வாய் மூடி மௌனிகளாக இருந்து வருவது கவலைக்குரிய விடயமாகும். எனவே இதுவிடயத்தில் முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஒன்றுபட்டு முஸ்லிம் அரசில் தலைமைத்துவங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு காத்திரமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஏனெனில் அவர்கள்தான் அரசாங்கத்துடன் நெருக்கமாயிருப்பவர்கள். அவர்களால்தான் அரசாங்கத்தை அணுக முடியும். அரசாங்கத்தினால்தான் இதற்குத் தீர்வும் காணப்படமுடியும்!

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 11 – 07.01.2013

# மலிந்து வரும் கலாசாரப் பிரச்சினைகளுக்கு பெற்றோர்களும் பிரதான காரணம்

அண்மைக் காலமாக பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய அடுக்கடுக்கான செய்திகள் வெளியாகிக் கொண்டிருப்பதனை ஊடக உலகினூடு அவதானிக்க முடிகிறது. படித்தவர்கள், பாமரர்கள், பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் என எல்லா மட்டத்தினரும் இந்தக் கேவலங்களை அரங்கேற்றி வருவதனைக் காணக்கிடைக்கிறது.

இவ்விடயம் எதனைக் காண்பிக்கிறதென்றால் எல்லா மட்டத்தினரும் ஏதோவொரு பொது இயங்கு தளத்தினூடுதான் இத்தகைய விடயங்களுக்கு ஆட்கொள்ளப்படுகின்றனர் என்பதையேயாகும். அதாவது வயது வித்தியாசமின்றி, அறிவு வித்தியாசமின்றி இத்தகைய மிலேசத்தனங்களில் ஈடுபடுகிறார்களானால் எல்லோருக்கும் பொதுவாகக் கிடைக்கும் சில விடயங்கள்தான் இதற்குத் தூண்டுதல் அளித்துக் கொண்டிருப்பதாகக் கொள்ள முடியும்.

இன்று எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்கின்ற ஊடக வசதிகள் மற்றும் யாவரும் கலந்து வாழுகின்ற சமூகத்தின் கலாசாரக் கட்டமைப்புக்கள் என்பவைகள்தான் அந்தப் பொதுவான விடயங்களாகும். இன்றைய ஊடகங்கள் பெரும்பாலானவை விரசங்களை வியாபாரமாகக் கொண்டே ஊடகத் தொழில் நடாத்தி வருகின்றன.

இதன் தாக்கம்தான் இன்று வன்புணர்ச்சியென்றும், பலாத்காரம் என்றும், கூட்டு வல்லுறவு என்றும், பொருந்தாக் காமம் என்றும் பல்வேறு வடிவமெடுத்துக் கொண்டிருக்கின்றன என்றால் அதனை மறுக்க முடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தது யாவரும் ஒன்றாய் வாழுகின்ற சமூகக் கலாசாரக் கட்டமைப்புக்கள். கலாசாரம் என்கின்ற போது ஆண்-பெண் தொடர்பாடல் மற்றும் ஆடைக் கட்டமைப்பு என்பன இவ்விடத்தில் முதன்மை பெறுகின்றன.

இன்றைய சூழலில் பெண்கள் ஆடவர்களுடன் பழகும் விதம் மற்றும் அவர்களது ஆடைக்கட்டமைப்பு என்பன முன்னைய காலங்களை விடவும் நாகரிகம் என்ற பேரிலான அசிங்கங்களாகவே அவதானிக்க முடிகிறது. இந்த நிலைமை எந்த அளவுக்கு மோசமடைந்துள்ளது என்றால் தலை நகர்ப்பகுதிகளில் பெண் பிள்ளைகள் தமது பெற்றோருடன் செல்லும் போது கூட அவர்கள் அணிந்து செல்லும் ஆடைகள் அறையும் குறையுமாக அங்கங்கள் வெளித்தெரியும் படியாக அமைந்திருக்கின்றன. இன்று நடைபெறுகின்ற மேற்சொன்னவை சார்ந்த பிரச்சினைகள் சமூகத்தில் உருவெடுக்க யார் உடந்தையாக இருக்கின்றார்கள் என்பதற்கு இதுவொன்றே போதுமான சான்றாகக் கொள்ளலாம்.

இளவயது உணர்வுகளைக் கடந்து வந்த பெற்றோர்கள் எந்த உத்தரவாதமுமின்றி தமது பிள்ளைகளை வெளிச் சூழலில் கட்டுப்பாடின்றி யாருடனும் பழக அனுமதிப்பது, சினிமா - பார்க் என இரா நேரங்களில் அலைய அனுமதிப்பது, செல்போன் மற்றும் இணையம் என்பவைகளை நிபந்தனையின்றி பயன்படுத்தும் வாய்ப்புக்களை வழங்குவதும் அனுமதிப்பதும் போன்ற பல்வேறுபட்ட வழிகளை ஏற்படுத்திக்கொடுத்து விட்டு பிரச்சினை என்றான பிறகு தலையில் கைவைக்கும் பெற்றோர்கள்தான் இன்று அதிகம் என்று துணிந்து சொல்ல முடியும்.

பொதுவாக பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க இரண்டு வழி. ஒன்று பிரச்சினையில் இன்வால்வ் ஆகி அதில் நமது சாதுரியத்தைக் காண்பித்து வெற்றி பெறுவது. மற்றையது பிரச்சினைகளே வராமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதும் அவ்வாறான விடயங்களிலிருந்து விலகி நடந்துகொள்வதும். இதில் உடலியல் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க இரண்டாவது வழியே உகந்தது. எனவே இன்வால்வ் ஆகிவிட்டு ஆர்ப்பாட்டம் நடாத்துவதெல்லாம் இதற்குத் தீர்வல்ல. தமது பிள்ளைகளின் பாதுகாப்பிற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதே பெற்றோர்கள் மீதுள்ள பாரிய பொறுப்பாகும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 13 – 21.01.2013

# நிம்மதியிழந்து நிற்கும் இலங்கையின் நீதித்துறை

பிரதம நீதியரசர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாக அரசாங்கம் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தேசம் மீதுள்ள மிச்ச சொச்ச மதிப்பும் மரியாதையும் கூட சர்வதேசத்தின் மத்தியில் அந்த மூச்சுக்காற்றோடு முடிந்து விட்டதான விமர்சனங்கள் வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசு வேண்டுமானால் தான் நினைத்ததை முடிக்கும் வல்லமை கொண்டது என இந்த விடயத்தில் பெருமைப்பட்டுக்கொண்டாலும் இதன் பின் விளைவுகள் மோசமானதாக அமையலாம் என இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கவலை தெரிவித்துள்ளது.

அதே சமயம் தலைமை நீதிபதி ஷிராணி பண்டார நாயக்க விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முன்னெடுப்புக்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளில் கூட தாக்கம் செலுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சி நியாயமான குற்றச் சாட்டினை முன்வைத்துள்ளது. அது மாத்திரமன்றி அமெரிக்கா தொடக்கம் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு வரையிலான உலகின் முக்கிய அங்கங்கள் இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளில் தாம் அதிருப்தி அடைவதாக பகிரங்கமாகத் தெரிவித்துள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் யாரென்ன சொன்னாலும் நாங்கள் நினைப்பதை நிறைவேற்றியே காட்டுவோம் என்கின்ற இறுமாப்புடன் அரசாங்கம் அடுத்த கட்டங்கள் நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்கம் மாத்திரமல்ல உலகிலுள்ள எந்த அரசாங்கமும் சர்வதேசத்தைப் புறந்தள்ளி ரொம்பக் காலம் தனிக்காட்டு ராஜாவாக இருந்துவிட முடியாது என்பதற்கு உலக வரலாறு பல ஆதாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

அண்மையில் கூட பொதுநலவாய நாடுகளின் ஒன்றியத்திலிருந்து இலங்கையை இடைநிறுத்துவதற்கு இதுவே பொருத்தமான தருணம் என 2010-2011 காலப் பகுதியில் பொதுநலவாயத்தின் மாண்புமிக்கோர் குழு உறுப்பினராகவிருந்த கரிபியன் முன்னாள் இராஜதந்திரிகளில் ஒருவரான சேர் ரொனால்ட் சண்டர் கருத்து வெளியிட்டிருந்தார்.

நீதித் துறைக்கு ஏற்பட்டுள்ள இந்த கவலைக்கிடமான நிலையானது நாட்டின் ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டிருப்பது சாதாரண குடிமகனும் உணர்ந்துகொள்ளக் கூடிய விடயமாகும்.

இத்தகைய தருணத்தில் சட்டத்தரணிகள் சங்கம் தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என அறிவித்திருப்பது அரசாங்கத்திற்கு இன்னொரு தலையிடியாகவே தென்பட வாய்ப்புக்களுண்டு. எவ்வளவுதான் நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டிருந்தாலும் நீதித்துறை களங்கப்படாமல் இருப்பது ஒரு ஜனநாயக நாட்டின் அதிமுக்கிய பண்பாகக் கருதப்படுகிறது.

ஆனால் அந்த நிலைமை எமது நாட்டில் தற்போது தடம்புரண்டு போயிருக்கிறது. எனவே இத்தகைய ஆட்சியே இனியும் இங்கு தொடருமானால் சர்வாதிகார முத்திரை பகிரங்கமாக மக்களினாலேயே குத்தப்பட்டு வெகுஜனப்போராட்டம் வெடித்துவிடுமோ என்கின்ற அச்சம் வெகுவாகத் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது.

எனவே அரசாங்கம் தனது அடுத்தகட்ட நகர்வுகளை நிதானித்துச் செய்யவேண்டியதொரு கட்டாயத்திற்கு விரும்பியோ விரும்பாமலோ தள்ளப்பட்டிருக்கிறது. நீதித் துறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் களங்கம் மற்றும் நம்பிக்கையீனங்கள் என்பவைகளைக் களைந்து தேசத்தின் அமைதியையும் நல்லாட்சியையும் உறுதிப்படுத்தவேண்டியது ஜனாதிபதியின் முக்கிய பொறுப்பாகும்.

|| || ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 14 – 28.01.2013

# அதிகரித்துவரும் பாலியல் குற்றங்கள்

இன்று உலகளாவிய ரீதியில் ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் மாபெரும் சவாலாக மாறியிருப்பது பாலியல் குற்றங்களாகும். இந்தக் குற்றச் செயலானது சிறுவர் தொடங்கி பெரியோர் வரை அனைவரையும் ஆட்டிப் படைக்கும் ஒன்றாக இன்று மாறியிருக்கிறது.

இந்நிலைமையானது எமது நாடான இலங்கையையும் விட்டுவைத்துவிடவில்லை. தற்போதெல்லாம் நாட்டில் எங்காவது ஒரு நாளைக்கு பாலியல் குற்றம் தொடர்பான செய்தியை கேட்காமலிருக்க முடிவதில்லை. சில செய்திகள் சாதாரண மனிதனால் சிந்தித்தே பார்க்க முடியாதளவுக்கு காணப்படுகின்றன.

இத்தகைய குற்றங்கள் அடுக்கடுக்காக அரங்கேறிக்கொண்டிருந்தும் அவற்றைக் குறைத்தல் மற்றும் தடுத்து நிறுத்தல் தொடர்பான ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்கள் எதுவும் இன்னும் இலங்கையில் முன்னெடுக்கப் படாமலிருப்பது வேதனையளிப்பதோடு எதிர்காலம் குறித்த அச்சத்தினையும் அதிகப்படியாக உண்டுபண்ணுகிறது.

குற்றச் செயல்களிலிருந்து வழிப்படுத்தக் கூடிய, மனிதனுக்கு நேர்வழி காட்டக்கூடிய பாடசாலைகள் மற்றும் சமயத் தளங்கள் என்பவைகளில் கூட இத்தகைய குற்றங்கள் அரங்கேறும் செய்திகள் சாதாரணமாக இன்று காற்றோடு கலந்துவிடுகின்றன. இந்த நிலைமை ஒட்டுமொத்த மானுட அமைதிக்கும் பாரிய அச்சுறுத்தல் என்றே கருத வேண்டியிருக்கிறது.

இன்று பாடசாலைகளில் பாலியல் ரீதியிலான அச்சுறுத்தல்கள் கற்பிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களினால் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

இத்தகைய குற்றங்களைக் களைவதற்கான வழிகாட்டல் அரங்கேறவேண்டிய தளத்திலேயே அவை இடம்பெறுமானால் எதிர்கால சந்ததிகளின் நிலை என்னாவது என்பது குறித்து நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவசியம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய மிலேசத் தனங்கள் குறித்து வேண்டுமென்றே மூடிமறைக்கப்படுவதோடு அவை பாரிய குற்றமல்ல எனச் சமூகத்திலுள்ளவர்களால் பராமுகமாக விடப்பட்டும் விடுகின்றன. இத்தகைய நிலைமைகள்தான் இக்குற்றச் செயல்கள் மென்மேலும் பெருக வாய்ப்பாய் அமைந்து விடுகின்றன.

சில பெற்றோர்கள் இத்தகைய நிகழ்வுகள் குறித்து பிள்ளைகள் தெரியப்படுத்தும் தருணங்களில் அதற்கு எதிராக நடவடிக்கை ஏதும் மேற்கொண்டால் அது தம் பிள்ளையின் கல்வியில் தாக்கம் செலுத்தும் என்கின்ற அசட்டுத்தனமான அச்சத்துடன் கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். ஆனால் இதன் விளைவு பாரியளவிலான விபரீதத்தினை எதிர்காலத்தில் ஏற்படுத்தவல்லது என்பதனை அவர்கள் சிந்திக்கத் தவறுவதே இதற்கான காரணமாகும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டிப்பதற்கும் அவற்றிலிருந்து சமூகத்தைக் காப்பதற்கும் நாட்டின் ஒவ்வொரு பிரஜை தொடங்கி அரசாங்கம் வரையில் ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தாக வேண்டும்.

குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதோடு நவீன ஊடகப் பிரயோகம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனியும் பராமுகமாக இருந்து காமக் கயவர்களின் இச்சைகளுக்கு எமது பிஞ்சுகளைப் பழி கொடுப்பதிலிருந்தும் இத்தகைய விடயங்களைத் தூண்டும் காரணிகளிலிருந்தும் காக்கவல்ல விடயங்கள் குறித்து சிந்தித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 15 – 11.02.2013

# பெருகிவரும் தனிமனிதப் பொருளாதார நெருக்கடிகள்

இன்று எமது நாட்டில் அரசாங்கம் பல்வேறு சர்வதேசத் தலையிடிகளுக்கு முகம்கொடுத்து வருவதனைப் போலவே சாதாரண குடிமக்களும் சொல்லொண்ணா இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இலங்கையில் ஆங்காங்கே நடைபெறுகின்ற சம்பவங்கள் எம்மை சில சமயம் அதிரவும், கட்டாயம் காரணத்தைக் கண்டறியவும் தூண்டிக்கொண்டிருக்கின்றன. ஏனெனில் வழமைக்கு மாற்றமான, இப்படியெல்லாம் சிந்திக்க முடியுமா என்பதைப் போன்றதான செயற்பாடுகள் குடிமக்கள் மத்தியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றன.

எல்லா விடயங்களையும் பட்டியற்படுத்தினால் அவற்றில் 90 சதவிகிதமான பிரச்சினைகள் பொருளாதாரம் சார்ந்ததாகவே இருக்கின்றன. எவ்வளவுதான் பொருளாதார வளர்ச்சியென்று அரசாங்கம் புள்ளி விபரங்களைக் காட்டினாலும் தனி மனித வாழ்வியலில் அத்தைகய செல்வாக்கினைக் காணமுடியாதுள்ளது. மாறாக நாட்டில் ஆங்காங்கே நடைபெறுகின்ற சம்பவங்கள் யாவும் அந்தப் புள்ளி விபரங்களைப் பொய்மைப்படுத்திக்கொண்டே இருக்கின்றன.

யுத்தத்தினால் நாடு எதிர்கொண்ட உயிரிழப்புக்கள், நிம்மதியின்மை, அச்சுறுத்தல்கள் என்பவைகளைப் போல பிரதான பிரச்சினையாக பொருளாதார இழப்புக்களும் யுத்தச் செலவீனங்களும் காணப்பட்டன. ஆனால் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பல வருடங்கள் கழிந்த நிலையிலும் யுத்த செலவீனங்கள் குறைந்ததாகவோ அல்லது யுத்தத்திற்காக இழந்த பெருமளவிலான பொருளாதாரம் மக்களின் மேம்பாட்டில் பயன்பட்டதாகவோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் வகுப்பறைக்கு நிறம் பூசுவதற்கு அரச பாடசாலை மாணவர்களிடம் பணம் அறவிடுகின்றன. அதற்காக பண வசதியில்லாத மாணவி திருட்டில் ஈடுபட, பொலிஸால் கைது செய்யட்டு பெருந்தொகைத் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் காசோலையை விடுவிப்பதற்காக தரகுப் பணம் பெற்றுக் கொள்கிறார். வங்கிக் கடனைச் செலுத்துவதற்காக இராணுவக் கப்டன் ஒருத்தர் முஸ்லிம் பெண் போன்று வேடமிட்டு வங்கியைக் கொள்ளையிட முற்படுகிறார்.

இந்தச் சம்பவங்களே போதும், எமது நாட்டின் தனி மனித பொருளாதாரப் பிரச்சினையை அளவிடுவதற்கு. ஆனால் இந்த விடயங்களுக்கு நிகராக அல்லது அதையும் தாண்டி நாட்டில் ஊழல் தலைதூக்கியுள்ளது. அரச மட்டம் தொடங்கி தனியார் மட்டம் வரையிலும் ஊழல் மலிந்து கிடக்கிறது.

ஓரிடத்தில் விடப்படுகின்ற பாரிய தவறுகள் இன்னோர் இடத்தில் தாக்கம் செலுத்துவதாய் இந்த விடயங்களை நோக்க முடிகிறது. பொருளாதாரம் ஓரிடத்தில் தேங்கி நிற்கும் போது இன்னோரிடத்தில் நெருக்கடி வருவது யாவரும் அறிந்ததே. இதனை அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தவேண்டிய தேவையில்லை. ஆனால் இத்தகைய ஊழல் அதிகரிப்பு குறித்தும் தனிமனித பொருளாதார நெருக்கடி குறித்தும் அதனால் அதிகரித்துக் கொண்டிருக்கும் குற்றச் செயல்கள் குறித்தும் அரசாங்கம் அவ்வளவாக அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை.

நாட்டுக்குத் தற்போதுள்ள சர்வதேசத் தலையிடிக்கு மத்தியில் இந்தப் பிரச்சினைகள் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது என அரசாங்கம் கருதலாம். ஆனால் அந்தச் சர்வதேச அழுத்தங்களின் எதிர் வினையெல்லாம் நாட்டு மக்களின் பொருளாதார நெருக்கடிகளைச் செறிவுப் படுத்தியே பிரயோகமாகும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே வெளிநாடுகளைத் திருப்திப்படுத்த எடுக்கின்ற முன்னெடுப்புக்களை விடவும் அதிகமாக நாட்டு மக்கள் எதிர்கொள்ளுகின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வு குறித்து அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 16 – 20.02.2013

# முஸ்லிம்கள் மீதான அழுத்தங்கள் தேசத்தின் அமைதிக்கு ஆபத்தானவை

இலங்கையின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு சமீப காலமாக முஸ்லிம்கள் மீதான பேரினவாதிகளின் அழுத்தங்கள் தலைதூக்கியுள்ளன. பொதுபல சேனா எனும் பௌத்த அடிப்படைவாத அமைப்பே இந்த விடயத்தை ஆரம்பித்து வைத்தது. அதைத் தொடர்ந்து இன்று ஒவ்வொரு பௌத்தரையும் மூளைச் சலவை செய்வதான போராட்டங்களும் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்திலேயே முஸ்லிம்களின் மதஸ்த்தளங்கள் குறி வைக்கப்பட்டு அவர்களது செயற்பாடுகள் ஆரம்பமான போது அங்கு விஜயம் செய்து ஊடகங்களில் விளம்பரம் தேடியதைத் தவிர அது குறித்து அரசாங்கத்திடம் பேசி உறுதியான தீர்வினைப் பெற முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் தவறியிருந்தன. அதன் விளைவுதான் இன்று முஸ்லிம் பெண்களின் ஆடை அமைப்பு வரையிலும் அவர்களைப் பேச வைத்திருக்கிறது.

நிலைமை இவ்வளவாக உக்கிரமடைந்த நிலையிலும் இவ்விடயத்தில் தீர்க்கமான தீர்வினைக் காண்பதற்கான அரசியல் முன்னெடுப்புக்கள் ஆக்கபூர்வமானதாக அமைந்திருக்கவில்லை என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இந்த விடயத்தில் அக்கறை காட்டி முஸ்லிம்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மற்ற இனத்தவர்களே சலித்துக்கொள்ளும் படியாகத்தான் முஸ்லிம் அரசியல் தலைமைகள் நடந்துகொள்கிறார்கள். அண்மையில் ஜனாதிபதியுடனான சந்திப்பொன்றில் அவரால் முன்வைக்கப்பட்ட சந்தேகங்களுக்கு போதியளவு தெளிவை வழங்க முடியாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான தைரியமுமின்றி முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் சிலர் சொல்வதற்குத் தலையாட்டி வந்திருப்பதாக அறிய முடிகிறது.

இவர்களால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை எதிர்த்து எதுவும் பேச முடியாத கையாலாகாத் தனத்தை தம்வசம் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதனால் ஜனாதிபதியோ அல்லது அரச அமைச்சர்களோ வினவுகின்ற கேள்விகளுக்கோ அல்லது கருத்துக்களுக்கோ இவர்களால் உரிய விடையையோ விளக்கங்களையோ வழங்க முடிவதில்லை.

இவ்விடயத்தில் ஜனாதிபதி எத்தகைய மனநிலையில் இருக்கிறார் என்பதை அவருடனான அண்மைய சந்திப்பில் அவர் குறிப்பிட்டதாக இணையத்தளங்கள் வெளியிட்டிருந்த கருத்துக்களிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

எனவே முஸ்லிம்கள் மீதான இந்த அழுத்தங்களிலிருந்து அவர்களைக்காக்க “முஸ்லிம்கள் என்னை நம்பலாம்” என்கின்ற தேர்தல் உத்தரவாதங்களை மட்டும் வைத்துக்கொண்டு காத்திருக்க முடியாது. இவ்விடயத்திற்குத் தீர்வு காண்பதற்கு பல்வேறுபட்ட திட்டமிட்ட முன்னெடுப்புக்களை முஸ்லிம்களுக்குச் சாதகமாய்க் குரல் கொடுக்கும் பிற அரசியல் தலைவர்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

இங்கு மீண்டுமொரு இனவாத யுத்தம் வெடிக்க யாரும் இடமளித்துவிடக்கூடாது. எவ்வாறான அணுகுமுறையினால் தேசத்தின் அமைதி கெடாதவாறு முஸ்லிம்கள் மீது அடிப்படைப் பேரினவாதிகளால் உருவாக்கப்படுகின்ற அழுத்தங்களையும் அவர்களுக்கு ஆதரவாய் செயற்படுகின்ற அரசியல் பலத்தையும் வலிமையிழக்கச் செய்யமுடியுமோ அதற்கேற்றாற் போல நிகழ்ச்சி நிரலை அமைத்து செயற்படவேண்டும்.

அன்றேல் மீண்டுமொரு இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு அதில் இனச்சுத்திகரிப்பொன்றையோ ஒடுக்கு முறையொன்றையோ மேற்கொண்டு தனிக்காட்டு ராஜாக்களாவதற்கும் அடிமைத்தன அரசியலை அறிமுகம் செய்வதற்கும் நிறையப்பேர் காத்துக்கிடக்கிறார்கள். யாரும் இதனை மறந்துவிடக்கூடாது.

II II II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் 17 – 06.03.2013

# விமர்சனத்திற்குள்ளாகியிருக்கும் கூட்டமைப்பினரின் ஜெனீவா பயணம்

ஜெனீவா கூட்டத்தொடர் சிறுபான்மையினருக்கு தீர்வைத் தருமா? நாட்டிலுள்ள அரசியல் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுமா? என்பதெல்லாம் விடை தெரியா வினாக்கள். ஆனால் இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவா சென்றிருக்கின்றமை அரச தரப்பிற்குத் தாங்கவொண்ணா ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவா சென்றிருக்கவில்லை. இது எங்கள் நாடு, எமது பிரச்சினைகளை எமக்குள்ளே தீர்க்கலாம் என்கின்ற நம்பிக்கையுடன் சர்வதேசத்தின் மத்தியில் தன் நாட்டைக் காட்டிக்கொடுக்காமல் காத்திருந்தனர்.

கடந்த கூட்டத் தொடரிலும் இலங்கைக்கெதிரான பிரேரணையை அமெரிக்கா கொண்டு வந்தது. அதிலிருந்து அடுத்த கூட்டத் தொடருக்கான காலப்பகுதி வரையிலும் தமிழ் மக்களுக்கான தீர்க்கமான எந்தத் தீர்வு குறித்தும் அரசாங்கம் சிறியதான முன்னெடுப்பினைக் கூட மேற்கொண்டதாகத் தெரியவில்லை என்கின்ற குற்றச்சாட்டுடன் இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவா சென்றுள்ளது.

கூட்டமைப்பினரின் ஜெனீவா பயணமானது ஏதோ நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்காய் சென்றது போல அரசாங்கத்தரப்பினர் விமர்சித்து வருகின்றனர். தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து கூட்டமைப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவில்லை என தமிழர்களும் புலம் பெயர்ந்தவர்களும் அங்கலாய்த்துக் கொண்டிருக்க இதனையும் அவர்கள் செய்யாதுவிட்டால் தம் மக்களுக்கு துரோகம் செய்பவர்களாகிவிடுவார்கள் என்கின்ற அவர்களது கணிப்பு மிகச் சரியானதே. எத்தனைக்குத்தான் நாட்டைக்காட்டிக்கொடுக்கக் கூடாது என்கின்ற போர்வையில் மிதிபட்டுக்கிடப்பது. அநீதிகளைக் கண்டு அதட்டுவதும் அதற்கான தீர்வு குறித்துப் பேசுவதும் அது கிடைக்காதவிடத்து உரியவர்களைக் கொண்டு தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதுமே மானுட நீதி. மாறாக அநீதியைச் செய்வோர் வீட்டுக்காரானா? நாட்டுக்காரனா? மாமாவா? மச்சானா? என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

உண்மையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்களாகவோ அல்லது குழப்பத்தை ஏற்படுத்த விரும்புவர்களாகவோ இருந்திருந்தால் கடந்த ஜெனீவா கூட்டத் தொடருக்கு முஸ்லிம்களின் சார்பாக உண்மைகளை மூடி மறைக்க சுற்றுலா சென்ற கூட்டத்தோடு சேர்ந்து இவர்களும் உண்மைகளை உரக்கச் சொல்லச் சென்றிருப்பார்கள். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறு செய்யவில்லை. பொறுமையாகவிருந்தார்கள். அரசாங்கத்திற்கு அவகாசம் கொடுத்தார்கள். எதுவுமே நடந்தபாடில்லை என்ற நிலையில்தான் அவர்கள் இம்முறை ஜெனீவா சென்றிருக்கிறார்கள். இதனை எந்த வகையிலும் விமர்சிக்க முடியாது.

“குட்டக் குட்டக் குணிபவனும் மடையன், குட்டிக்கொண்டே இருப்பவனும் மடையன்” என்றொரு பழமொழியிருக்கிறது. நாங்கள் மடையனாக இருக்கமாட்டோம் என்று கூட்டமைப்பினர் தெரிவிப்பதைத்தான் இந்தப் பயணம் எமக்குச் சொல்லித்தருகிறது. மறுமுனையில் அரசாங்கம் எவ்வாறிருக்கப்போகிறது என்கின்ற வினாவும் மறைந்து கிடக்கிறது.

எங்குதான் சென்றாலும், யார் பிரேரணை கொண்டு வந்தாலும், யார் ஆதரவளித்தாலும், எதிர்த்தாலும் அவற்றையெல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் பொருட் படுத்தவில்லை. அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் சிறுபான்மையினராகிய நாங்கள் எமது நாட்டில் சம உரிமைகளோடு சுதந்திரமாய், நிம்மதியாய் வாழவேண்டும் என்பதைத்தான்.

II II II

252649



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11594

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் எழுத்துப் பயணத்தின் போதான சில பதிவுகள்



கவிப்பேரரசு
வைரமுத்துவுடன்



கவிஞர்
மு.மேத்தாவுடன்



சந்த்ராயன் விஞ்ஞானி
மயில்சாமி அண்ணாதுரையுடன்



உயர்கல்வி அமைச்சர்
எஸ்.பி.திசாநாயக்காவுடன்



அமைச்சர்
பஷீர் சேகுதாவுதுடன்



பாராளுமன்ற உறுப்பினர்
சுரேஷ் பிரேமசந்த்ரனுடன்



கி.மா. முதலமைச்சர்
நஜீப் ஏ.மஜீதுடன்



மத்திய வங்கி ஆளுனர்
அஜித் நிவாட் கப்ராலுடன்



பத்திரிகைக் கட்டளைச்
சட்டத்தின் கீழ் நீதிமன்ற
அங்கீகாரம் கிடைத்தபோது

RAAPA INTERNATIONAL
P.O.Box: 21, Dehiwala, Sri Lanka.
Tel: +94 774328525, +94 772305760
E-mail: raapa.arooz@gmail.com
Web: www.kizhakku.lk

ISBN 9789555229968
9 789555 229968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org